விலை ரூபா 20.00


எதிரிகளை விட்டு வைக்காதீர்
பக்கம் 09


இடம்மாற்றினால் தீக்குளிப்பேன்
பக்கம் 11


சர்வதேசத்தில் ஒலிக்கிறது தமிழர் பிரச்சினை
பக்கம் 13


இன்று வழமைபோல் பஸ் சேவை
பக்கம் 20

www.onlineuthayan.com

பக்கங்கள்: 32

# உதயன்

சுடர் 27
கதிர் 112

வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 04 சனிக்கிழமை (17/03/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

### விமானப் பயணி சாவு

சவூதி அரேபியாவிலிருந்து இந்தோனேஷியாவுக்குச் சென்று கொண்டிருந்த விமானத்திலிருந்த பெண்ணொருவர் திடீர் சுகவீனத்திற்குள்ளாகி நீர் கொழும்பு வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட போது உயிரிழந்துள்ளார். 60 வயதான சல்மா பேடன் ஜுரி என்பவரே உயிரிழந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

### இந்தியக் குழு வருகிறது

இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் தொடர்பாக இந்திய மத்திய அரசுக்கு தமிழகத்தின் அழுத்தங்கள் அதிகரித்துவரும் நிலையில் இந்திய நாடாளுமன்றத் தூதுக்குழுவொன்று இலங்கைக்கு வரவுள்ளது. கொழும்பிலுள்ள இந்தியத் தூதரக வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன. இந்தக் குழுவினர் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசவுள்ளனர் எனவும் தெரியவருகிறது.

### இராணுவத் தளபதி விளக்கம்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இராணுவத்தினரின் தாக்குதல்களின் போது கொல்லப்பட்ட நிலையில் சடலமாகவே மீட்கப்பட்டார் என்று இராணுவத் தளபதி தெரிவித்தார். 'சனல்- 4' ஆவணப் படத்தில் காட்டப்பட்டது போல் பிரபாகரன் படுகொலை செய்யப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

### கோத்தபாய மறுப்பு

'தண்டிக்கப்படாத போர்க் குற்றங்கள்' என்ற பெயரில் 'சனல்-4' தொலைக்காட்சி நிறுவனம் வெளியிட்ட ஆவணப் படம் போலியானது என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இந்தக் காணொலியானது இலங்கை அரசிற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்கில், திட்டமிட்ட முறையிலேயே வெளியிடப்பட்டுள்ளது என்றார் அவர். இதனுடைய போலித் தன்மையினை நிரூபிக்கும் நோக்கில் பாதுகாப்பு அமைச்சு சில ஆவணப்படங்கள் மற்றும் புகைப்படங்களையும் வெளியிட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

### ரூபாய் மேலும் சரிவு

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் மதிப்பு வரலாறு காணாத அளவுக்கு சரிந்துள்ளது. நேற்று வெள்ளிக்கிழமை டொலர் ஒன்றுக்கு எதிராக ரூபாவின் பெறுமதி 125.30 ஆக வீழ்ந்தது. கடந்த வாரம் 123.40 என்ற நிலையே இது வரை ரூபாவின் மிகப் பெரிய வீழ்ச்சியாக இருந்தது. இந்த மாத முடிவுக்குள் நிலைமை சீராகி ரூபாவின் பெறுமதி அதிகரிக்கும் என்று மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

# ஆட்சி மாறினால் மட்டுமே விசாரணைகள் சாத்தியம்

## ஐ.நாவின் முன்னாள் உதவிச் செயலர் கருத்து



லண்டன், மார்ச் 17

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டால்தான் போர்க்காலத்தில் இடம் பெற்ற குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் விவகாரங்களில் பொறுப்புக் கூறுவது குறித்த பிரச்சினையில் முன்னேற்றம் காணமுடியும் என்று மனிதாபிமான விவகாரங்களுக்கான முன்னாள் ஐ.நா. உதவிச் செயலர் ஜோன் ஹோம்ஸ் தெரிவித்துள்ளார்.

பி.பி.சிக்கு அளித்துள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பாக அனைத்துலக சமூகமும் ஐ.நாவும் இன்னும் அதிகமாகப் பணியாற்ற வேண்டும் என்ற எழும் கருத்துக்கள் தொடர்பாக எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர், இதைவிட அதிகமாக என்ன செய்ய முடியும் என்று கூறுவது தற்போதைக்கு கடினமாக இருக்கிறது.

ஐ.நா. பொதுச்செயலர் நியமித்த நிபுணர் குழுதனது அறிக்கையை சமர்ப்பித்து விட்டது. அது வெளிப்படையாக பொதுமக்கள் பாவனையில் இருக்கிறது. இப்போது மேலதிகமாக ஏதாவது செய்ய வேண்டும் என் 23

## இலங்கையின் கொள்கை அமைதிக்கு அச்சுறுத்தல்

### சர்வதேச நெருக்கடிகள் குழு குற்றச்சாட்டு

லண்டன்,மார்ச் 17

போரின் பின்னர் இலங்கை அரசு கடைப் பிடித்து வரும் கொள்கை நாட்டின் அமைதிக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என்று சர்வதேச மனித உரிமைக் குழுக்கள் குற்றஞ்சாட்டி உள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் அளவுக்கதிகமாக இராணுவ மயப்படுத்தப்பட்டிருப்பது மற்றும் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு எதிராகக் காண்பிக்கப்படும் பாகுபாடுகள் என்பன இலங்கையின் எதிர்கால அமைதியை 23

## போரை எதிர்கொள்வதற்கு இலங்கை வெளி ஆதரவை நாடியதே இல்லை

### இப்போது இப்படிச் சொல்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, மார்ச் 17

பயங்கரவாதத்துக்கு எதிரான தனது போர் நடவடிக்கையில் வெளிநாடுகளின் ஆலோசனையை ஒரு போதும் பெறவில்லை என்றும் போரை முடிவுக்குக் கொண்டுவர வெளிநாட்டுப் படைகளை இங்கு தருவிக்கவோ அவற்றின் உதவியைப் பெறவோ இல்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற ஒரு நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அதேபோன்று நாட்டில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு வெளிநாடுகளின் ஆலோசனைகள் தேவையில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

''இந்த நாட்டில் நல்லிணக்கம், மீள்கட்டுமானம் மற்றும் மனிதாபிமான உதவிகளுக்களை மேற்கொள்வதற்கோ மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கோ வெளிநாடுகளின் தலையீடோ ஆலோசனையோ எமக்குத் தேவையில்லை.''

அனைத்து இலங்கையர்களும் அவர்கள் வடக்கு, தெற்கு ,கிழக்கு ,மேற்கு எந்தப் பகுதிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் ஜெனிவாவில் ஏற்படுத்தப்பட்டதைப்போன்ற சூழ்நிலைக்கு எதிராக எழ வேண்டும். நாட்டை பாதுகாப்பதற்கு 23

## யாழ். ஆஸ்பத்திரி நோயாளருக்கே வேலை நிறுத்தத்தால் அதிக பாதிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 17

காலவரையறையின்றி இடம்பெற்றுவரும் மருத்துவ உதவியாளர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்தினால் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களுக்கே அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட நிறைவு காண் மருத்துவவியல் தொழில் வல்லுநர்கள் ஒன்றியத்தின் தலைவர் என்.ஜெயபாஸ்கரன் தெரிவித்தார். அத்துடன் வைத்தியசாலை விடுதிகளில் சேகரித்து வைக்கப்பட்ட மருந்து வகைகள் முடிவடைந்து வருவதாகவும் அவர் கூறினார்.இந்தப் போராட்டம் இன்னும் இரண்டொரு தினங்கள் தொடர்ந்தால் நிலைமை மிகவும் மோசமடையும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

நாடு முழுவதும் கடந்த நான்கு நாள்களாகத் தொடர்ந்து வரும் வைத்தியசாலை மருந்தாளர்கள், ஆய்வுகூட உத்தியோகத்தர்கள், எக்ஸ்ரே 23

## தமிழக அழுத்தங்கள் தாக்கத்தை ஏற்படுத்தா

### டில்லி சிறந்த முடிவெடுக்கும்: காரியவசம்

கொழும்பு, மார்ச் 17

ஜெனிவாவில் இலங்கைக்கெதிராக அமெரிக்கா முன்வைத்துள்ள பிரேரணை தொடர்பிலான இந்தியாவின் தீர்மானம் சரியான நேரத்தில் சரியான வகையில் எடுக்கப்படுமென இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் நேற்று தெரிவித்திருக்கிறார்.

ஜெனிவா மாநாட்டில் இலங்கை தொடர்பில் அமெரிக்கா 23

SINGER கிச்சன் சவாரி
சிங்கரில் சமையல் உபகரணங்கள் கொள்வனவு செய்யும் உங்களுக்கு
இலவசமாக
3 தினங்கள் மலேசியாவில் தங்கியிருப்பதற்கும் சென்று வருவதற்கும்
5 விமானச் சீட்டுக்கள் அல்லது 42" LCD TV கள் வீதம்
வெற்றிகொள்ளுங்கள்
ஒவ்வொரு ரூபா.2500 கொள்வனவிற்கும் சீட்டிழுப்பிற்கான கூப்பன் ஒன்று
மாதம் 100 பரிசுகள் வீதம் 300 பரிசுகள் மே15 வரை மட்டுமே. (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5408
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4389
சங்கானை 077 2208232
சுன்னாகம். 021 224 0555
நெல்லியடி. 021 226 4937
கிளிநொச்சி 021 567 5677
மானிப்பாய். 021 225 5343
சாவகச்சேரி 021 227 0197
சிங்கர் – யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்.

# சிறுமியை கொன்ற நபருக்கு அதிஉயர் தண்டனை தாருங்கள்

## நீதிமன்றில் பெற்றோர் உருக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 17
நெடுந்தீவில் 13 வயதுச் சிறுமியைப் படுகொலை செய்த குற்றவாளிக்கு அதி உயர் தண்டனை வழங்கும்படி நேற்று நீதிமன்றில் வலியுறுத்தினர் சிறுமியின் பெற்றோர்.

நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வன்புணர்வின் பின்னர் கொலை செய்யப்பட்ட சிறுமியின் தாய், தந்தை மற்றும் சடலத்தை முதற்கண்ட சாட்சி ஆகிய மூன்று பேரினதும் சாட்சியங்கள் நேற்றுப் பதிவு செய்யப்பட்டன.

சாட்சியமளித்த பின்னர் மேலதிகமாக என்ன கூற விரும்புகிறீர்கள் என்று மன்றில் பெற்றோரிடம் கேட்ட போது, குற்றவாளிக்கு அதிகபட்சதண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று கூறினர்.

> “வன்புணர்வின் பின்னர் கொலை செய்யப்பட்ட சிறுமியின் தாய், தந்தை மற்றும் சடலத்தை முதற்கண்ட சாட்சி ஆகிய மூன்று பேரினதும் சாட்சியங்கள் நேற்றுப் பதிவு செய்யப்பட்டன.”

நெடுந்தீவைச் சேர்ந்த 13 வயதுடைய ஜேசுதாசன் லக்சினி கடந்த 3ஆம் திகதி கொடூரமான பாலியல் வன்புணர்வின் பின்னர் கல்லால் குத்தி தலை சிதைக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

இந்தப் படுபாதகச் செயலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஈ.பி.டி.பியின் முன்னாள் உறுப்பினர் என்று கூறப்படும் கந்தசாமி ஜெகதீஸ்வரன் (வயது 31) என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விளக்க மறியலில் வைக்கப்பட்ட சந்தேக நபர் நேற்று மன்றில் முற்படுத்தப்பட்டு விசாரணை நடைபெற்றது.

அதன்போதே சந்தேக நபரின் இரத்த மாதிரியைப் பெற்று கொழும்பு சிரேஷ்ட சட்ட வைத்திய அதிகாரி பணிமனைக்கு அனுப்ப உத்தரவிடப்பட்டது. சிறுமியின் ரத்தம் தோய்ந்த ஆடைகள் சான்றுப் பொருளாக எடுக்கப்பட்டிருந்தன. சடலம் காணப்பட்ட இடத்தில் நிலத்திலும் சிறுமியின் உடலிலும் இருந்த ஒருவகைத் திரவமும் சான்றுப் பொருளாக எடுக்கப்பட்டிருந்தன. அது சந்தேகநபரின் விந்தாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

சிறுமியின் மேற்சட்டையின் உள்ளும் புறமுமாக காணப்பட்ட இவ்விரண்டு முடிகள் மீட்கப்பட்டன. சடலத்துக்கு அருகேயிருந்து மீட்கப்பட்ட 250 மில்லி லீற்றர் மதுப்போத்தலில் பதிவாகியிருந்த கைவிரல் அடையாளத்தையும் பதிவு செய்ய உத்தரவிடப்பட்டது.

சடலத்தின் ஒரு கையில் பற்கள் பதிந்த அடையாளம் காணப்பட்டது. அந்தத் தசைப் பகுதி வெட்டியெடுக்கப்பட்டிருந்தன. அது சந்தேக நபருடைய பல் அடையாளமா என்று ஆராய சந்தேக நபரின் பல் அமைப்பைப் பரிசோதனை செய்யவும் மன்று உத்தரவிட்டுள்ளது. விசாரணைகள் நிறைவடைந்த பின்னர் சந்தேக நபரை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (உ-4)

*(மற்றொரு செய்தி 18 ஆம் பக்கத்தில்)*

## யாழ்ப்பாணத்தில் ரணில்



யாழ்ப்பாணம், மார்ச் 17
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சிப் பிரமுகர்களும் நேற்று மாலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

இந்தக் குழுவில் எதிர்க் கட்சித் தலைவருடன் கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான டாக்டர் சயலத் ஜயவர்த்தன, ரவி கருணாநாயக்க, ஜாகல ரட்னாயக்க, சுவாமிநாதன் மற்றும் ஊவா மாகாண சபை உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.வேலாயுதம் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

ரணில் தலைமையிலான குழுவினர் இன்று பல்வேறு இடங்களுக்கும் நேரில் சென்று நிலைமைகளை அவதானிப்பர் என்றும் அந்தந்தப் பகுதி மக்களின் பிரச்சினைகள் குறித்தும் அவர்கள் கேட்டறிந்து கொள்வர் என்றும் தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் கூட்டு எதிர்க்கட்சிகளின் தினத்தை நடத்துவது குறித்ததும் அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கலந்துரையாட உள்ளனர். (ஒ-02)

## ஜெனிவாவில் சனல்-4 காணொலி

ஜெனிவா, மார்ச் 17
ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஐ.நா. மனிதஉரிமைகள் சபையில் வாக்கெடுப்புக்கு விடப்படுவதற்கு முன்னர் சனல்-4 வெளியிட்ட புதிய காணொலி திரையிடப்படவுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் பக்க நிகழ்வில், இலங்கையின் கொலைக் களங்கள் - தண்டிக்கப்படாத போர்க்குற்றங்கள் என்ற இந்தக் காணொலியைத் திரையிட ஏற்பாடுகள் நடந்து வருவதாகத் தெரியவருகிறது.

பெரும்பாலும் எதிர்வரும் 19ஆம் திகதி இந்தக் காணொலி ஜெனிவாவில் திரையிடப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை இலங்கை அரசும் சனல் 4 காணொலியை முறியடிக்கும் வகையிலானமற்றொருகாணொலியை அதே நாளில் திரையிடும் முயற்சியில் இறங்கியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (த)

### 68 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட

## கைதடி அரச சிறுவர் இல்லம் மீண்டும் நேற்றுத் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 17
கைதடியில் உள்ள அரச சிறுவர் இல்லம் 68 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

அங்குள்ள குழந்தைகளைப் பராமரிப்பதற்குத் தேவையான அளவு பராமரிப்புத் தாய்மார்கள் இன்னும் நியமிக்கப்படவில்லை. எனினும் ஒரு வாரத்தினுள் அவர்கள் நியமிக்கப்பட்டு விடுவார்கள் என்று வடமாகாண நன்னடத்தைச் சிறுவர் பராமரிப்புத் திணைக்கள ஆணையாளர் ரி.விஸ்வரூபன் தெரிவித்தார்.

இந்த அரசசிறுவர் இல்லம் உரிய வசதிகளுடன் - முறையாக - இயங்கவில்லை என்று தெரியவந்ததை அடுத்து அங்கிருந்த அனைத்துக் குழந்தைகளும் தற்காலிகமாகக் கோண்டாவிலில் உள்ள சிறுவர் இல்லம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். கடந்த ஒக்ரோபர் மாதமளவில் இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டனர். அதனைத் தொடர்ந்து 68 இலட்சம் ரூபா செலவில் அந்த இல்லத்தைப் புனரமைப்புச் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. அவை நிறைவடைந்ததை அடுத்து நேற்று அந்த இல்லம் திறந்து வைக்கப்பட்டது.

அங்கு 21 குழந்தைகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களைப் பராமரிப்பதற்கென இரண்டு பேர் நிரந்தர நியமனம் பெற்றவர்களாகவும் 5 பேர் தற்காலிக நியமனம் செய்யப்பட்டும் உள்ளனர்.

ஒரு பராமரிப்புத் தாய் மூன்று குழந்தைகளையே பராமரிக்க முடியும். அதன்படி 21 குழந்தைகளுக்கும் 7 பராமரிப்பாளர்கள் தேவை. எட்டு மணித்தியாலங்களுக்கு ஓர் அணியினர் என்ற அடிப்படையில் 24 மணித்தியாலத்துக்கும் 21 பராமரிப்பாளர்கள் தேவை. பற்றாக்குறையாகவுள்ள எண்ணிக்கை ஒரு வாரத்தில் பூர்த்தி செய்யப்பட்டுவிடும்.

அதேசமயம் இங்கு பராமரிக்கப்படும் குழந்தைகளை இயன்றளவு விரைவில் தத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளோம். குழந்தைகளுக்கும் நன்மை பயப்பதாக அது அமைவதோடு பராமரிப்பாளர் பிரச்சினையையும் இதன் மூலமாகத் தீர்த்துக் கொள்ள முடியும். தற்போதுள்ள பராமரிப்பாளர்களுக்குப் பராமரிப்புப் பற்றிய பயிற்சிகளும் ஒருகட்டம் வழங்கப்பட்டுள்ளது.

நேற்றைய நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, அவரின் செயலாளர் இ.இளங்கோவன், திணைக்கள ஆணையாளர் ரி.விஸ்வரூபன், யாழ்.போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி எஸ்.சிவரூபன், வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் திருமதி ஆர்.விஜயலட்சுமி மற்றும் மாவட்ட நன்னடத்தை அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஒ-4-5)

### சனல்-4 புதிய ஆவணப்படத்தை அடுத்து

## போர்க்குற்ற விசாரணைக்கு பிரிட்டன் மீள வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 17
சனல் - 4' தொலைக் காட்சியின் புதிய ஆவணப் படம் வெளியாகிய பின்னர், இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக நம்பகமானதும், சுதந்திரமானதுமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும், இலங்கைக்கு எதிரான பிரேரணையை ஐ.நா. மனிதஉரிமைகள் சபை நிறைவேற்ற வேண்டும் என்றும் பிரிட்டன் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

'இலங்கையின் கொலைக் களங்கள் - தண்டிக்கப்படாத போர்க்குற்றங்கள்' ஆவணப் படம் கடந்த புதனன்று இரவு சனல் - 4 தொலைக் காட்சியில் ஒளிபரப்பான பின்னர் பிரிட்டனின் இந்தக் கருத்து நேற்றுமுன்தினம் வெளியாகியுள்ளது.

பொதுநலவாய நாடுகளின் விவகாரங்களுக்குப் பொறுப்பான பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர், அலிஸ்ரெயர் பேர்ட் இதுதொடர்பாகத் தெரிவித்தவை வருமாறு -


போர் முடிவுக்கு வந்தபின்னர், இருதரப்பினராலும் போரின் போது இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பாக நம்பகமானதும் சுதந்திரமானதுமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று சர்வதேச சமூகம் அழைப்பு விடுத்தது.

அந்த விசாரணைகளுக்கான தேவையை சனல் - 4 ஆவணப்படம் மீளவும் வலியுறுத்தியுள்ளது. ஆனால் இதற்கு, கடந்த காலம் குறித்து முழுமையானதும், நேர்மையானதுமான நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன.

நீதி, நல்லிணக்கம் மற்றும் அரசியல் முன்னேற்றங்களை உறுதி செய்யும் இந்த நகர்வுகளில் அனைத்துத் தரப்பினரும் பங்கேற்க வேண்டும்.

இதனால்தான் இலங்கை அரசினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதை ஊக்குவிக்கவும், பொறுப்புக்கூறுதலை உறுதிப்படுத்தவும் அமெரிக்கா கொண்டுவரும் பிரேரணையை ஐ.நா மனித உரிமைகள் பேரவை நிறைவேற்ற வேண்டும் - என்றார் அவர்.

## அவரவர் பிரச்சினை அவரவருக்கு...




## வடமராட்சி கிழக்கில் தொழிலில் ஈடுபட்ட மீனவர்களை வெளியேற உத்தரவு

### திணைக்களப் பணிப்பாளர் ஹெட்டியாராச்சி விடுத்தார்

யாழ்ப்பாணம், மார்ச் 17
வடமராட்சி கிழக்குக் கடலில் அத்துமீறிக் கடற்தொழிலில் ஈடுபட்டுவரும் தென்னிலங்கை மீனவர்களை உடனடியாக வெளியேறுமாறு கடற்தொழில் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ஹெட்டியாராச்சி உத்தரவிட்டுள்ளார்.

யாழ். மாவட்ட கடற்தொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி, கட்டைக்காடு இராணுவ அதிகாரி ஆகியோர் ஊடாகவே தென்பகுதி மீனவர்களை வெளியேறுமாறு பணிப்பாளர் நாயகம் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து உதவிப் பணிப்பாளர் தெரிவித்தவை வருமாறு:

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி கடற்பகுதியில் தென்னிலங்கை மீனவர்கள் 11 பேர் தமது அனுமதியின்றி தொழில் செய்து வருகின்றனர் என்று அந்தப் பகுதி கடற்தொழில் சங்கம் மூலம் அறிய முடிந்தது. அந்த விடயம் தொடர்பாகப் பத்திரிகைகளிலும் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அந்தப் பகுதிக்கு உதவிப் பணிப்பாளர் என்ற ரீதியில் சென்று அங்குள்ள சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி நிலைமைகளை அறிந்தேன். திணைக்களத் தலைமையகப் பணிப்பாளர் நாயகத்துக்கும் இது குறித்துத் தெரியப்படுத்தினேன்.

கிராமிய கடற்தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் அனுமதியின்றி வெளியார் எவரும் தொழில் செய்ய முடியாது. உடனடியாகத் தென்னிலங்கை மீனவர்களை அங்கிருந்து வெளியேற்றுமாறு அவர் எனக்கு உத்தரவிட்டார் - என்றார். (ஒ-03)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# உந்தித் தள்ளப்பட்டுள்ள பிரதான பிரச்சினைக்கான தீர்வு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில், இலங்கைக்கு எதிராக அமெரிக்கா முன்வைத்துள்ள பிரேரணை மீதான வாக்கெடுப்பில் எட்டப்படும் எந்த வகையான முடிவையும் ஏற்றுக்கொள்ள எமது அரசாங்கம் தயாராக உள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையுடன் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. நாங்கள் பேரவையுடன் ஒத்துழைத்துச் செயற்படவே விரும்புகிறோம். ஆயினும் நாட்டுக்கு எதிரான, பாதகமான முயற்சிகள் இடம் பெறும் போது, அவற்றைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. உண்மையைச் சொல்வதானால் ஜெனிவாவில் தவறான விடயங்களே முன்வைக்கப்படுகின்றன.

இவ்வாறு அரசாங்கத்தின் சார்பில் கருத்து வெளியிட்டுள்ளார் பதில் அமைச்சரவைப் பேச்சாளர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தனா.

நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாடு, முழுக்க முழுக்க உள்நாட்டு விடயமாகும். அதன் பரிந்துரைகளை எமது அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. அவற்றை நடைமுறைப்படுத்த நாம் நடவடிக்கையும் எடுத்து வருகிறோம். பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதற்கு வெளியாரின் அழுத்தங்களும், தலையீடுகளும் அவசியமற்றவை. - என்றும் அரசு சார்பில் அமைச்சர் பதிவு செய்திருக்கிறார்.

பொறுப்புள்ள அமைச்சர் ஒருவர் கூறிய தகவல்கள், நிலைப்பாடுகள் இதுவரை வெளிப்படுத்தப்பட்டவையை விட மிக வித்தியாசமானவையாகவும் அதேவேளை ஒன்றுக்கு மற்றையது மாறுபட்டவையாகவும் உள்ளதை அவதானிக்க முடிகிறது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை வெளியிடப்பட்டு மாதங்கள் நான்கு கடந்து விட்டன. வடக்கு, கிழக்கில் இயங்கும் அரச சார்பு ஆயுதக் குழுக்களிடம் இருந்து ஆயுதங்கள் முற்றாகக் களையப்பட வேண்டும் என்ற இடைக்கால அறிக்கையின் பரிந்துரைகள் வெளியாகி பத்தொன்பது மாதங்களாகியும் தூசு தட்டப்படாமலேயே உள்ளன!

இந்த வகை ஒழுங்கில், நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள ஆக்கபூர்வமான, அவசியமான பரிந்துரைகள் அரசினால் அர்த்த புஷ்டியுடன் உடனடிப் பயன் தரத்தக்க முறையில், ஆக்கபூர்வமான வழியில், விரைந்து செயற்படுத்தப்படுமா என்பது குறித்து அரசு இதுவரை பகிரங்கமாக வாக்குறுதி வழங்கவில்லை.

நல்லிணக்கத்துக்கான முதலாவது தேவை இனப்பிரச்சினைக்கான நியாயமான, அர்த்தமுள்ள தீர்வே ஆகும். அதனை நாடித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் நடத்திய பேச்சு வார்த்தைகள் வால் அறுந்த பட்டமாக கீழே விழுந்து மல்லாந்து கிடக்கிறது. பேச்சுவார்த்தையை விட்டுவிட்டு, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வருமாறு கூட்டமைப்புக்குத் 'தொல்லை' கொடுப்பதால் மட்டும் நல்லிணக்கம் வந்துவிடுமா?

நீங்கள் அமெரிக்காவின் தீர்மானத்துக்கு வக்காலத்து வாங்கியவர்கள் தானே என்ற பழிவாங்கும் போக்குடன் கூட்டமைப்பையும், இனப்பிரச்சினைக்கான தீர்வையும் அரசு கைக்கு எட்டாத தூரத்தில் தள்ளி வைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை!

மொத்தத்தில், காலத்தைக் கடத்தி வழமை போன்று, தனது கைப்பொம்மைகளாக உள்ள இனவாதிகளைத் தூண்டி, தமிழ் மக்களின் உரிமைகளை அமிழ்த்திவிடும் அரைவேக்காடான தீர்வு ஒன்றை வழங்குவதே அரசின் உத்தேசம்.

இந்தக் குள்ளத்தனமான போக்கு, இனப்பிரச்சினைக்கு, பாதிக்கப்பட்ட தரப்பான தமிழர்களுக்கு, தீர்வு கிடைக்கும் என்பதனை மிகத் தூரத்தில் உந்தித் தள்ளியுள்ளது.

இவற்றுக்கு இடையே -

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா, இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனைச் சந்திப்பதற்கு மறுத்து விட்டார் என்பது சென்னையின் பரபரப்பான செய்தி. இது, மத்தியில் உள்ள காங்கிரஸ் அரசுக்குப் பெரும் அதிர்ச்சியை உண்டாக்கி இருப்பதாக ராஜீக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை குறித்த பிரேரணை அமெரிக்காவினால், அனேகமாக இன்னும் ஆறு நாள்களில், சமர்ப்பிக்கப்பட உள்ள வேளையில் அது குறித்த தமிழக மக்களின் ஒட்டுமொத்த நிலைப்பாட்டை முதல்வர் ஜெயலலிதா வெளியிட்டிருப்பது, புதுடில்லி மத்திய அரசு மீது வீசப்பட்ட பாறாங்கல் என்று கருதுவது மிகைப்படுத்தல் அல்ல.

வன்னிப் போரில் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டதில், இந்தியாவுக்கும் பெரும் பங்களிப்பு உண்டு என்பது வெட்ட வெளிச்சமான பின்னர், தமிழகத்திலிருந்து, புதுடில்லி அரசுக்குத் தலையிடி உண்டாக்கப்பட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகமும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் இலங்கை அரசு மீதான ஜெனிவாப் பிரேரணை குறித்து ஒரே பாதையில் நடப்பதற்குத் தீர்மானித்தபோதே, தமிழகம் தனக்கு எதிராகக் கொடி பிடிக்கும் என்பதனை புதுடில்லி அரசு புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

மேலும் தமிழகத்தில் உள்ள ஏனைய அரசியல் கட்சிகளும், இது விடயத்தில் ஒரே அணியில் நிற்பதால், மத்திய அரசின் ஜெனிவாப் பிரேரணையின் நடத்தை, அந்தப் பெருமாநிலத்தில் மிக மிகப் பெரியளவில் ஆத்திரத்தையும் கோபத்தையும் மூட்டியுள்ளது. ஜெனிவாப் பிரேரணை குறித்து வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா, நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்து, வெளியிட்ட அறிக்கை தமிழகத்தை மேன்மேலும் சீற்றம் கொள்ள வைத்துள்ளது.

இலங்கையில் போர் முடிவுக்கு வந்து மூன்று வருடங்கள் கழிந்து கொண்டிருக்கும் இத்தருணத்திலேனும், இலங்கைத் தமிழர்களுக்குத் தான் செய்த துரோகத்துக்கு பாவமன்னிப்புப் பெறுவதற்கான ஒரு சந்தர்ப்பம், ஜெனிவாப் பிரேரணை வடிவத்தில் கிடைத்திருக்கிறது என்பதனை இந்திய மத்திய அரசு உணர்வதாக இல்லை. காலாதி கால வழமைப் பிரகாரம், தனது சொந்த நலன்களையும், அரசியல் இலாபங்களையும் முன்னிறுத்தியே அது செயற்படுகிறது. இவை மிகவும் வெட்ட வெளிச்சமானவை.

அதனால், தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா, புதுடில்லி அரசின் உயர் அதிகாரியான மேனனை அவமதிக்கும் வகையில் செயற்பட்டிருப்பது வெளிப்படையாக, உடனடியாகப் பாதிப்புகளை உண்டாக்க வாய்ப்புக் குறைவு. எனினும் ஜெயலலிதாவின் பகிஷ்கரிப்பு, தமிழகம் - தமிழக மக்கள் - ஈழத்தமிழர்களுக்காக மத்திய அரசுக்குப் போட்ட சாட்டை அடி என்பதனைக் குறித்துக் கொள்ளலாம்.

இந்திய மத்திய அரசு, மூன்று வருடங்களுக்கு முன்னர் மனித நேயத்தைக் காலால் மிதித்து நிகழ்த்திய பாவத்துக்கு, தமிழ்நாட்டு மக்களின் சார்பில் அவர்களது மாநில முதல்வர் கொடுத்த புதுவகையான நெற்றி அடி என்றும் இதனை வர்ணிக்கலாம்.

மலையைக் கல்லால் அடி ஆழமாகக் குடைந்துவிட முடியாதெனினும், அதில் உண்டாகும் குழி, ஓர் எச்சரிக்கையின் சின்னமாகவே அமையும்.

# அமெரிக்காவின் பிரேரணையால் தமிழருக்குத் தீர்வு கிடைக்காது!

## காரணம் கூறி நிராகரிக்கிறது ஐ.தே.க.

கொழும்பு,மார்ச்17

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவால் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள பிரேரணையை ஐக்கிய தேசியக் கட்சி நிராகரித்துள்ளது. நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கையை நடைமுறைப்படுத்தும் முழுமையான பொறுப்பு அரசுக்கு மட்டும் வழங்கப்படுவதாலேயே அந்தப் பிரேரணையை நிராகரிக்கிறது என ஐக்கிய தேசியக் கட்சி கூறியது.

நாட்டு மக்களை வெங்காயம் அரிவது போல அரிந்து, இரத்தக்கறை படிந்துள்ளவர்களை அமைச்சர்களாக அரசில் வைத் துக்கொண்டு நாட்டுக்காக இரத்தம் சிந்திப் போராடிய இராணுவத்தினரை அரசு சர்வதேசத்திடம் காட்டிக்கொடுத்துள்ளது என ஐ.தே. கட்சியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார குற்றஞ்சாட்டியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''அரசு நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கையை நடைமுறைப் படுத்த வேண்டுமென அமெரிக்கா ஜெனிவாவில் பிரேரணையை முன் வைத்துள்ளது. இந்தப் பிரேரணையில் நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கையை நடைமுறைப் படுத்தும் முழுப் பொறுப்பையும் அரசுக்கே வழங்க வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளது. அமெரிக்காவின் இந்தப் பிரேரணைக்கு இணங்க ஆணைக்குழு அறிக்கையை நடைமுறைப்படுத்தும் முழுப்பொறுப்பும் அரசுக்கு வழங்கப்பட்டால் இதிலும் தனது வழமையான காலங் கடத்தும் கைங்கரியத்தையே அரசு கையாளும். அரசு மட்டும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை நடைமுறைப் படுத்துமாயின் நாட்டில் இடம் பெற்று வருகின்ற இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது. அதனாலே அமெரிக்காவின் பிரேரணையை நாம் நிராகரிக்கின்றோம்.

எமது நாட்டைக் காப்பதற்காக உயிர்த்தியாகம் செய்த இராணுவத்தினரை நாம் ஒருபோதும் காட்டிக் கொடுக்கமாட்டோம் என அரசு நாட்டில் கூறிவருகின்றது. ஆனால், சர்வதேசத்திடம் இராணுவத்தினரைக் காட்டிக்கொடுத்து தான் தப்பிக்கப் பார்க்கின்றது. 'யாரைக் காட்டிக் கொடுத்தாவது நாம் தப்பிக்க வேண்டும்' என்பதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அடுத்த தேர்தலுக்கான தொனிப் பொருளாகும் - என்றார். (த-சி)

# நட்டத்தில் இயங்கும் சங்கங்களுக்கு மூன்று மாதங்கள் கால அவகாசம்

யாழ்ப்பாணம்,மார்ச் 17

வடமாகாணங்களிலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் நட்டத்தில் இயங்கும் சங்கங்களுக்கு இறுதிக் காலக்கெடுவாக 3 மாதங்கள் வழங்கப்படுகின்றன. இந்த மூன்று மாதங்களுக்குள் முன்னேற்றகரமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாவிடின் அவற்றுக்கெதிராகத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி எச்சரித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களுக்கும் உரிய சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அதன் போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறிவதாவது:-

பல கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த காலங்களில் வளர்ச்சிப் பாதையில் முன்னோக்கி நகர்ந்துள்ளதாகத் தெரிகிறது. இலாபத்தில் இயங்கும் சங்கங்களைப் போன்று நட்டத்தில் இயங்கும் சங்கங்கள் இலாபத்தை நோக்கி ஏன் நகரவில்லை?

நட்டத்தில் இயங்கும் சங்கங்கள் சிறந்த முறையில் சேவை ஆற்ற வேண்டும். சங்கங்கள் உள்ளூர் உற்பத்திகளை கொள்வனவு செய்து சந்தை வாய்ப்புக் களை ஏற்படுத்த வேண்டும். உள்ளூர் உற்பத்திகளையும் ஊக்குவிக்கும் வகையில் இந்தச் சந்தைப் படுத்தல் அமையும்.

> சங்கங்கள் உள்ளூர் உற்பத்திகளை கொள்வனவு செய்து சந்தை வாய்ப்புக் களை ஏற்படுத்த வேண்டும். உள் ளூர் உற்பத்திகளையும் ஊக்கு விக்கும் வகையில் இந்தச் சந்தைப் படுத்தல் அமையும்.

சங்கங்களுக்குரிய இலகுகடன் வச திகள், சிறியரக வாகனங்கள் வழங் குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படும் -என்றார்.

வடக்கு மாகாணத்தில் உள்ள 47 கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோரிடம் கூட்டுறவுச் சங்கங்களின் தற்போதைய குறைபாடுகள், எதிர்நோக்கும் பிரச்சினைகள், சங்கங்களின் முன்னேற்றம் என்பன தொடர்பாகவும் இதில் ஆராயப்பட்டது. (த-13-16-17)

# 3000 முகாமைத்துவ உதவியாளர் வடக்கில் புதிதாக நியமிக்கப்படுவர்

யாழ்ப்பாணம்,மார்ச் 17

வடமாகாணத்தில் 3 ஆயிரம் முகாமைத்துவ உதவியாளர்களைப் புதிதாக உள்வாங்கவுள்ளதாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ சந்திரசிறி தெரிவித்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் புதிதாக நியமனம் செய்யப்பட்ட அரச ஊழியர்களுக்கான உற்பத்தித் திறன், மற்றும் தரமேம்பாட்டிற்கான செயலமர்வு ஒன்று வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே வடமாகாண ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

வடமாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலிருந்தும் புதிதாக நியமனம் பெற்ற நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள், திட்ட அலுவலர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள் என 500 இற்கும் மேற்பட்டவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதன் போது ஆளுநர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த காலத்தில் நடந்து முடிந்த யுத்தத்தினால் பலவற்றை நாம் இழந் துள்ளோம். இப்போது நிரந்தர சமாதான காலத்தில் நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள். இன்றைய இளைய சமூகம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும் சுதந்திரமாகச் சென்று வரக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கின்றது.

எனவே சிந்தனைமிக்க, ஆளுமையான செயற்பாட்டோடு, அர்ப்பணிப்புடன் அறிவு சார்ந்து சிந்தித்து மக்களுக்கான சேவையை ஆற்ற வேண்டும் - என்றார். (த-16)

# நிகழ்வுகள் இன்று

### இசை விருந்து

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண் கலைக்கழக மாணவர்களும், விரிவுரையாளர்களும் பங்கு பற்றும் ''ஆலாபனா'' சங்கீத சபா கர்நாடக இசை விருந்து மாலை 4.45 மணிக்கு கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த-14)

### செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலயப்பாடசாலைகளில் தரம் 10,11 இல் சைவ சமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயல்முறைக் கற்பித்தல் பயிற்சியும் மதிப்பீட்டுச் செயலமர்வும் காலை 8 மணிக்கு வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடை பெறவுள்ளது. (த-14)

### கூட்டம்

இலங்கை வங்கியின் யாழ்.பிரதேச ஒய்வூதிய சபையின் நான்காவது பொதுக்கூட்டம் காலை 9.30 மணிக்கு இலங்கை வங்கி அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த-14)

***

பகிரங்க சேவை ஒய்வூதியர் நம்பிக்கை நிதிய தென்மராட்சிக் கிளையின் பொதுக்கூட்டம் முற்பகல் 10 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கிளைத் தலைவர் சி.சிவகடாட்சம் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டத்தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் கலந்து கொள்வார். (த-9)

### ஆண்டு விழா

அல்வாய் மெதடிஸ்த தேவாலயத்தின் 96 ஆவது ஆண்டு விழா மாலை 4 மணிக்கு பருத்தித்துறை கட்டைவேலி சேகர முகாமைக்குரு எஸ்.என். தேவகுமார் தலைமையில் நடைபெறும். (த-8)

### கருத்தரங்கு

இயேசு ஜீவிக்கிறார் சர்வதேச சுவிஷச ஊழியத்தின் ஏற்பாட்டில் இடம் பெறும் 34 ஆவது அகில இலங்கை வேதாகம கருத்தரங்கின் இறுதி நாள் நிகழ்வுகள் காலை 9 மணிக்கு யாழ். இராசாவின் தோட்டம் சபை மண்டபத்தில் நடைபெறும். (த-8)

### நூல் அறிமுகம்

எழுத்தாளர் உமா வரதராஜனின் கதைகள் நூல் அறிமுக நிகழ்வு பிற்பகல் 3.45 மணிக்கு கல்முனை கிறிஸ்த இல்ல மண்டபத்தில் நடைபெறும். கல்முனை கலை இலக்கிய நண்பர்கள் ஏற்பாட்டில் திருமதி கமலாம்பிகை லோகிதராஜா தலைமையில் நடை பெறும் இந்த நிகழ்வில் அருட் சகோதரர் கலாநிதி எஸ்.ஏ.ஐ.மத்தியு நூலின் அறிமுக உரையை நிகழ்த்துவார். நிகழ்வில் எழுத்தாளர்களான எஸ்.எல்.எம்.ஹனீபா மன்சூர், ஏ.காதர், சோலைக் கிளி, ரமீஸ் அப்துல்லா, புஸ்பலதா, அனார், எம்.கே.மன்சூர், த.மலர்ச்செல்வன் ஆகியோர் உரையாற்றுவர். (த-16-38)

# வலி. வடக்கில் மீள்குடியமர்வை துரிதப்படுத்த நடவடிக்கை

### சரா எம்.பியிடம் அரச அதிபர் உறுதியளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 17

வலி மேற்குப் பிரதேச சபை வட்டாரத்தில் இன்னும் மீள் குடியேற்றம் செய்யப்படாமல் இருக்கும் பிரதேசங்களில் மீள் குடியேற்றங்களைத் துரிதப்படுத்த குறிப்பிட்ட இடங்களுக்கு நேரடியாகச் சென்று ஆராய்ந்த பின்னர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேசி ஆவன செய்வதாக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் உறுதியளித்தார்.

நேற்று மாலை யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தலைமையில் அரசாங்க அதிபருடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அரச அதிபர் இந்த உறுதிமொழிகளை அளித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் வலி மேற்குப் பிரதேச சபைத் தலைவர் திருமதி நாகரஞ்சனி ஐங்கரன் சபை உறுப்பினர்களான நடனேந்திரன், க.ஐயலிங்கம், ந.ராஜ்குமார் உட்படப் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.



இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் வலியுறுத்தியவையாவது:

★ போர் முடிவுற்று மூன்று வருடங்களுக்கு மேலாகியும், பொன்னாலை மேற்கு, கல்விளான், திருவடிநிலை, பாண்டுவட்டை, காட்டுப்புலம், நெல்லியான் ஆகிய கிராமங்களில் பெரும் பகுதி படையினரின் வசமே உள்ளன. இந்தப்பிரதேசங்களில் காலம் கடத்தாமல் மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டும்.

★ பெருமளவிலான விவசாயக் காணிகளும் வயல்களும் செய்கை பண்ண முடியாத நிலையில் படையினர் வசம் இருக்கின்றன. எங்கள் சொந்தக் காணிகளில் விவசாயம் செய்ய அனுமதி வழங்கப்பட வேண்டும்.

★ பொன்னாலைச் சந்தி முதல் கீரிமலை வரையிலான நேர்பாதையைக் கடற்படையினர் உயர் பாதுகாப்புப் பிரதேசமெனக் கூறி பொதுமக்கள் பாவனைக்குத் தடைவிதித்துள்ளனர்.

★ இப்பிரதேச மக்கள் குறிப்பாக நெல்லியான் கிராம மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். வழிபாட்டுத் தலங்களுக்கும் கடற்தொழிலுக்கும் 30 நிமிடங்களில் செல்லக்கூடிய தூரத்தை அடைய அவர்களுக்கு இப்போது இரண்டு மணி நேரம் பிடிக்கின்றன. இந்த வீதித் தடை நீக்கப்பட வேண்டும்.

என்ற பிரதான கோரிக்கைகள் அரச அதிபரிடம் முன்வைக்கப்பட்டன.

இவற்றை மிகவும் அவதானமாகச் செவிமடுத்த அரசாங்க அதிபர் இவ்விடயங்களைத் தான் நேரடியாக ஆராய்ந்து படைத்தளபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சு என்பனவற்றுடன் பேசி மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற ஆவன செய்வதாக உறுதியளித்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இப்பிரதேசத்தில் அவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களை நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் சுட்டிக்காட்டினார்.

★ சங்கானையில் ஒரு தபால் அலுவலகம் அமைக்கப்பட்ட வேண்டும்.

★ அராலி மேற்குப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள மகப்பேறு நிலையம் பூரணப்படுத்தப்பட்டு தகுதியான மருத்துவர்களும், பணியாளர்களும் நியமிக்கப்பட வேண்டும். அத்தோடு இப்பிரதேசத்தில் உள்ள பாதையும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்றார்.

திருவடிநிலை என்ற கிராமத்தில் தனியாருக்குச் சொந்தமான காணி பலவந்தமாக அபகரிக்கப்பட்டு பௌத்த விகாரை கட்டப்படுவதாகப் பொதுமக்கள் ஆதங்கப்படுகின்றனர் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். (உ-02)

# ஐ.நா. பிரேரணையை எதிர்த்தால் தமிழகத்தில் காங்கிரஸுக்கு பேரழிவு

### சீமான் சிறப்புப் பேட்டி

கொழும்பு, மார்ச் 17

''அமெரிக்காவால் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இலங்கைக்கு எதிரான பிரேரணையை இந்திய அரசு ஆதரிக்கத் தவறினால் காங்கிரஸ் அரசைத் தமிழகத்தில் துடைத்தெறிந்து விடுவோம். தமிழகத்தின் ஒன்பது கோடி மக்களும் காங்கிரஸின் வரலாற்று எதிரிகளாக மாறிவிடுவர். தமிழகத்தின் ஒட்டுமொத்த வாக்குகளும் காங்கிரஸிற்கு எதிராகவே பயன்படுத்தப்படும். காங்கிரஸ் அரசின் ஆதரவு பாதிக்கப்பட்ட எமது ஈழத்தமிழர்களுக்கா அல்லது சிங்களவர்களுக்கா என்று அரசு உடன் தீர்மானிக்கவேண்டும்''

-இவ்வாறு 'நாம் தமிழர்' கட்சியின் தலைவரும் திரைப்பட இயக்குநருமான சீமான் நேற்று 'உதயனிடம் தெரிவித்தார்.



''இலங்கையில் இடம் பெற்றிருப்பது போர்க்குற்றமல்ல. அந்தப் போரே ஒரு குற்றம் தான். ஈழத் தமிழருக்கெதிரான போரை இந்திய அரசே முன்னின்று நடத்தியது. இதனால், ஜெனிவாப் பிரேரணையை இந்தியா ஆதரித்தால் போர்க்குற்றங்களை டில்லி மீது இலங்கை சுமத்திவிடும் என்று மத்திய அரசு அஞ்சுகிறது; மௌனம் காக்கிறது'' என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''இலங்கையில் போர்க் குற்றங்கள் இடம்பெற்றிருக்கின்றன; மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன; ஈழத் தமிழர்கள் அழித்தொழிக்கப்பட்டுள்ளனர் என்று உலக நாடுகளே ஒருமித்த குரலில் ஆதாரங்களை முன்வைத்துக் கூறுகின்றபோது - இலங்கை அரசுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கின்றபோது - இந்திய அரசு மட்டும் அவற்றை மறுத்து இலங்கை அரசைக் காப்பாற்றுகின்றது.

ஈழத்தமிழர்களுக்காகப் போராடும் தமிழகத்தின் 7 கோடி மக்களின் கோரிக்கையைப் புறக்கணித்து சிங்கள அரசையும், தமிழர்களைக் கொன்றொழித்த சிங்கள இராணுவத்தையும் காப்பாற்றுவதற்காக ஏன் இந்திய அரசு போராடுகிறது?

தமிழகத்தின் வாக்குகள் மட்டும் காங்கிரஸ் அரசுக்குத் தேவையாக இருக்கின்றன. ஆனால், ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான தமிழகத்தின் கோரிக்கைகளை அது நிறைவேற்றத் தயங்குகின்றது. ஈழத் தமிழர்களுக்கு எதிரான போர் தொடங்கியது முதல் இப்போது வரை இந்திய அரசு தமிழருக்கு ஆதரவாகச் செயற்பட்டதே இல்லை.

சிங்கள அரசையும், சிங்கள மக்களையும், தமிழர்களைக் கொன்றொழித்த சிங்கள இராணுவத்தையும் காங்கிரஸ் அரசு பாதுகாப்பதற்கான காரணம் என்ன? இந்திய அரசின் இந்த நிலைப்பாடு தொடர்ந்தால், தமிழகத்தின் 9 கோடி மக்களின் வரலாற்று எதிரியாக மாறுவது நிச்சயம்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்டுள்ள இலங்கைக்கு எதிரான பிரேரணையை இந்திய அரசு ஆதரிக்கத் தவறினால், காங்கிரஸை தமிழகத்தில் துடைத்தெறிந்துவிடுவோம். தமிழ் மக்களின் வாக்குப் பலத்தைக் கொண்டு காங்கிரஸின் ஆட்சியைக் கவிழ்த்துவிடுவோம்.

இப்போது தமிழகத்தின் அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து மேற்கொண்டு வரும் போராட்டம் தமிழகத்தின் பட்டிதொட்டியெங்கும் விஸ்தரிக்கப்படும். சிங்கள தேசத்திற்குத் துணை போவதை இந்திய அரசு உடன் நிறுத்தவேண்டும்.

இந்திய அரசு இதுவரை எமது ஈழத்து உறவுகளுக்குச் செய்த கொடுமைக்குப் பிராயச்சித்தமாக அமெரிக்கா கொண்டுவந்திருக்கும் இந்தப் பிரேரணையை ஆதரித்தே தீரவேண்டும். இல்லையேல் எமது போராட்டம் உக்கிரமடையும் - என்றார்.

## கட்டட வசதியில்லாது அல்லல்படும் ஆரம்ப சுகாதார நிலையங்கள்

கண்டாவளைப் பிரதேசத்திலுள்ள அநேகமான ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டட வசதிகள் இன்றிப் பெரும் சிரமத்துடன் இயங்கி வருகின்றன.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் நான்கு சுகாதார நிலையங்களுக்கே நிலையான கட்டட வசதிகள் உள்ளன.

கண்டாவளை பிரதேசத்தில் ஆரம்ப சுகாதார நடவடிக்கைகளை வழங்குவதற்கென 14 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயற்படுகின்றன.

இதில் நான்கு ஆரம்ப சுகாதாரத்துறை நிலையங்கள் மாத்திரமே ஆரம்ப சுகாதார நிலையத்துக்குரிய கட்டட வசதிகளுடன் இயங்கி வருகின்றன. ஏனைய பத்து ஆரம்ப சுகாதார நிலையங்களும் தனியார் வீடுகளிலும், பொது இடங்களிலும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் இயங்கி வருகின்றன.

வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போரின்போது அநேகமான கட்டடங்கள் அழிவடைந்த நிலையில் காணப்படுகின்றன. (க-6)

# உதவிகள் வழங்கப்படாத நிலையில் 2 ஆயிரத்து 930 குடும்பங்கள்

கிளிநொச்சி, மார்ச் 17

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியமர்ந்த 2ஆயிரத்து 930 குடும்பங்களுக்கு இதுவரை வாழ்வாதார உதவிகள் வழங்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் 7ஆயிரத்து 429 குடும்பங்கள் இதுவரை மீளக் குடியமர்ந்துள்ளதாகப் பிரதேச செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 15 கிராம அலுவலர் பிரிவுகளிலும் இதுவரை 7 ஆயிரத்து 429 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 23ஆயிரத்து 978 பேர் மீளக் குடியமர்ந்துள்ளனர்.

இதில் 4 ஆயிரத்து 800 குடும்பங்களுக்கு யூ.என். எச். சி. ஆர்.நிறுவனத்தால் வழங்கப்பட்ட 20 ஆயிரம் ரூபாவும் அத்துடன்5ஆயிரத்து 25 குடும்பங்களுக்குக் கச்சேரியூடாக 5ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சில குடும்பங்களுக்கு மேற்படி கொடுப்பனவுகள் இதுவரை கிடைக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மீளக்குடியமர்ந்துள்ள 2 ஆயிரத்து 286 குடும்பங்களுக்கு விவசாயச் செய்கைக்கான வாழ்வாதார உதவிகளும், ஆயிரத்து 205 குடும்பங்களுக்கு கால்நடை கோழிவளர்ப்பு போன்ற வாழ்வாதார உதவிகளும், 381குடும்பங்களுக்கு மீன்பிடிக்கான வாழ்வாதார உதவிகளும், 627 குடும்பங்களுக்கு வியாபாரம், தையல், தச்சு, மேசன் என்பன அடங்கலான முயற்சியாண்மை வாழ்வாதார உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு 7 ஆயிரத்து 429 குடும்பங்களில் 4 ஆயிரத்து499 குடும்பங்களுக்கு மட்டுமே வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஏனைய 2 ஆயிரத்து 930 குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கப்படவில்லை. இதனால் இந்தக் குடும்பங்கள் வாழ்வாதார உதவிகள் இன்றிப் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. (க-6)

# வெறிச்சோடிக் காணப்படும் நீர்வழுங்கல் சபைக் காரியாலயம்

கிளிநொச்சி, மார்ச் 17

தேசிய நீர் வழங்கல் சபையின் கிளிநொச்சிப் பிராந்தியக் காரியாலயம் வெறிச்சோடிக் காணப்படுகிறது.

தேசிய நீர் வழங்கல் சபையின் புதிய கட்டடம் இதுவரை திறக்கப்படவில்லை.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தலையிட்டு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்

தேசிய நீர் வழங்கல் சபையின் கிளிநொச்சிப் பிராந்தியக் காரியாலயத்துக்கு நியமிக்கப்பட்ட ஆளணியினர் யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் கடமையாற்றுகிறார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

> கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் இந்த விடயத்தில் தலையிட்டு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

கிளிநொச்சி மாவட்ட தேசிய நீர் வழங்கல் சபையின் கட்டடம் இவ்வாறு மீள இயங்காமைக்குப் பிரதி பொது முகாமையாளர் பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவராக இருப்பதோடு இந்த விடயத்தில் அக்கறையீனமாக செயற்படுவதே காரணமெனக் கிளிநொச்சி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த மாத இறுதிக்குள் கிளிநொச்சி மாவட்ட தேசிய நீர் வழங்கல் சபை மீள ஆரம்பிக்கப்படாவிட்டால் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாக போராட்டம் நடத்தவுள்ளதாக கிளிநொச்சி மக்கள் அறிவித்துள்ளனர். தற்போது யாழ். கிளிநொச்சி குடிநீர் விநியோகத் திட்டம் 2ஆயிரம் கோடி செலவில் முன்னெடுக்கப்படுகிறது.

இந்த நிலையில் இந்தக் காரியாலயம் திறக்கப்பட்டால் மேலதிக நன்மைகளை இங்குள்ள மக்கள் அனுபவிக்கலாமெனக் கிளிநொச்சி மாவட்டச் செயலக உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (எ)

# கல்லுண்டாயில் கழிவுகளை இனிமேல் கொட்ட வேண்டாம்

## அப்பகுதி மக்கள் கோரிக்கை

**கழிவுகள் கொட்டுவதால் அதிலிருந்து எழும் துர்நாற்றம் அதிலிருந்து உற்பத்தியாகும் இலையான்கள் ஆகியவற்றால் நவாலிப் பகுதி மற்றும் அயல் கிராமங்களில் சுகாதாரச் சீர்கேடு**

நவாலி, மார்ச் 17

கல்லுண்டாய் பகுதியில் கொட்டப்படும் மலக் கழிவுகள், திண்மக் கழிவு மற்றும் ஏனைய கழிவுகளையும் எமது பிரதேசத்துக்கு அப்பால் கொட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவற்றைக் கொட்டுவதனால் அதிலிருந்து எழும் துர்நாற்றம் அதிலிருந்து உற்பத்தியாகும் இலையான்கள் நவாலிப் பகுதி மற்றும் அயல் கிராமங்களில் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபையிலிருந்து எடுத்து வரப்படும் இந்தக் கழிவுகள் வீதிகளிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் கொட்டப்படுகின்றன. இவற்றைத் தடுத்து நிறுத்தி பண்ணைப் பாலத்துக்கு அப்பால் கொட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு கடந்த புதன் கிழமை நவாலி மகா வித்தியாலயத்தில் வே.சிற்றம்பலம் தலைமையில் இடம் பெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் நவாலிப் பகுதியைச் சேர்ந்த பல பொது அமைப்புகள், பொது மக்கள் ஆகியோரின் கலந்து கொண்டனர். ஒவ்வொரு அமைப்பின் பிரதிநிதிகளும் தத்தமது கருத்துக்களை எடுத்துச் கூறினர்.

இங்கு தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் வருமாறு:

இந்தப் பகுதியில் மண் அகழ்வதற்குத் தடை செய்ய வேண்டும். குறிப்பிட்ட அளவு மண்ணை ஏற்றுமாறு பிரதேச செயலர் அனுமதிப் பத்திரம் வழங்கினார். அந்த அனுமதிப் பத்திரத்தை வைத்துக் கொண்டு நாள் முழுவதும் இரண்டு மூன்று உழவு இயந்திரங்களில் ஏற்றிச் சென்று வேறு பிரதேசங்களில் கொட்டுகிறார்கள். இவ்வாறு தொடர்ந்து செய்வதால் கடல் நீர் வயல் நிலங்களுக்குள் புகும் நிலைமை ஏற்படுகிறது. அதனால் விவசாய நிலங்களும் உவராகும் நிலைமை ஏற்படும்.

இந்த நிலையில் அனுமதிப்பத்திரம் வழங்குவதை தடை செய்ய வேண்டும்.- என்று தெரிவிக்கப்பட்டது.

பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் தெரிவிக்கையில்:

கல்லுண்டாயில் பல ஆலயங்கள், பொது அமைப்புகள் பாடசாலைகள், துறைமுகம், கடல் வளம் குடியிருப்புகள் என்பன உள்ளதால் கழிவுகள் கொட்டுவதற்குத் தடை விதிக்க வேண்டும்.

இது சுகாதாரத்துடன் சம்பந்தப்பட்ட விடயம். இன்னொரு பிரதேசத்தின் கழிவை எமது பிரதேசத்தில் கொட்டுவதை சகல அமைப்பும் ஒன்று சேர்ந்து நிறுத்த வேண்டும்.- என்று தெரிவித்தார்.

இதற்கு பொது அமைப்புகளில் ஒன்றியமொன்றும் பிரதேச சபை உறுப்பினர் க.கௌரிகாந்தன் தலைமையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது. 9 பேர் கொண்ட உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ம-100)



மருத்துவ உதவியாளர்கள் தமது பணிகளைப் புறக்கணித்துள்ளமையால் யாழ். போதனா வைத்திய சாலையின் வெளிநோயாளர் பிரிவு வெறிச்சோடிக் காணப்படுகின்றது. இந்த நடவடிக்கைகளால் நோயாளர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அடிக்கடி தடைப்படும் பஸ்ஸால் மணற்காட்டு மக்கள் சிரமத்தில்

வடமராட்சி,மார்ச் 17

பருத்தித்துறையிலிருந்து மணற்காட்டுக்கு நடைபெறும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் சேவை அடிக்கடி தடைப்படுவதால் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உள்ள மணற்காட்டுக் கிராமத்துக்கென பருத்தித்துறை இ.போ.ச. டிப்போவால் பருத்தித்துறை மணற்காடு பஸ் சேவை தும்பளை, வல்லிபுரக்கோயில், வலிக்கண்டி ஆகிய இடங்கள் ஊடாக கடந்த சில வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

அண்மைக் காலமாக இப்பாதைக்கான பஸ் சேவை அடிக்கடி இடைநிறுத்தப்படுகின்றது. இதனால் இக் கிராமத்திலிருந்து உயர் கல்வி பெற பருத்தித்துறைக்குச் செல்லும் மாணவர்கள் மற்றும் பல்வேறு தேவைகளுக்காக பருத்தித்துறை உட்பட பல்வேறு இடங்களுக்கு சென்றுவரும் பொது மக்கள் அந்தரிக்கும் நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

சுமார் 2 மைல்களுக்கு அதிகமான தூரம்வரை குடத்தனைக்கு நடந்து வந்து பயணிக்க வேண்டிய அவல நிலை ஏற்படுகின்றது.

இதனால் பயணத்துக்கு அதிக நேரத்தைச் செலவிட வேண்டிய நிலை இக் கிராம மக்களுக்கு ஏற்படுவதோடு குறிப்பிட்ட நேர காலத்துக்கு சென்று தமது தேவைகளை பூர்த்தி செய்வதில் தாமதங்களும் ஏற்படுகின்றன என்று விசனம் தெரிவிக்கின்றனர்.

பருத்தித்துறை மணற்காடு பாதையில் தனியார் பஸ் சேவைகள் எதுவும் நடைபெறுவதில்லை. இதன் காரணமக இக் கிராம மக்கள் இ.போ.ச. பஸ் சேவையை மாத்திரம் போக்குவரத்துக்காக நம்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-8)

## சிறுதானியச் செய்கையில் விவசாயிகள் ஆர்வம்

நவாலிப் பகுதியில் வயல்களில் சிறுதானியச் செய்கையில் விவசாயிகள் அதிக ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர்

நெல் அறுவடை முடிவடைந்தவுடன் வயலில் ஈரத்தன்மையினாலும் மழை பெய்த ஈரத்தாலும் விவசாயிகள் நவாலி கடையோடை அம்மன், தலுவில், நங்கன் குளம், ஈச்சந்தரவை ஆகிய வயல்களில் எள்ளு, பயறு, கௌபி, சணல், பயற்றை போன்றவற்றை பயிரிட்டுள்ளனர். கட்டாக் காலிகளைக் கட்டி வைத்து விவசாயிகளுடன் ஒத்துழைக்குமாறு நவாலி கிழக்கு விவசாய சம்மேளனம் அறிவித்துள்ளது.

கட்டாக்காலியாக திரியும் கால்நடைகள் பிடிக்கப்பட்டால் 1500 ரூபா தண்டப் பணமாக அறவிடப்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-100)

## துரித அபிவிருத்தியின் கீழ் வருகிறது நெல்சிப் திட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

2012 இல் நெல்சிப் அபிவிருத்தி துரித அபிவிருத்தி திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள 34 சபைகளும் 2012 ஆம் ஆண்டுக்கான நெல்சிப் முன்மொழிவு கருத்திட்டங்களை விரைந்து வழங்க வேண்டும்.

உள்ளூராட்சி சபை செயலாளர்கள், மாநகர ஆணையாளர்கள் விரைந்து இவற்றை வழங்குவதை உறுதிப்படுத்த வேண்டும்.

உள்ளூராட்சி ஆணையாளர் மரியதாசன் ஜெகூ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்கள் முன்மொழிவுகளை அதற்கான பட்டியலை சரி பார்த்து அனைத்து விடயங்களையும் பூரணப்படுத்தி கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

விரைவில் மாகாண திட்டமிடல் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களால் சமர்ப்பிக்கப்படும் திட்ட முன்மொழிவுகள், பட் அறிக்கையும் திருப்திகரமாக இருக்க வேண்டும் எனக் கேட்டுள்ளார்.

34 சபைகளின் செயலாளர் கூட்டத்தில் 5 மாவட்டங்களில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களும் பிரசன்னமாகி இருந்தனர். (ம)

## மின் விளக்குகள் பொருத்த நிதி

யாழ்ப்பாணம்,மார்ச் 17

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் 200 மின்விளக்குகள் பொருத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்காக வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு, அல்லைப்பிட்டி பிரதேசங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. வேலணைப் பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா இத் தகவலைத் தெரிவித்துள்ளார். அபிவிருத்தி நிதி மூலம் ஒரு மில்லியன் ரூபா எமக்குக் கிடைத்துள்ளது.

இந்த நிதியை சோலர் மின்விளக்குகள் பொருத்துவதற்குப் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-17)

## இரவல் சைக்கிள் வாங்கிச் சென்றவர் வெறுங்கையுடன் திரும்பி வந்தார்

நவாலி, மார்ச் 17

இரவல் சைக்கிளை வாங்கிச் சென்ற நபர் வெறுங்கையுடன் நடந்து வீடு திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது.

சண்டிலிப்பாய் பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் பக்கத்து வீட்டுக்காரரிடம் புத்தம் புதிய சைக்கிள் ஒன்றை இரவலாகப் பெற்றுச் சென்றுள்ளார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்குச் சென்ற இவர் அங்கு சைக்கிளை நிறுத்தி விட்டு உங்ளே சென்று தமது அலுவல்களை முடித்துவிட்டு திரும்பி வந்து பார்த்த போது சைக்கிள் காணாமற் போயிருந்தமை தெரியவந்தது.

இதேபோன்று சில வாரங்களுக்கு முன்பும் செயலகத்தில் தற்காலிக அடிப்படையில் பணிபுரியும் பெண் ஒருவரின் சைக்கிளும் காணாமற் போயிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இங்கு விடப்படும் சைக்கிள்கள் அடிக்கடி திருட்டுப் போவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. (ம-100)

## முதலாவது சந்தேகநபருக்கு தொடர்ந்து விளக்க மறியல்

**ஏனைய நால்வரும் பிணையில் செல்ல அனுமதி**

சாவகச்சேரி,மார்ச் 17

கடந்த மாதம் பாலாவிப் பகுதியில் மாணவியை கடத்திய வழக்கின் முதலாவது சந்தேக நபரை விளக்க மறியலிலும் ஏனைய நான்கு சந்தேக நபர்களையும் பிணையில் செல்லச் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் உத்தரவிடப்பட்டது.

கச்சாய் அ.த.க.பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டிகள் முடிந்து வீடு சென்றவேளையில் பாலாவியில் சனநடமாட்டமில்லாத பற்றைப் பகுதியில் வைத்து ஓட்டோவில் மாணவி கடத்தப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பாலாவி தெற்கு, கச்சாய் தெற்கு, மந்துவில் கிழக்கு ஆகிய இடங்களைச் சேர்ந்த ஐந்து பேர் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது முதலாவது சந்தேக நபரைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது சந்தேக நபர்களைக் காசுப் பிணையிலும் தலா மூன்று பேர் கொண்ட ஆள்பிணையிலும் செல்ல நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.

நான்கு பேரும் பிரதி வெள்ளிக்கிழமைகளில் நீதிமன்றில் கையொப்பமிட வேண்டுமென உத்தரவிட்டு வழக்கை எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ம-9)

## குற்றச் செய்திகள்

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ்.நகர்ப் பகுதியில் உறவினர் வீடு புகுந்து 3 லட்சம் ரூபா பெறுமதியான தாலிக் கொடியைத் திருடிய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இரண்டு பெண்களையும் எதிர்வரும் 21 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி வீட்டு உரிமையாளர் உடனடியாகவே யாழ். பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் இருவரையும் கைது செய்து நீதிவான் பா.கணேசராஜா முன்னிலையில் முற்படுத்தினர். அதன் போதே இருவரையும் விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டது. இருவரும் மன்னார் மற்றும் தீவகத்தைச் சேர்ந்தவர்களாவர்.

(ம-4)

* * *

வடமராட்சி, மார்ச் 17

சட்ட விரோத விற்பனைக்காக வீட்டில் சாராயம் வைத்திருந்தவருக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

வல்வெட்டித்துறைப் பொலிஸ் பகுதியில் உள்ள வீடொன்றில் விற்பனைக்காக 750 மில்லி மீற்றர் சாராயம் அனுமதிப் பத்திரமின்றி வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட நபர் பருத்தித்துறை நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார்.

குறிப்பிட்ட நபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

(ம-4)

# நீரிழிவு நோயாளியை தேடிச் சென்று சிகிச்சை

## சாவகச்சேரி ஆஸ்பத்திரி புதிய நடவடிக்கை

**வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இறந்தவர்களில் பெரும்பாலானோர் நீரிழிவு நோயின் தாக்கத்துக்கு ஆளாகி இறந்துள்ளமையும் இனங்காணப்பட்டுள்ளதாக வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**

தென்மராட்சி, மார்ச் 17

நீரிழிவு நோயாளியைத் தேடிச் சென்று சிகிச்சை வழங்குவதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரி வைத்தியசாலை மேற்கொள்ளவுள்ளது.

சாவகச்சேரி வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சைப் பிரிவினர், வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், தென்மராட்சி அபிவிருத்திச் சங்கத்தினர் கூட்டாக இணைந்து இந்த செயற்திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளனர்.

அண்மைக் காலமாக தென்மராட்சிப் பிரதேசத்தில் நீரிழிவு நோயால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. மாதத்தில் குறைந்தது 20 பேர் தொடக்கம் 30 பேர்வரை நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நீரிழிவு நோய் உச்சமடைந்த நிலையில், பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலைக்கு நோயாளர்கள் வருவதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

கால்களில் மாறாத காயங்கள், கண்பார்வை மங்கிய நிலை, சிறுநீரக பாதிப்பு போன்றவற்றுக்கு சிகிச்சை பெற வந்த வேளையில் பரிசோதனையின் போது நீரிழிவு நோய் உச்ச நிலையில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அண்மையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இறந்தவர்களில் பெரும்பாலானோர் நீரிழிவு நோயின் தாக்கத்துக்கு ஆளாகி இறந்துள்ளமையும் இனங்காணப்பட்டுள்ளதாக வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நீரிழிவின் தாக்கத்துக்கு இலக்காவோரில் பெரும்பாலானோர் பெண்களே. இவர்களுக்கு நீரிழிவு தொடர்பான போதிய விழிப்புணர்வு இன்மையே காரணம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நீரிழிவு சிகிச்சை நிலையத்துக்கு வருவோரின் விவரங்கள் கணினி மயப்படுத்தப்பட்டு, சிகிச்சைக்கு வராத நோயாளியின் வீட்டுக்கு சென்று அவருக்கு போதிய விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களைச் சிகிச்சை பெற வைப்பதே இத் திட்டத்தின் நோக்கம் என்று சுட்டிக்காட்டப்பட்டது. (ம-9)

# போதையில் மோதல் பொதுமக்கள் விசனம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ். நகர் கஸ்தூரியார் வீதியில் இளைஞர்களிடையே இடம்பெற்ற கைகலப்பால் அந்தப் பகுதியூடாக சென்ற பொதுமக்கள் பெரும் சிரமப்பட்டனர்.

இந்தப் பகுதியில் உள்ள மதுபான நிலையத்தில் மது அருந்தி விட்டு போதை தலைக்கேறியதும் இளைஞர்கள் சிலர் வீதியில் இறங்கி மோதிக் கொண்டனர்.

வெறியாட்டத்தில் ஈடுபட்ட இந்த இளைஞர்கள் தகாத வார்த்தைகளையும் பயன்படுத்தி கைகலப்பில் ஈடுபட்டனர்.

இளைஞர்களின் இந்த செயற்பாட்டால் வீதியால் பயணம் செய்த மக்கள் சிறிது நேரம் பெரும் சிரமப்பட்டனர்.

மது அருந்தி விட்டு இளைஞர்கள் மோதலில் ஈடுபடும் சம்பவங்கள் இந்த வீதியில் அண்மைக் காலமாக அதிகரித்துக் காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாரின் ரோந்து மற்றும் பாதுகாப்புப் பணியினால் இந்த செயல்கள் கடந்த மாதங்களாக தவிர்க்கப்பட்டன.

என்றாலும் கடந்த புதன்கிழமை இரவு இளைஞர்களின் அட்டகாசம் இந்தப் பகுதியில் மீண்டும் அரங்கேறியது.

இந்த நடவடிக்கையை கட்டுப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினரால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ம-17)

# அந்தணன் திடலுக்கு மின்விளக்குகள்

வடமராட்சி, மார்ச் 17

கப்பூது, அந்தணன் திடல் பகுதிகளில் உள்ள வீதிகளில் வீதி மின்விளக்குகள் பொருத்தப்பட்டு அவை ஒளிர்வதாக கரவெட்டி பிரதேச சபைத் தலைவர் பொ. வியாகேசு தெரிவித்தார்.

பருத்தித்துறை - சாவகச்சேரி வீதியில் கப்பூதுச் சந்தியிலிருந்து ஆரம்பித்து அந்தணன் திடல் செல்லும் அதிமுக்கிய வீதியில் பாடசாலை, சனசமூக நிலையம் கோயில் என்பனவற்றை உள்ளடக்கிய வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-8)

# கொழும்புத்துறைக்கு கேபிள் இணைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 17

கொழும்புத்துறை பகுதிக்கான கேபிள் தொலைபேசி இணைப்பு விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியின் சகல இடங்களுக்கும் இந்த இணைப்புகள் விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்துக்கு முன்பாக ரெலிக்கொம் நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட புதிய தொலைபேசி பரிவர்த்தனை 'இம்சா' மூலம் இந்த இணைப்புகள் சகல இடங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

நெடுங்குளம் வீதி, சுவாமியார் வீதி, வளன்புரம் உட்பட சகல இடங்களுக்கும் புதிய இணைப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (ம-17)

# நடமாடும் சேவை மூலம் தீவுக்கு மானிய முத்திரை

யாழ்ப்பாணம், மார்ச் 17

தீவுப் பகுதியில் உள்ள கடல்தொழிலாளர்களுக்கு எரிபொருள் மானிய முத்திரைகளை நடமாடும் சேவை மூலம் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மாவட்ட கடல்தொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் என். கணேசமூர்த்தி தெரிவித்தார்.

இந்தப் பகுதி கடல்தொழிலாளர்களுக்கான விஷேட மானிய முத்திரைகள் யாவும் அடுத்த வாரத்தில் இருந்து நடமாடும் சேவை மூலம் உரியவர்களுக்கு விநியோகிக்கப்படும்.

ஊர்காவற்றுறை, வேலணை, நெடுந்தீவு பிரதேச செயலகங்களில் வைத்து இந்த மானிய முத்திரைகளை கடல்தொழிலாளர்களுக்கு விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேசமயம், குடாநாட்டின் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த கடல்தொழிலாளர்களுக்கும் இந்த மானிய முத்திரைகள் தொடர்ந்தும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

முதற்கட்ட மானிய முத்திரைகள் விநியோகத்தில் சிறிது தாமதம் ஏற்பட்டாலும் கூட இரண்டாம் கட்ட விநியோகம் துரிதமாக விநியோகிக்கக் கூடியதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-17)

# வீதி அகலிப்பு பணிகளை பார்வையிட்ட அதிகாரிகள்

**ஏ–9 வீதி புனரமைப்பு அகலிப்புப் பணிகள் குறித்து இந்தப் பிரதிநிதிகள் கலந்துரையாடினர்.**

யாழ்ப்பாணம், மார்ச் 17

ஏ-9 வீதியின் அகலிப்பு மற்றும் புனர்நிர்மாணப் பணிகளை யாழ்ப்பாணம் வருகை தந்த ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதிகள் பார்வையிட்டுள்ளனர்.

நாவற்குழியில் இருந்து யாழ். நகர் வரைக்குமான ஏ-9 வீதி புனரமைப்பு அகலிப்புப் பணிகள் குறித்து இந்தப் பிரதிநிதிகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகளைச் சந்தித்தும் கலந்துரையாடினர்.

கடந்த புதன்கிழமை வருகை தந்த இந்தப் பிரதிநிதிகள் வீதியின் அகலிப்பு மற்றும் புனரமைப்பு பணிகளை நேரடியாக சென்று பார்வையிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீதி அகலிப்பு நடவடிக்கைகளின் போது கட்டடங்கள் அழிவடையும் நிலைமை ஏற்பட்டுள்ளதால் அவற்றை எவ்வாறு அகற்றுவது என்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் இந்தப் புனரமைப்புப் பணிகளை துரிதப்படுத்துவதற்கு சகல முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

நாவற்குழியில் இருந்து யாழ். துரையப்பா விளையாட்டரங்கு சந்திவரைக்குமான பகுதியில் இருக்கும் மதகுகள் மற்றும் பாலங்களின் புனர் நிர்மாணப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம-17)

# ஆனைவிழுந்தான் குளத்தை புனரமைக்கக் கோரிக்கை

வடமராட்சி, மார்ச் 17

ஒரு நூற்றாண்டு காலத்துக்கும் மேலாக ஆயிரக்கணக்கான கிராம மக்கள் குளிக்கப் பயன்படுத்தி வரும் துன்னாலை, ஆனைவிழுந்தான் குளத்தைப் புனரமைத்துத் தருமாறு கரவெட்டிப் பிரதேச சபை உறுப்பினர் க.பரஞ்சோதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வயல்களின் எல்லைப் புறத்தில் இருக்கும் இந்தக் குளத்தில் நீண்ட காலத்துக்குத் தண்ணீர் தேங்கி நிற்பதுண்டு.

குளத்தைச் சுற்றியுள்ள கிராம மக்கள் ஒரு நூற்றாண்டு காலத்துக்கு மேலாகத் தற்போதும் குளிப்பதற்காக இந்தக் குளத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். இந்தக் குளத்தை நீண்டகாலமாகத் துப்புரவு செய்து கிராம மக்கள் தொடர்ந்தும் குளிப்பதற்குப் பயன்படுத்தக் கூடியவாறு தற்காலத்துக்கேற்ப புனரமைப்புச் செய்து தருமாறு குளத்தைப் பயன்படுத்தும் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்தக் கோரிக்கையைப் பிரதேச சபை உறுப்பினர் அண்மையில் நடைபெற்ற கரவெட்டிப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் பிரஸ்தாபித்திருந்தார்.

எனினும் இது தொடர்பாக ஏனைய உறுப்பினர்களின் அனுசரணையுடன் எவ்வித முடிவும் எட்டப்படாது போய்விட்டதாக உறுப்பினர் க.பரஞ்சோதி தெரிவித்தார். இருப்பினும் தொடர்ந்து வரும் சபையின் மாதாந்தக் கூட்டங்களில் மீண்டும் பிரஸ்தாபிக்கப் போவதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-8)



வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர்ப் பிரதேச செயலகப் பிரிவின் மகளிர் அபிவிருத்தி நிலையத்தினரால் மனைப் பொருளியல் கண்காட்சி நேற்று வெள்ளிக்கிழமை அரியாலை மத்தி, தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் கண்காட்சியைத் திறந்து வைக்கிறார். (ம-7)

# வீதியோர மண் அகழ்வு பணியாளர் - மக்கள் முறுகல்

யாழ்ப்பாணம், மார்ச் 17

பருத்தித்துறை வீதியில் இருபாலைச் சந்திக்கு அப்பால் வீதி அகலிப்புக்காக வெட்டப்பட்ட மண்ணை வேறு தேவைக்கு எடுத்துச் சென்றது குறித்து அப்பகுதி மக்களுக்கும் வீதி அகலிப்பில் ஈடுபட்ட பணியாளர்களுக்கும் இடையே கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.

வீதி அகலிப்புக்காக வீதியோரம் வெட்டப்பட்ட மண்ணை அப்பகுதி ஆலய வளாகத்தின் தாழ்ந்த பகுதிக்கு நிரப்ப தந்து உதவுமாறு மக்கள் கேட்டுக் கொண்டனர்.

வெட்டப்படும் மண் அவ்வாறு கொட்டுவதற்கு அனுமதி இல்லை என்று கூறி அவை கனரக வாகனங்களில் கொண்டு செல்லப்பட்டது. அந்த மண் வேறு தேவைக்கு என கூறி பின்னர் பணத்துக்கு விற்கப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இப்படிப்பட்ட நடவடிக்கை குறித்து மக்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் முறைப்பாடும் செய்துள்ளனர். (ம-17)

# திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைப்பு

சாவகச்சேரி, மார்ச் 17

கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை புதன்கிழமை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் ஆயிரம் பாடசாலைகள் தரம் உயர்த்தும் திட்டத்தில் இணைக்கப்பட்டதால் அங்கிருந்த ஆரம்பப் பிரிவு ஆரம்பப் பாடசாலையாக மாற்றப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் தனியான நிர்வாகத்தின் கீழ் ஆரம்பப் பாடசாலையாக இயங்க அனுமதிக்கப்பட்ட போதிலும் நேற்றுமுன்தினம் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவு கட்டடத்திலேயே ஆரம்பப் பாடசாலை தற்காலிகமாக இயங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலையின் புதிய அதிபர் திருமதி புஷ்பராணி மங்களேஸ்ரன் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன், சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் கு.சிவானந்தம், கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பெற்றோர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம-9)

# தொழிலாளர் உரிமையை காக்க முன்வாருங்கள்!

### தொழிலாளர் விடுதலை முன்னணியின் தலைவர் கூறுகிறார்

**கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் மூன்றாவது அணியான பெருந்தோட்ட தொழிற்சங்கக் கூட்டமைப்பு தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முன்வரவேண்டும்.**

நுவரெலியா, மார்ச் 17

கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் மூன்றாவது அணியான பெருந்தோட்ட தொழிற்சங்கக் கூட்டமைப்பு தொழிலாளர்களின் பலத்தையும், தொழிற்சங்க சக்தியையும் கட்டியெழுப்பி தொழிலாளர்களின் அடிப்படை உரிமையைப் பாதுகாத்துத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தையும் உயர்த்த முன்வரவேண்டும் என்று தொழிலாளர் விடுதலை முன்னணியின் தலைவர் டி.அய்யாத்துரை தெரிவித்தார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

பெருந்தோட்டக் கம்பனிகளும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கமும் தொழிலாளர்களின் உரிமையைப் பறிகொடுத்து 1992ஆம் ஆண்டு முதல் கூட்டு ஒப்பந்தம் செய்து 20 ஆண்டுகள் பூர்த்தியாகிவிட்டன

கூட்டுஒப்பந்தத்தில்கைச்சாத்திடாத தொழிற்சங்கங்கள் அதை எதிர்த்துப் போராட்டம் என்ற பெயரில் தொழிலாளர்களின் உணர்வுகளைத் தூண்டியதோடு, கூட்டு ஒப்பந்தத்துக்கு மாற்றுப் பரிகாரம் செய்யாமல் தொழிலாளர்களை ஏமாற்றி இருபது ஆண்டுகள் கடந்துவிட்டன.

இப்போதாவது கூட்டு ஒப்பந்தத்துக்கு எதிரான தொழிற்சங்கங்கள் ஒன்று கூடி தொழிலாளர்களுக்கு விமோசனம் தேட முன்வரவேண்டும்.

கூட்டு ஒப்பந்தம் செய்யும்போது தொழிலாளர்கள் காலம் காலமாக அனுபவித்து வந்த உரிமையைப் பறிகொடுக்காது பெருந்தோட்டக் கம்பனிகளுடன் தொழிலாளர்கள் சார்பாக கூட்டு ஒப்பந்தங்கள் செய்வதே தொழிற்சங்க மரபாகும். தொழிலாளர் அனுபவித்து வரும் உரிமைகளை, சலுகைகளை கம்பனிகளுக்கு விட்டுக்கொடுத்து கூட்டு ஒப்பந்தம் செய்தது தொழிலாளர்களுக்குச் செய்த துரோகமாகும்.

இருபது ஆண்டுகளுக்குப் பின் கூட்டு ஒப்பந்தத்தை பெருந்தோட்டக் கம்பனிகளும் எதிர்த்து தன்னிச்சையாகத் தோட்டத்துக்குத்தோட்டம்வேலைப் பழுவைக் கூட்டி தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்ட முற்பட்டுள்ளனர்.

தொழிலாளர்கள் கூட்டு ஒப்பந்தத்தையும், அதற்குத் துணைபோன தொழிற்சங்கங்களையும், தோட்ட நிர்வாகத்தின் நடவடிக்கையை எதிர்த்து போராட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

இந்தப் போராட்டங்களை முறியடித்து தொழிலாளர்களை ஏமாற்ற பேச்சு என்ற பெயரில் ஏமாற்றித் தொழிலாளர்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள்.

ஒப்பந்தம் செய்தஇரண்டு தொழிற்சங்கங்களும் போட்டி போட்டுத் தொழிலாளர்களை ஏமாற்றும் நாடகத்தில் ஈடுபட்டுள்ளதைக் கண் கூடாகக் காண்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## சம்மாந்துறை டிப்போ ஊழியர்கள் பகிஷ்கரிப்பு



சம்மாந்துறை பஸ் டிப்போ ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில்...

சம்மாந்துறை,மார்ச் 17

இலங்கை போக்குவரத்துச் சபையின் சம்மாந்துறை பஸ் டிப்போ ஊழியர்கள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

ஊழியர்களின் ஆரம்ப அடிப்படைச் சம்பளத்தை 11,730 ரூபாவாக உயர்த்து, உரிய தினத்தில் மாதாந்த சம்பளத்தை வழங்கு, சேமலாப நிதியை உரிய தினத்தில் முறையாக வங்கியில் வைப்பிலிடல், ஒருங்கிணைப்பு என்ற போர்வையில் இலங்கை போக்குவரத்துச் சபையை அழித்தொழிப்பதை நிறுத்தல், நிதி ஏற்பாடுகளை குறைக்காது பொது திறைசேரியின் மூலம் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு தொடர்ச்சியாக பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தல் போன்ற 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து போக்குவரத்து ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

## பெரும் தொகை வெளிநாட்டு சிகரெட் அக்கரைப்பற்றில் சிக்கின

அம்பாறை,மார்ச் 17

அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மதுவரி திணைக்களம் மேற் கொண்ட திடீர் சுற்றிவளைப்பு தேடுதலின்போது பெருந்தொகை வெளிநாட்டு சிகரெட் கைப்பற்றியதுடன் போலி பீடி தயாரிப்பு நிலையம் ஒன்றையும் கண்டு பிடித்துள்ளனர்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட மது வரித்திணைக்கள அத்தியட்சகர் ந.சுசாதரன் தலைமையில், அம்பாறை மாவட்ட மதுவரித் திணைக்கள அத்தியட்சகர் எஸ்.தங்கராசா, கல்முனை பொறுப்பதிகாரி நியுட்டன், அவுஸ்கோன் ஆகியோர் அடங்கிய குழுவினர் இந்தத் தேடுதலில் ஈடுபட்டனர்.

அக்கரைப்பற்று மற்றும் பாலமுனை ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது, வெளிநாட்டில் இருந்து கடத்திவரப்பட்ட 4 ஆயிரம் சிகரெட்களை கைப்பற்றியுள்ளதுடன், பீடியில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட லேபல் சுற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நிலையம் ஒன்றையும் கண்டுபிடித்துள்ளனர்.

10 ஆயிரம் போலி லேபல் சுற்றப்பட்ட பீடிகளையும் கைப்பற்றியுள்ளதாக மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட மதுவரித் திணைக்கள அத்தியட்சகர் ந.சுசாதரன் தெரிவித்தார்.

வெளிநாட்டு சிகரெட்டுக்களைக் கடத்திவந்து விற்னை செய்த ஐந்து வர்த்தகர்கள் கைதுசெய்யப்பட்டதுடன், போலி பீடி லேபல் சுற்றிக்கொண்டிருந்த இரண்டு பேரும் கைதுசெய் யப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்ட அனைவரும் மதுவரித் திணைக்களத்தின் கல்முனை அலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

இந்த நபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச)



கிழக்கின் மூத்த எழுத்தாளர் வீ.சண்முகநாதனின் மூன்று நூல்களின் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மூத்த எழுத்தாளரைப் பாராட்டி அம்பாறை மாவட்ட தமிழர் மகா சபைத் தலைவர் ரீ.மகேஸ்வரன் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (ச-31)

## தனியாருக்கு நெல் விற்பனை

மட்டக்களப்பு,மார்ச் 17

மட்டக்களப்பு மாவட்ட, படுவான் கரைப்பகுதியில் நெல் கொள்வனவு செய்வதற்குரிய போதிய களஞ்சிய வசதி இல்லாமையால் அதிகளவான நெல்லைக் குறைந்த விலைக்கு விற்பனை செய்யவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தாம் தள்ளப்பட்டுள்ளதாக இந்தப் பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான் கரையை மையப்படுத்தி ஒரு நெற்களஞ்சியசாலையே இயங்கி வருகின்றது.

சிறுபோகம், பெரும்போகம் என்று இரண்டு போகங்களுக்கு நெற்செய்கை மேற்கொள்கின்ற போதிலும் நெல் களஞ்சிய வசதியின்மையால், நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு வழங்க முடியாமல் ஏனைய பிரதேசங்களிலிருந்து வரும் தரகர்களுக்கு குறைந்த விலைக்கு நெல் விற்பனை செய்யப்படுவதாக பிரதேச விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (ச)

## அமைச்சர் திறந்து வைத்த கட்டடத்துக்கு மூடுவிழா

மட்டக்களப்பு, மார்ச் 17

மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் சம்மேளனத்தின் மாவட்ட அலுவலகம் திறக்கப்படாமல் கடந்த 7 மாதங்களாக மூடப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மீனவர்கள் தெரிவிக்கின்றனர். மட்டக்களப்பு, கல்லடியிலுள்ள மாவட்ட கடற்றொழில் அலுவலகத்துக்கு அண்மையில் அமைக்கப்பட்டுள்ள கடற்றொழில் சம்மேளனத்தின் அலுவலகக் கட்டடத்தை கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரட்ன திறந்துவைத்தார்.

இந்தக் கட்டடம் திறந்துவைக்கப்பட்ட நாள் முதல் இன்றுவரை மூடப்பட்ட நிலையிலேயே உள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர். இந்தக் கட்டடம் திறக்கப்படாததால் மீனவர்கள் தமது எரிபொருள் மானிய விண்ணப்பப் பத்திரத்தில் மாவட்ட கடற்றொழில் அமைப்பு நிர்வாகிகளின் பரிந்துரை கையொப்பம் பெறுவதற்காக அவர்களின் வீடுகளுக்குச் செல்ல வேண்டியுள்ளதாக மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் சம்மேளனத்தின் தலைவர் விவேகானந்தராசா மற்றும் அதன் செயலாளர் எம்.முனாபரிடம் கேட்டபோது, இந்த அலுவலக கட்டடத்தில் செயற்படுவதற்கான வசதி வாய்ப்புக்கள் இதுவரை ஏற்படுத்தித் தரப்படவில்லை. இதன் காரணமாகவே இந்தக் கட்டடம் திறக்கப்படாதுள்ளது. இந்தக் கட்டடம் திறக்கப்படாவிட்டாலும் மீனவர்களுக்குரிய வேலைகளை நாங்கள்செய்து கொடுக்கின்றோம் என்று கூறினர். (ச)

## ரயிலில் மோதி ஒருவர் சாவு



மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கூழாவடி பகுதியில் ரயிலில் மோதி ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை காலை மரணமானார் என்று மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர். தம்பிலுவில், அரசடி பிரதேசத்தைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான 45 வயதுடைய நபரே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த ரயிலில் மோதியே இவர் இறந்துள்ளார். உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இவரது மரணம் தொடர்பான விசாரணைகளை மட்டக்களப்பு சிறுகுற்றப்பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரிஜ.பி.ஜயரத்னதலைமையிலான குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.(ச)

## சமயப் பண்புகளை கற்கும் இடம் அறநெறி

மருதமுனை, மார்ச் 17

சமயப்பண்புகளையும், ஒழுக்க விழுமியங்களையும் கற்கின்ற புனிதமான இடம் அறநெறிப் பாடசாலையாகும். இங்குதான் நல்ல சமூகப் பற்றுள்ள பிரஜைகள் உருவாக்கப்படுகின்றார்கள் என்று மணற்சேனை எம். ஆர்.சி. நிறுவனத்தின் இயக்குநரும், பேராசிரியருமான எம்.இராஜேஸ்வரன் தெரிவித்தார்.

கல்முனை சைவ மகா சபையின் அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும், ஆசிரியைகளுக்கு நிதியுதவியும் வழங்கிய வைபவம் அண்மையில் கல்முனை இராமகிருஷ்ணர் பாடசாலையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மனித வாழ்வுக்கு வழி காட்டுவது அறநெறியாகும். நல்ல பிரஜைகளை அறநெறியின் மூலம் உருவாக்க முடியும் என்று அவர் தெரிவித்தார். ஆகவே, அறநெறிக்கல்விக்குப் பெற்றோர்கள் முக்கியத்துவம் கொடுத்து பிள்ளைகளை அறநெறியின் பக்கம் திருப்ப வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## 5,000 அபராதம்

அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி உழவு இயந்திரத்தில் ஆற்றுமணல் ஏற்றிய ஒருவருக்கு 5,000 ரூபா தண்டம் விதித்து பொத்துவில் நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஐ.என்.றிஸ்வான் கடந்த புதன்கிழமை தீர்ப்பளித்தார்.

ஆற்றுமணல் ஏற்றுவதற்கான அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேசத்தில் உழவு இயந்திரத்தில் ஆற்றுமணல் ஏற்றிய ஒருவரை கடந்த 7ஆம் திகதி உழவு இயந்திரத்துடன் கைதுசெய்த பொலிஸார், அவரைப் பிணையில் விடுவித்தனர். இந்தநபர் கடந்த புதன்கிழமை பொத்துவில் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது நீதிவான்அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (ச)

# 31 ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08 ★ 08 ★ 1951 | 16 ★ 02 ★ 2012 |



## அமரர் வாரித்தம்பி தவேந்திரம்

எமது குடும்பத் தலைவர் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு நேரடியாக வருகைதந்து ஆறுதல் கூறி சகல வழிகளிலும் உதவியவர்களுக்கும், உள்நாட்டிலும், வெளிநாட்டிலிருந்தும் தொலைபேசி மூலம் ஆறுதல் அளித்தவர்களுக்கும், உடனிருந்து உதவியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி மூலம் ஆறுதல் அளித்தவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு அனைவரையும் இன்று (17.03.2012) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

மீசாலை கிழக்கு,
மீசாலை.

(15782) (6-12-14)

குடும்பத்தினர்.

# நவக்கிரி பிள்ளையாரின் வருடாந்தப் பெருந்திருவிழா

புத்தூர், மார்ச் 17

புத்தூர், நவக்கிரி அருள்மிகு ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து இடம் பெறவுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு தேர்த் திருவிழா இடம்பெறவுள்ளதுடன் மறுநாள் புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (வ)

# மரண அறிவித்தல்

## திருமதி பூமணி நடராஜா



யாழ்ப்பாணம், கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும், திருகோணமலை உவர்மலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூமணி நடராஜா 2012.03.15 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு - செல்லம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற நடராசாவின் (துறைமுக அதிகாரசபை, திருகோணமலை) பாசமிகு மனைவியும், பாலகௌரி (ஆசிரியை, நாமகள் வித்தியாலயம், திருகோணமலை), ராஜேஸ்வரி (ஜேர்மனி), காலஞ்சென்ற குகராஜா, பாலேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், வோல்டன் பெனடிக் சேவியர் (ஜேர்மனி), மகேந்திரராஜா (பிரான்ஸ்), காலஞ்சென்ற சிவசோதி (லண்டன்), சுதந்திரலிங்கம் (லண் டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான நல்லம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியை, பருத்தித்துறை), வேலாயுதபிள்ளை (ஓய்வுபெற்ற பிரதம எழுது வினைஞர், இணுவில்), தங்கரத்தினம் (கொக்குவில்), மகேஸ்வரி (இணுவில்), தவமணி (கொக்குவில்) மற்றும் சண்முகசுந்தரம் (மானிப்பாய்), பரமலிங்கம் (இணுவில்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், டிலிசியா, டிலக்ஷன் (ஜேர்மனி), யாதவன், யதுசாயினி (பிரான்ஸ்), பிருத்துவி, சகானன், கவின்னா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 2012.03.18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் இல. 58, ஆசிரியர் சதுக்கம், உவர்மலையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக திருகோணமலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 58, ஆசிரியர் சதுக்கம்,
உவர்மலை, திருகோணமலை.

தகவல்:
குடும்பத்தினர்.

**கணனி ஆர்வலர்களுக்கும் மாணவர்களுக்குமான ஓர் அரிய சந்தர்ப்பம் Diploma in Computer Courses**

**2012ம் ஆண்டு மாபெரும் கட்டணக்கழிவு**

| Duration 3months,4months | |
|---|---|
| BatchI 17-03-2012 | Ms Office 2007, DTP, Hardware, Graphic Designing, Wep page Designing, Multi Media, Computer Science, Video Editing, Computerized Accounting, AutoCAD, Net Working, Inter Net & e - mail . |
| BatchII 18-03-2012 | |
| BatchIII 21-03-2012 | புதன், வெள்ளி மற்றும் சனி, ஞாயிறு தினங்களில் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. இன்றே எம்முடன் இணைந்துகொள்ளுங்கள் |
| BatchIV 23-03-2012 | |
| (Time:-9am or 3pm) | |

அனைத்து பாடநெறிக்குமான கட்டணம் 1000/= மட்டுமே

**Computer Express**
No 15, Sirambiyadi lane (off stanly Road)
Jaffna. T.P - 021 222 8250, 077 490 7444

Diploma in Accounting Package
Acc Pac,Quick Book,MYOB,Tally
(Sat+Sun 11.00am)
Lecturer:Ashok

# மரண அறிவித்தல்



## கந்தையா சிவராசா

கட்டுவனைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது பழைய நீதிமன்ற வீதி, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவராசா (15.03.2012) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அப்பர் - உருக்குமணி தம்பதியரின் அன்பு மருமகனும் பாலாம்பிகையின் அன்புக்கணவரும் பத்மசிறி (ஜேர்மனி), சிவபவானி (இலங்கை), சிவாஜினி (இலங்கை), இளங்குமரன் (ஜேர்மனி), இளஞ்செழியன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பூமா (ஜேர்மனி), ஜெயசேகரன் (சிறிகாசி விநாயகர் ஸ்ரோர்ஸ் தெல்லிப்பழை), குமுதினி (ஜேர்மனி), திருமகள் (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமனும். யதுகுலன், கிருஸ்ணிகா, பார்த்தீபன், பிரசன்னா, அனுசியா, அனுஸ்கியா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆறுமுகம் - இராஜேஸ்வரியின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான செல்வராசா, தங்கரத்தினம், செல்வரத்தினம் குணராசா மற்றும் நடராசா, அன்னரத்தினம், நாகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.03.2012) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 11 மணிக்கு நடைபெற்று. தகனக்கிரியைக்காக பூதவுடல் உத்தியோடை மயானத்துக்கு (ஏழாலை) எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13 ★ 01 ★ 1944 | 16 ★ 02 ★ 2012 |



## அமரர் இராமலிங்கம் வீரசிங்கம்

கடந்த 16.02.2012 வியாழக்கிழமை சிவபதம் எய்திய மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், 82, 4/4, ஹம்டன் லேன், வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட எமது குடும்பத் தலைவர் அமரர் இராமலிங்கம் வீரசிங்கத்தின் மரணச் செய்தி அறிந்து எமது துயரில் பங்குகொண்டு எமக்கு பேருதவியாக இருந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும், பிறநாடு, உள்நாட்டிலிருந்து மலர்வளையம் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், தொலைத் தொடர்பாடல் மூலம் எமது துயரத்தில் பங்குகொண்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று (17.03.2012) சனிக்கிழமை மு.ப. 11.30 மணியளவில் இல. 75, லோறன்ஸ் வீதி, பம்பலப்பிட்டி, சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும் அவரது ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் தங்களது குடும்ப சகிதம் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

82,4/4, ஹம்டன் லேன்,
வெள்ளவத்தை.
தொ.பே. 0773151298

குடும்பத்தினர்.

# எதிரிகளை விட்டு வைக்காதீர்

## வடகொரியத் தலைவர் சூளுரை



**வட கொரியா சர்வாதிகார ரீதியில் செயற்படுவதாலும், அணு ஆயுதங்களைப் பகிரங்கமாகத் தயாரிப்பதாலும் கடும் கண்டனத்தைச் சந்தித்து வருகிறது.**

சியோல், மார்ச் 17

போர் என்று வந்து விட்டால் இரக்கம் காட்ட வேண்டாம், எதிரிகளை ஒழித்துக் கட்டுங்கள் என்று வடகொரிய தலைவர் கிம் ஜோங் உன் ஆவேசமாகத் தெரிவித்துள்ளார்.

தென் கொரியா, வட கொரியா நாடுகளுக்கு இடையேயான மோதல் அதிகரித்து வரும் நிலையில் தென் கொரியா ஜனநாயக ரீதியில் மிக வேகமாகச் செயற்படுவதுடன், சர்வதேச நாடுகளிடம் நல்ல உறவை வைத்துள்ளது.

ஆனால் வட கொரியா சர்வாதிகார ரீதியில் செயற்படுவதாலும், அணு ஆயுதங்களைப் பகிரங்கமாகத் தயாரிப்பதாலும் கடும் கண்டனத்தைச் சந்தித்து வருகிறது.

இதனையடுத்து நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்த இராணுவம், விமானப் படை, கப்பல் படை ஆகிய மூன்றும் இணைந்து போர் ஒத்திகை நடத்த புதிய தலைவராக பதவியேற்றுள்ள கிம் ஜோங் உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி மூன்று படைகளும் இணைந்து எதிரி நாட்டுக் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்துவது போன்று ஒத்திகை நடத்தப்பட்டது. இந்தப் பயிற்சியைப் பார்வையிட்டு பேசுகையில், அதிபர் கிம் ஜோங் உன் தெரிவித்ததாவது:-

''போர் என்று வந்து விட்டால் இரக்கம் காட்ட வேண்டாம். எதிரிகளை ஒழித்து கட்டுங்கள்'' என்று சுளுரைத்தார்.

இந்தத் தகவலைத் தென் கொரியாவின் பியாங் யோங் அரச செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ளது. ஆனால் இராணுவப் படைகளின் கூட்டுப் பயிற்சி எப்போது , எங்கே நடந்தது என்ற தகவல்வெளியிடப்படவில்லை. (ந)

# சிரியாவில் மக்கள் வீடுகளுக்குள் முடக்கம்



சிரியாவில் இராணுவத்தின் தாக்குதல்கள் அதிகரித்து வருவதையடுத்து வீடுகளை விட்டு வெளியே வருவதைத் தவிர்த்து வருகின்றனர்.

சிரியாவின் மீது உலக நாடுகள் தொடர் அழுத்தங்களைக் கொடுத்து வருவதால், அரச ஆதரவாளர் களின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. இதனால் நாட்டின் ஒரு சில இடங்களில் அவர்கள் வலுப் பெற்றுள்ளனர். எனினும் அரச எதிர்ப்பாளர்கள் இடையே கடும் மோதல் இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் இராணுவத் தாக்குதல் தொடர்பாக தாரா நகரில் வசிக்கும் அபு அகமது என்பவர் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு தொலைபேசியில் கூறியதாவது:-, ரொக்கெட் குண்டுத் தாக்குதல் தீவிரமாக நட்த்தப்படுவதால் வெளியே சென்றால் நிச்சயம் மரணம் என்ற நிலை தான் உள்ளது. எனவே வீட்டுக்குள் பதுங்கியிருக்கிறோம் என்றார்.

இராணுவத்தினரின் இந்தத் தாக்குதலால் அரச எதிர்ப்பாளர்கள் நிலை குலைந்து விட்டனர் எனத் தெரிகிறது. எனினும் அவர்களை அரசுக்கு எதிராக ஒருங்கிணைக்க மேற்கத்தேய நாடுகள் முயற்சிப்பதாகத் தெரிகிறது. (ந)

## சீனாவில் படகு விபத்து

பீஜிங், மார்ச் 17

சீனாவின் குவாங்ஸி ஜுவொங் மாகாணத்தில் ஜுன் ஜியாங் என்னும் ஆற்றில் 28 பயணிகளுடன் பயணித்த கப்பலொன்று மற்றொரு களிமண் ஏற்றிவந்த கப்பலுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 12 பேர் உயிரிழந்துள்ளனர். 8 பேர் காணாமல் போயுள்ளனர்.

அதிக எடையே இந்த விபத்துக்கு காரணமாக இருக்கலாம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. விபத்து நடந்த இடத்தில் மீட்புப் படையினர் பணியில் ஈடுபட்டுள்ளனர். (ந)



எண்ணெய் விலை உயர்வைக் கண்டித்து பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் மக்கள் போராட்டம் நடத்தினர்.

# சிரியாவில காணாமற்போன இரு துருக்கிப் பத்திரிகையாளர்





சிரியாவில் நடக்கும் மக்கள் புரட்சி மற்றும் வன்முறைகளைப் படமெடுத்து செய்தி சேகரிக்கச் சென்ற இரு துருக்கி நாட்டுப் பத்திரிக்கையாளர்கள் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை என துருக்கி நாட்டு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த நாட்டு பத்திரிகையாளர்களான ஆடென் ஒஸ்கோஸ் மற்றும் ஹமீத் கோஸ்குன் இவர்கள் இருவரும் மத்திய கிழக்கு நாடுகளுக்கான செய்தியாளர்களாகப் பணியாற்றி வருகின்றனர்.

'மீலாத்' பத்திரிகைக்காகச் செய்தி சேகரிக்க கடந்த 11 நாள்களுக்கு முன்பு இவர்கள் சிரியாவிற்குச் சென்றனர்.

சிரியாவின் இத்லிப் நகரத்திற்கு வந்து சேர்ந்தவுடன் தமது பத்திரிகை அலுவலகத்திற்கு ஒஸ்கோஸ் தகவல் கூறியுள்ளார். இதற்கு பின்பு அவரிடமிருந்து எந்தத் தகவலும் வரவில்லை.

இந்தநிலையில் இவர்கள் இருவரையும் காணவில்லை என்று 'மீலாத்' பத்திரிகையின் வெளிநாட்டு செய்தி ஆசிரியர் குழுவின் உறுப்பினர் துர்குப் அல்ப் போய் ராஸ் தெரிவித்துள்ளார். (ந)

# அரச குடும்ப விருந்து



பிரிட்டிஷ்பிரதமர் டேவிட் கமரூனுக்கும், அவரது மனைவி சமந்தா கமரூனுக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும், அவரது மனைவி மிச்செல் ஒபாமாவும் விருந்து அளித்தனர்.

இந்த விருந்தில் பிரிட்டன் மற்றும் அமெரிக்காவின் அரசியல் தலைவர்கள், இசையறிஞர்கள், விளையாட்டு வீரர்கள், நடிகர், நடிகைகள் என சுமார் 360பேர்கலந்து கொண்டனர்.

மேலும் இந்த விருந்தில் நடிகர் ஜோர்ஜ் க்லூனி கலந்து கொண்டது பலரையும் வியப்பில் ஆழ்த்தியது.

பிரிட்டிஷ் பிரதமர் கமரூனின் மனைவி உலகப் புகழ் பெற்ற உடையலங்கார நிபுணரான அலெஸ்ஸாண்ட்ரா ரிச் பிரிட்டனின் கலைநயத்தோடு வடிவமைத்த நீல நிற உடையை அணிந்திருந்தார்.

மற்றொரு பிரபலமான மிச்செல் ஒபாமா, தோள்களின் அழகை வெளிப்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்ட மார்ச்செஸாஆடையை அணிந்திருந்தார். (ந)

# இந்து பெண் விவகாரம்

## விசாரணைக்கு அமெரிக்கா உத்தரவு

பாகிஸ்தானில் இந்து மதப் பெண்கள் கடத்தப்பட்டு கட்டாயமாக மதம் மாற்றப்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டு எழுந்ததை அடுத்து, இதற்கான உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அமெரிக்கா கேட்டுக் கொண்டுள்ளது.

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தைச் சேர்ந்த ரிங்கிள் குமாரி என்ற இந்து இளம்பெண், கடந்த மாதம் பாகிஸ்தான் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் மகனால் கடத்தப்பட்டு வலுக்கட்டாயமாக மதம் மாற்றப்பட்டார் எனத் தகவல்கள் வெளியாகின.

இதனைத் தொடர்ந்து அந்தப் பெண் சிந்து உயர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். அப்போது அவர் தான் விரும்பியே மதம் மாறியதாகத் தெரிவித்தார்.

இந்நிலையில் அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாண காங்கிரஸ் உறுப்பினர் பிராட் ஷெர்மேன், ஜனாதிபதி சர்தாரிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது:

கடத்தப் பட்ட ரிங்கிள் குமாரி தற்போது எங்கிருக்கிறார் என்பது அவரது குடும்பத்துக்குத் தெரியவில்லை. அவர் மீண்டும் தனது குடும்பத்துடன் சேர்வதற்கு, உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். ஆசிய மனித உரிமைகள் குழுவின் அறிக்கைப் படி, ஒவ்வொரு மாதமும் 20 முதல் 25 இந்து இளம் பெண்கள் கடத்தப்பட்டு கட்டாயமாக மதம் மாற்றப்படுகின்றனர்.

இந்தச் செயலையும், இந்துக்கள் மீதான ஏனைய தொந்தரவுகளையும் தடுக்க வேண்டும் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந)

# ஆப்கனில் குண்டுத் தாக்குதல்

## 13 பேர் உயிரிழப்பு

காந்தகர்,மார்ச் 17

ஆப்கானிஸ்தானின் காந்தகர் மாகாணத்தின் திராவூத் மாவட்ட வீதியோரம் நடைபெற்ற குண்டுவெடிப்பில் 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவர்களுள் நான்கு பெண்கள், 9 குழந்தைகள் அடங்குவர். இந்தத் தாக்குதலுக்கு தலிபான்கள் பொறுப்பேற்றுள்ளனர்.

நேற்று முன்தினம் அருகே உள்ள ஹோம்லாண்ட் மாகாணத்தில் நடந்த தற்கொலைப் படைத் தாக்குதலில் 9 பேர் உயிரிழந்தனர். இதற்கிடையே காபூல் நகருக்கு அமெரிக்க ராணுவ அமைச்சர் லியோன் பெனற்றா திடீர் வருகை தந்துள்ளார். இந்த நேரத்தில் தற்கொலைப் படைத் தாக்குதல் நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ந)



# ஈரானுக்கு உளவு பார்த்த 22 பேர் கைது

ஈரானுக்காக உளவு பார்த்த குற்றச்சாட்டில் அஸர்பைஜானில் 22 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் ஈரானின் புரட்சிப் படையுடன் தொடர்புபட்டவர்கள் என அஸர்பைஜான் நிர்வாகம் கூறியுள்ளது.

கடந்த மாதம் அஸர்பைஜானின் ஈரான் தூதரகம் மற்றும் யூத மத்திய நிலையம் மீதான தாக்குதல்கள் அந்நாட்டு பாதுகாப்பு படையினரால் முறியடிக்கப்பட்டது. இதே காலப் பகுதியில் தாய்லாந்து, இந்தியா மற்றும் ஜோர்ஜியா ஆகிய நாடுகளின் இஸ்ரேல் இலக்குகள் மீது தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டன. இவை அனைத்தினதும் பின்னணியில் ஈரான் இருப்பதாக சந்தேகம் வெளியாகியுள்ளது.இந்த நிலையில் இவ்வாறு கைதுசெய்யப்பட்ட 22 பேர் மீது தேசத்துரோகம் மற்றும் சட்டவிரோதமாக ஆயுதங்களை பதுக்கி வைத்த குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

இதேவேளை ஈரான் புரட்சிப் படையினர் கட்டளைக்கமைய இஸ்ரேல், அமெரிக்க மற்றும் மேற்கு நாடுகளின் தூதரக அதிகாரிகள் மீதான தாக்குதல்களில் தாம் ஈடுபட்டதாக கைதான சந்தேக நபர்கள் ஒப்புதல் அளித்துள்ளனர். (ந)

# ‘ஆப்கனைவிட்டு வெளியேறுங்கள்’ நேட்டோ படைக்கு ஹர்சாய் உத்தரவு

ஆப்கனில் இருந்த அமெரிக்கப் படைகள் வெளியேற வேண்டும் என தலைநகர் காபூல் உட்பட பல்வேறு பகுதிகளிலும் உள்ள மக்கள் போராட்டங்கள் நடத்தி வருகின்றனர்.



காபூர், மார்ச் 17

ஆப்கானிஸ்தானை விட்டு நேட்டோ படைகள் உடனடியாக வெளியேற வேண்டும் என ஆப்கன் ஜனாதிபதி ஹமீத் ஹர்சாய் உத்தரவிட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தானின்தெற்கு மாநிலமான காந்தகார் பகுதிக்குள் துப்பாக்கியுடன் நுழைந்த அமெரிக்க வீரர் ஒருவர், பொதுமக்களை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார். இந்தத் தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் உட்பட 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தச்சம்பவத்தையடுத்து ஆப்கனில் இருந்த அமெரிக்கப் படைகள் வெளியேற வேண்டும் எனத் தலைநகர் காபூல் உட்பட பல்வேறு பகுதிகளிலும் உள்ள மக்கள் போராட்டங்கள் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் ஆப்கன் அரசு தலிபான் பிரதிநிதிகளுடன் அமெரிக்க இராணுவத் தரப்பில் பேச்சு நடத்தப்பட்டது. இதைத் தலிபான்கள் நிராகரித்து விட்டனர். மேலும் அமெரிக்கப் படைகள் மீது ஆப்கன் அரசும்கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து கிராமங்கள் மற்றும் பின் தங்கிய மலையோரப் பகுதிகளில் இருந்து நேட்டோ படைகள் உடனடியாக வெளியேறவேண்டும் என்று ஜனாதிபதி ஹர்சாய் உத்தரவிட்டுள்ளார். (ந)

## கொங்கோ கிளர்ச்சிக் குழுவின் தலைவர் லுபாங்கா குற்றவாளியே

### குற்றவியல் நீதிமன்றம் தீர்ப்பு



மனித உரிமை மீறலுக்குரிய தண்டனைகளில் இருந்து தப்பித்துக் கொள்ளும் முயற்சிகளுக்கு எதிரான போராட்டத்துக்குக் கிடைத்திருக்கும் ஒரு முன்னகர்வே இந்தத் தீர்ப்பு.

கொங்கோ கிளர்ச்சிக் குழுவின் தலைவரான தோமஸ் லுபாங்கா போர்க் குற்றவாளியென நெதர்லாந்து ஹேக் நகரில் அமைந்துள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

1999 முதல் 2003 வரையிலான காலப் பகுதியில் கொங்கோவில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரில், சிறுவர்களைப் படையில் சேர்த்தது, சிறுமிகள் மீது பாலியல் குற்றங்கள் புரிந்தது, போர்க் குற்றம் புரிந்தமை தொடர்பாகத் தொடுக்கப்பட்ட போர்க்குற்ற வழக்கிலேயே தோமஸ் லுபாங்கா குற்றவாளியென தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை 51 வயதான தோமஸ் லுபாங்கா குற்றவாளியாக அறிவிக்கப்பட்டிருப்பது, படைகளில் சிறுவர்களை இணைத்துக் கொள்ளும் அனைவருக்கும் ஓர் எச்சரிக்கையாக அமையுமென ஐ.நா. சபைச் செயலாளர் நாயகம் பான் கீமூன் தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்ப்பு மனித உரிமை மீறலுக்குரிய தண்டனைகளில் இருந்து தப்பித்துக் கொள்ளும் முயற்சிகளுக்கு எதிரான போராட்டத்துக்குக் கிடைத்திருக்கும் ஒரு முன்னகர்வு என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை கருத்துக் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. (ந)

## ஜாவா தீவு குண்டுவெடிப்பில் 3 பேர் சாவு

இந்தோனேஷியாவின் ஜாவா தீவில் நடந்த குண்டு வெடிப்பில் 3 பேர் உயிரிழந்துள்ளனர். இந்தோனேஷியாவின், சென்ட்ரல் ஜாவா பகுதியில், செமாராங் நகரில் உள்ள வர்த்தக வணிக வளாகம் அருகில் இருந்த பகுதியில், குப்பைகளைத் துப்புரவுத் தொழிலாளி பொறுக்கிக் கொண்டிருந்தார். அப்போது அதில் இருந்த வெடிகுண்டு திடீரென்று வெடித்ததில், அந்த தொழிலாளி உள் ளிட்ட 3 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். இருவர் காயம் அடைந்துள்ளனர்.

## தப்பினர் சுவிஸ் தம்பதியினர்



கடந்த ஜூலை மாதம் பாகிஸ்தான் தலிபான் அமைப்பால் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட சுவிற்சர்லாந்து தம்பதியர், தப்பித்து வந்துள்ளனர் என பாகிஸ்தான் ராணுவ செய்தித் தொடர்பாளர் மேஜர் ஜெனரல் அதார் அப்பாஸ் தெரிவித்துள்ளார்.

சுவிற்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஒலிவர் டேவிட் மற்றும் டேனியலா விட்மர், கடந்த ஜூலை மாதத்தில், பலுசிஸ்தான் மாகாணத்தில் கடத்தப்பட்டு ஆப்கன் எல்லை அருகே வடக்கு வஜிரிஸ்தான் பகுதியில் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த னர். தற்போது தப்பி வந்துள்ள அந்தத் தம்பதி, மிரான்ஷா பகுதியில் உள்ள சோதனைச் சாவடியில் தஞ்சம் புகுந்துள்ளனர். அவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகின்றது. (ந)


## மரண அறிவித்தல்கள்

### கலாநிதி சிவஸ்ரீ சபா.மனோகரக்குருக்கள்



யாழ்ப்பாணம் கரவெட்டியை பிறப்பிடமாகவும் மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரட்ணம் மனோகரக்குருக்கள் (14.03.2012) அன்று சிவபதம் அடைந்தார்; என்பதனை உற்றார் உறவினர் நண்பர்களுக்கு ஆழ்ந்த துயரத்துடன் அறியத்தருகின்றோம்.

இறுதிக்கிரியை தொடர்பாக பின்னர் அறிவிக்கப்படும்.

உப்புக்குளம்,
மன்னார்.

தகவல்:
குடும்பத்தினர்
ஐங்கரசர்மா (மகன்)
(15771) (6-7-12)

### செல்லப்பா இராஜசௌந்தரம்

(இளைப்பாறிய விஞ்ஞான ஆசிரியர், யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை),
(முன்னாள் தனாதிகாரி -கூட்டுறவு வைத்தியசாலை, தெல்லிப்பழை),
(முன்னாள் தனாதிகாரி - ஆதீனப் பிரதிநிதி தென்னிந்திய திருச்சபை, தெல்லிப்பழை),
(முன்னாள் B.O. மெக்லியோட் வைத்தியசாலை, இணுவில்).



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா இராஜசௌந்தரம் (15.03.2012) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார்காலஞ்சென்ற G.C. செல்லப்பா - மாகிறட்சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் 5 ஆவது அருமைப் புதல்வனும், யூனிஸ் சறோஜாவின் பாசமிகு கணவரும், கிறிஸ்ரி கருணராஜ் (London), ஜோ. இன்பராஜ் (Assistant Manager, NSB kilinochchi) ஆகியோரின் அன்பு தந்தையும், சந்திரிணி (London), கிறிஸ்ரிலா தாமரி (Teacher of English Internal Student University of Jaffna) ஆகியோரின் நல்ல மாமனும் றொஷான், ஜேன் ஜோதினி, றொவான், ஜேனற், ஜொயலின் ஆகியோரின் அன்புப் பேரனும், சுதன், சுரேஷ், பிரதீப் ஆகியோரின் அன்பான அங்கிளும், காலஞ்சென்ற இராசம்மா, வரத்துங்கம் (அக்கா), இராஜரட்ணம், Dr. இராஜேந்திரம், இராஜகுணநாயகம் மற்றும் இராஜபூபதி (பேபி), இராஜதேவி, ஞானோதயம் (தேவி) ஆகியோரின் இனிய சகோதரனும், காலஞ்சென்ற வரத்துங்கம் மகேஸ்வரி மற்றும் கற்பகம் செல்வமணி, ஞானோதயம் ஆகியோரின் அன்பான மைத்துனரும், காலஞ்சென்ற தெய்வேந்திரா மற்றும் சாமுவேல் கருனேந்திரா ஆகியோரின் அன்பின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை (18.03.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கம் அவர்களது குடும்ப சேமக் காலையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

8 ஆம் கட்டை,
மல்லாகம்.

தகவல்:
ஜோ இன்பராஜ் (மகன்)
(18769) (2-6-7)

## வாகனம் விற்பனைக்கு

TATA -207 சிங்கிள் வீல், பச்சை நிறப் பிக்கப் 500 Km ஓடியது.உடன் விற்பனைக்கு.

தொடர்பு:0212222912

(15857) (6-9-12)

## கடை வாடகைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் கிழக்குச் சந்தியில் சகல வசதிகளுடனும் கூடிய கடை வாடகைக்கு உண்டு. 35 அடி நீளம், 10 அடி அகலம்.

தொடர்பு : T.P. 077 7250900

(15766)(9-7-8)

## விற்பனைக்கு

8 வருடமாக ஒரே கைப்பாவனையில் உள்ள NP JT xxxx தொடர் இலக்கம் உள்ள பச்சைநிற Batch Model Super cup Lancer 50 மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0772002442

## காணி விற்பனைக்கு

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில், கதிரிப்பாய் கிராம சேவகர் பகுதியில், இடைக் காடு வளலாய் பகுதியிலிருந்து அச்சுவேலி செல்லும் வீதி ஓரமாக ஐந்து (05) பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. விலை பரப்பு 2½ லட்சம்.

வாங்க விரும்புவோர் 0772811105 அல்லது 077 9237842 எனும் கையடக்கத் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## மணமக்கள் தேவை

★ 87 இல் பிறந்த 8 இல் செவ்வாய் உடைய 26 ½ பாவமுடைய அவுஸ்திரேலியா பிரஜாவுரிமை பெற்ற மணமகளுக்கு ஊரில் பட்டதாரி மணமகன் தேவை.
★ 83 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 20 ½ பாவமுடைய சுவிஸில் டாக்டராகப் பணிபுரியும் மணமகளுக்கு ஜேர்மனி, லண்டன், சுவிஸில் டாக்டர், இஞ்சினியர், எக்கவுண்டன் மணமகன் தேவை.
★78 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 27 பாவமுடைய லண்டனில் பிரஜாவுரிமை பெற்று எக்கவுண்டனாகப் பணிபுரியும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை. (சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.

மேலும் டாக்டர்கள், இஞ்சினியர்கள், பட்டதாரிகள், வர்த்தகர்கள், சைவபோசனமுள்ள அரச உத்தியோகத்தர்கள் வெளிநாட்டில் பிரஜாவுரிமை பெற்ற மணமக்களும் எம்மிடம் உள்ளனர்.

தொடர்பு : கமலக்கண்ணன் திருமணசேவை
இல. 320, கோயில் வீதி, நல்லூர்.
077 6070862

## கண்ணீர் அஞ்சலி



எமது கழகத்தின் பயிற்றுவிப்பாளரான V.K சண்முகலிங்கம் அவர்களின் அன்பு மனைவி

### அமரர் லலிதா சண்முகலிங்கம்

(ஓய்வு பெற்ற உப அதிபர், யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கழுகுகள் விளையாட்டுக் கழகம்,
நெற்கொழு,
வல்வெட்டித்துறை.
(15736) (6,9,12)

## மரண அறிவித்தல்

### தம்பாப்பிள்ளை பாலசிங்கம்



கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பாப்பிள்ளை பாலசிங்கம் புதன்கிழமை (14.03.2012) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி தம்பாப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி தியாகராசா - இராசம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், பாலினி, சுலோசனா, சதீஸ்குமார், அனுதினி, சிவகுமார், ராகினி, ஐந்துயா ஆகியோரின் தந்தையும், சுதாகர், பரமானந்தராசா, சுஜீவன், ரமணன், தயாளினி, கவிதா ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றவர்களான முத்தையா, சுப்பிரமணியம், துரைராசா, செல்வரத்தினம், நேசம்மா, கனகம்மா மற்றும் இராசமணி ஆகியோரின் அன்புச்சகோதரனும் கார்த்திகா, சாதுஜன், சஞ்சயன், யதுசன், அபிநயா, துக்சிகா, தனுஷ், மதுசன், கம்ஷா, பவிஷா, வைஸ்ணவி, வாகீசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (18.03.2012) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ந.ப.12.00 மணியளவில் ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை மேற்கு,
கலட்டி,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்
(15738) (6-7-12)

# இலங்கைத் தூதர் பிரசாத்தை இந்தியாவிலிருந்து வெளியேற்றுக

## கம்யூ. ராஜா வலியுறுத்து



தமிழ்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டவர்கள். அவர்களை விசாரணை செய்ய வேண்டும் என்றெல்லாம் திமிர்த்தனமாகப் பேசிய இலங்கைத் தூதர் பிரசாத் காரியவசத்தை மத்தியஅரசு கண்டித்தது போதாது. அவரை இந்தியாவை விட்டே வெளியேற்ற வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலர் டி. ராஜா வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் பற்றி விமர்சித்த தமிழ் நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்றும் அவர்கள் குறித்து இந்தியா விசாரிக்க வேண்டும் என்றும் டில்லியில் உள்ள இலங்கைத் தூதர் வெளியிட்ட கருத்து இந்தியாவில் கடும் சர்ச்சைக் குள்ளாகியுள்ளது.

ஊடகம் ஒன்றுக்கு தூதுவர் பிரசாத் காரியவசம் அளித்த பேட்டியை அடுத்து நேற்றுமுன்தினம் இந்திய வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்டு அவர் கண்டிக்கப்பட்டார்.

இதையடுத்து, அவர் தமிழ்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் பகிரங்க மன்னிப்புக் கோரியுள்ளார்.

தமிழ்நாடு நாடாளுமன்ற உறுப்பினர்களை, தான் அவ்வாறு குறிப்பிடவில்லை என்றும் பிரசாத் காரியவசம் குத்துக்கரணம் அடித்துள்ளார்.

இதுகுறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலர் டி.ராஜா மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு நாடாளுமன்ற உறுப்பினர் கள் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டவர்கள், வேண்டும் என்றே மத்திய அரசுக்கு நெருக்கடி ஏற்படுத்தி வருகின்றனர். அவர்களை விசாரிக்க வேண்டும் என்று திமிர்த்தனமாகப் பேசியுள்ளார் தூதர் காரியவசம்.

தூதுவர் பிரசாத் காரியவசம் வரம்பு மீறிப் பேசியுள்ளார். தேவையில்லாமல் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களை விமர்சித்துள்ளார். இந்த அடாத செயலுக்கு இதுவரை இந்திய அரசு பகிரங்கமாகக் கண்டனம் தெரிவிக்கவில்லை.

காரியவசத்தின் பேச்சு குறித்து நாங்கள் நேற்று முன்தினம் வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவிடம் முறைப்பாடு தெரிவித்தோம். மேலவையிலும் இந்தப் பிரச்சினையை எழுப்பினேன்.

தற்போது வெளிவிவகாரத்துறை இணைச் செயலரிடம் பகிரங்க மன்னிப் புக் கேட்டுள்ளார் காரிய வசம் என்று செய்தி வந்துள் ளது. ஆனால் இது போதாது. அவரை மத்திய அரசு பகிரங்கமாகக் கண்டிக்க வேண்டும். கண்டனம் தெரிவிக்க வேண்டும். காரியவசத்தை இந்தியாவை விட்டு அனுப்ப வேண்டும் - என்றார் தூதர்.

# சோனியா படத்துக்கு செருப்பு மாலை



இந்தியா, இலங்கைக்கு ஆதரவளிக்கும் என்ற தகவல் கசிந்ததால் கோவை பெரியார் திராவிடர் கழகத்தின் பொதுச்செயலாளர் கு.ராமகிருஷ்ணன் தலைமையில் திரண்ட தோழர்கள், சோனியா காந்தியின் உருவப்படத்துக்கு செருப்பால் அடித்தும் தீயிலிட்டுக் கொளுத்தியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில், இலங்கைக்கெதிராக அமெரிக்கா கொண்டுவரவுள்ள தீர்மானத்துக்கு பல நாடுகள் தமது ஆதரவை வழங்கி வருகின்றன.

இந்த நிலையில், இந்திய அரசு, அமெரிக்கா முன்வைத்துள்ள இலங் கைக்கு எதிரான தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்று தமிழகத்தில் இருந்து அனைத்துக் கட்சியினரின் குரல்களும் நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் மூலமாக வலியுறுத்தப்பட்டிருப்பதுடன் ஆர்ப்பாட்டங்களும் இடம் பெற்ற வண்ணம் உள்ளன.

ஆனால், இந்திய மத்திய அரசு, அவர்களின் குரல்களுக்கு செவி சாய்க்காமல் இருப்பதால் இந்தியா, இலங்கைக்கு ஆதரவாகவே வாக்களிக்கும் என்ற செய்திகள் கசிந்து கொண்டிருக்கின்றன.

இதனால், கோபமடைந்த கோவை பெரியார் திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் கு.ராமகிருஷ்ணன் தலைமையில் திரண்ட தோழர்கள், கோவை காந்திர புரத்தில் உள்ள பெரியார் சிலை முன்பாக சோனியா காந்தியின் உருவப் படத்தை செருப்பால் அடித்தும், தீயி லிட்டுக் கொளுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திடீரென்று இடம்பெற்ற இந்த சம்பவத்தால் பதற்றத்துக்குள்ளான கோவை மாநகர பொலிஸார், அவர்களை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெரியார் திராவிடர் கழகத்தின் பொதுச்செயலாளர் கு.ராமகிருஷ்ணன், இலங்கைக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்தால், தமிழகத்துக்கு வரும் காங்கிரஸாருக்கு தொடர்ந்து கறுப்புக் கொடி காட்டி போராட்டம் செய்வோம் என்று கோஷமிட்டுள்ளார். (வ)

# புதுவை சட்டக் கல்லூரி வளாகத்தில் மஹிந்தவின் கொடும்பாவி எரிப்பு

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா கொண்டுவந்துள்ள பிரேரணையை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று புதுச்சேரி சட்டக்கல்லூரி, தாகூர் கலைக்கல்லூரி மாணவர்கள் நேற்று முன்தினம் போராட்டத்தில் குதித்த னர். அதன்போது, கல்லூரி வளாகத்தில் மாணவர்கள் மஹிந்த ராஜபக்ஷவின் கொடும்பாவியை எரித்தனர்.

இலங்கைக்கு எதிரான பிரேரணையை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று தமிழகம் முழுவதும் போராட்டங்கள் நடந்து வருகின்றன.

இதைப்போல புதுவையிலும் போராட்டம் வெடித்துள்ளது. நேற்றுமுன்தினம் சட்டக்கல்லூரி, தாகூர் கலைக்கல்லூரி மாணவர்கள் போராட்டத்தில் குதித்தனர்.

தொடர்ந்து நேற்றுமுன்தினம் மீண்டும் சட்டக் கல்லூரி மாணவர்கள் போராட்டம் நடத்தினர். கல்லூரி வளாகத்தில் அவர்கள் இலங்கைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர்.

பின்னர் கல்லூரி வளாகத்தில் மாணவர்கள் மஹிந்த ராஜபக்ஷவின் கொடும்பாவியை எரித்தனர். ஆனால் பொலிஸார் அவர்களைத் தடுக்கவில்லை.

இதுகுறித்து காலாப்பட்டு பொலிஸார் தெரிவித்ததாவது:

மாணவர்கள் கல்லூரி வளாகத்திலேயே இந்தப் போராட்டத்தை நடத்தியதால் இதனைத் தடுத்து நிறுத்தி நடவடிக்கை எடுக்க முடியவில்லை - என்றனர்.

# ஜெனிவாப் பிரேரணையை ஆதரிக்குமாறு சென்னையில் மாணவர் ஆர்ப்பாட்டம்



இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் கொண்டுவரப்பட்டுள்ள பிரேரணையை இந்திய அரசு ஆதரிக்கவேண்டும் என்று சென்னை விவேகானந்தாக் கல்லூரி மாணவர்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சென்னை மயிலாப்பூரில் உள்ள கல்லூரி வளாகத்தில் கூடிய மாணவர்கள், இலங்கை அரசுக்குச் சாதகமாக செயற்படுவதாகக் கூறி, மத்திய அரசுக்கு எதிராகக் கோஷம் எழுப்பினர்.

உலகம் முழுவதும் உள்ள 22 நாடுகள் பிரேரணையை ஆதரிப்பதாக அறிவித்துள்ள நிலையில், இந்திய அரசு தொடர்ந்து மௌனம் சாதிக்கிறது என்று மாணவர்கள் குற்றம் சாட்டினர். (வ)

# மத்திய அரசின் மழுப்பல் இலங்கைக்கு சாதகமாகலாம்

## ஜனநாயகக் கட்சி நிறுவுநர் பாரிவேந்தர்

சென்னை, மார்ச்.17

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஐ.நாவில் கொண்டுவர அமெரிக்கா முன்வந்துள்ளது. இந்த விவகாரத்தில் தமிழக அரசியல் கட்சிகள் அனைத்தும் ஓரணியில் திரண்டுள்ளது விடியலுக்கான திருப்புமுனையாகும். ஆனால், மத்திய அரசு தனது நிலைப்பாட்டை மழுப்பி வருவது மறைமுகமாக இலங்கைக்குச் சாதகமாக அமைந்து விடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது என்று ஜனநாயக கட்சியின் நிறுவுநர் பாரிவேந்தர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்ததாவது:

மத்திய அரசு உடனே தனது நிலைப்பாட்டை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள், இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரிக்கும்போது இந்தியா தயங்குவது மனித உரிமைக்கு எதிரான செயலாகும் - என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

# ஜெனிவா தீர்மானத்தை ஆதரிக்குமாறு பிரதமருக்கு தந்தி

## இளைஞர் காங்கிரஸ் அனுப்பியது



ஈரோடு,மார்ச். 17

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை வலியுறுத்தி பிரதமர் மன் மோகன் சிங் மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா ஆகியோருக்கு இளைஞர் காங்கிரஸார் ஈரோட்டில் இருந்து தந்தி கொடுத்துள்ளனர்.

இலங்கையில் நடந்த தமிழர்களுக்கு எதிரான போரில் மனித உரிமை மீறல் நடந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இதுதொடர்பான தீர்மாணம் ஐ.நா. சபையில் கொண்டுவரப்பட உள்ளது. இந்த தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவு அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு வருகிறது.

இதை வலியுறுத்தி பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா ஆகியோருக்கு இளைஞர் காங்கிரஸார் ஈரோட்டில் இருந்து தந்தி அனுப்பியுள்ளனர்.

தமிழக இளைஞர் காங்கிரஸ் தலைவர் யுவராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஈரோடு நாடாளுமன்ற தலைவர் சுரேஷ், துணைத் தலைவர் மக்கள் ராஜன், ஈரோடு சட்டமன்ற தலைவர் ராஜேஷ் ராஜப்பா, மாநில இளைஞர் காங்கிரஸ் முன்னாள் துணைத் தலைவர் ராஜேஷ், மற்றும் நிர்வாகிகள் ஸ்டார் விஜய், சம்பத், எஸ் ஆர் சின்னசாமி, பாட்சா, முகமது அர்சத், அன்னபூரணி உட்பட பலர் கலந்துகொண்டனர். (வ)

## 2ஜி விவகாரம்

# மார்ச் 20 இல் நீதிமன்றில் மாறன் சகோதரர்கள்

டில்லி, மார்ச்.17

2ஜி ஸ்பெக்ட்ரம் விவகாரம் தொடர்பான விசாரணைக்கு எதிர்வரும் 20 ஆம் திகதி நேரில் முன்னிலையாகுமாறு, தயாநிதி மாறன், கலாநிதிமாறன் ஆகியோருக்கு அமலாக்கப் பிரிவு அழைப்பாணை அனுப்பி உள்ளது.

ஏர்செல் நிறுவனத்துக்கு அலைக்கற்றை ஒதுக்கீடு செய்வதில் காலதாமதம் செய்தமை மற்றும் மலேசிய நிறுவனமான மேக்சிஸ் நிறுவனத்துக்கு விற்கும்படி வற்புறுத் தியமை தொடர்பில் தயாநிதிமாறன் மீது குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்தக்குற்றச்சாட்டின் அடிப்படையில் மத்திய அமுலாக்கப் பிரிவினர் மேற்கொள்ளும் விசாரணைகளுக்கு நேரில் சமூகம் தர வேண்டும் என்றே மேற்படி அழைப்பாணை அனுப்பப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

பண மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் விசாரணை நடத்தப்பட்டு வரும் இந்த வழக்கு தொடர்பான விசாரணைக்கு, எதிர்வரும் 20 ஆம் திகதி கலாநிதிமாறன் அல்லது அவரது பிரதிநிதி நேரில் சமுகந் தர வேண்டும் என்றும் அதேபோல் எதிர்வரும் 21 ஆம் திகதி விசாரணைக்கு தயாநிதிமாறன் அல்லது அவரது பிரதிநிதி விசாரணைக்கு நேரில் சமுகந் தரவேண்டும் என்று அனுப்பப்பட்டுள்ள அழைப்பாணையில் குறித்த செய்தித் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

# அண்ணா நூலகத்தை இடம்மாற்றினால் தீக்குளிப்பேன்



சென்னை,மார்ச்.17

அண்ணா நூலகத்தை இடம் மாற்றினால் அன்றைய தினமே தீக்குளிப்பேன் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி சூளுரைத்தார்.

சங்கரன்கோயில் இடைத் தேர்தலை ஒட்டி, தேர்தல் பிர சார பொதுக்கூட்டத்தில் தி.மு. க. தலைவர் கருணாநிதி பங்கேற்று தி.மு.க.வுக்கு ஆதரவாக வாக்குகளைச் சேகரித்து வருகிறார்.

இந்தநிலையில் அவர் பொதுக் கூட்டத்தில் தெரிவித்ததாவது:

- சங்கரன்கோவில் இடைத் தேர்தல், நடந்து வரும் 9 மாத கால ஆட்சியை எடை போடும் தேர்தல். ஒளி வழங்குவ தாகக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், தற்போது இருளில் ஒளிந்திருக்கின்றனர் என்று குற்றம் சாட்டிய அவர், அண்ணா நூலகத்தை இடம்மாற்றினால் அன்றைய தினமே தீக்குளிப்பேன் என்று எச்சரித்தார். (வ)

# 2009 இல் சிறுமி வன்புணர்வு வழக்கு குறுக்கு விசாரணை மே மாதத்துக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 17

மல்லாகம் கோட்டைக் காட்டில் 2009 ஆம் ஆண்டு சிறுமி ஒருவரை வன்புணர்வுக்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் சந்தேக நபர் மற்றும் அவருக்கு உதவி புரிந்ததாகக் கூறப்படும் சந்தேகநபர் ஆகிய இருவர் மீதான வழக்கு குறுக்கு விசாரணைக்காக மே 10 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

2009 ஜூன் 05 ஆம் திகதி கோட்டைக் காட்டில் வன்புணர்வுச் சம்பவம் இடம் பெற்றிருந்தது. இது சம்பந்தமாக சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து சந்தேகத்தின் பேரில் சிறுமியின் உறவினர் ஒருவரும் மற்றொருவரும் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதன் பேரில் அது பின்னர் யாழ்.மேல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டிருந்தது.

இந்த வழக்கு விசாரணையின் போது ஐந்தாவது சாட்சியென சம்பவம் இடம் பெற்ற காலப் பகுதியில் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக இருந்த லுடவைக்கின் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. தவிர பாதிக்கப்பட்ட சிறுமியின் வாக்கு மூலமும் பதிவு செய்யப்பட்டது.

அதன் குறுக்கு விசாரணைக்காகவே வழக்கு மே 10 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(ம-4)

# நஷ்டஈடு இன்றி காணி சுவீகரிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 17

வீதி அபிவிருத்தி அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்டுவரும், வீதி அகலிப்பு நடவடிக்கைகளின் போது நஷ்ட ஈடு வழங்காமல் காணியை சுவீகரித்தமைக்கு எதிராக மீசாலையைச் சேர்ந்த நபர் ஒருவர் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் கிளையில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

வீதி அபிவிருத்தி அதிகார சபையால் பிரதான நான்கு வீதிகளிலும் அகலித்துப் புனரமைக்கப்பட்டு வருகின்றன. வீதி அகலிப்பு நடவடிக்கையின் போது தனியார் காணிகள் பலவும் சுவீகரிக்கப்பட்டன. இருப்பினும் சுவீகரிக்கப்பட்டமைக்கு நஷ்ட ஈடு வழங்கப்படவில்லை.

இதன் காரணமாக மீசாலைப் பகுதியைச் சேர்ந்த, நபரொருவர் தனது காணி மற்றும் அதனுடன் இணைந்த தென்னைகளும் வீதி அகலிப்புப் பணிகளின் போது சுவீகரிக்கப்பட்டதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய கிளையில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த முறைப்பாடு குறித்து நட்டஈடு செலுத்தாமல் காணியை சுவீகரித்தமை, தென்னை மரங்களை அழித்தமை என்ற இரு பிரிவுகளில் விசாரணைகள் மேற்கொள்ள தீர்மானித்திருப்பதாக மனித உரிமை ஆணைக்குழுவினர் தெரிவித்தனர்.

இதேவேளை, இவ்வாறு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு எதிராக திருநெல்வேலியைச் சேர்ந்த நபரொருவரால் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

(ம-5)


## தவில், நாதஸ்வர இசை விருந்து



சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின்
அனுசரணையுடன் நடைபெறவிருக்கும் இலங்கையின்
புகழ் தவில், நாதஸ்வர மேதைகளின் இசை விருந்து

காலம் - 18.03.2012 ஞாயிற்றுக்கிழமை
நேரம் - பிற்பகல் 4.00 மணி
இடம் - தென்மராட்சி கலாசார மண்டபம்,
சிவன்கோயிலடி, சாவகச்சேரி.

தலைமை
திரு. வ. ஸ்ரீபிரகாஸ்
(தலைவர், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்)

1. திரு. பஞ்சாபிகேசன் நாகேந்திரம் (சாவகச்சேரி)
2. திரு. இராமமூர்த்தி சிவகுமார் (வழக்கம்பரை)

பங்குபற்றும் தவில் கலைஞர்கள்
1. திரு. தட்சணாமூர்த்தி உதயசங்கர் (அளவெட்டி)
2. திரு. சின்னராசா சுதாகரன் (இணுவில்)
3. திரு. சின்னராசா சதீஸ்குமார் (பருத்தித்துறை)

இந்த தவில் நாதஸ்வர இசை விருந்தினை கண்டு களிக்க அனைவரையும் வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரவேசம் இலவசம்

விளம்பர அனுசரணையாளர்கள்
அபிபோன் செப்
கண்டி வீதி, சாவகச்சேரி. தொ.பே. 021 227 0204
நர்த்தகி பென்ஸி கண்டி வீதி, சாவகச்சேரி.

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான பிறிமா No.1 புறொயிலர் குஞ்சுகள் பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவு செய்யவும்.

தொடர்பு:

| | | |
|---|---|---|
| நல்லூர் பாம் சென்ரர், | நல்லூர் பாம் சென்ரர், | சுட்டி பாம் சென்ரர், |
| 19, முருகேசர் ஒழுங்கை, | கனகபுரம் வீதி, கிளிநொச்சி. | வட்டுக்கோட்டை |
| நல்லூர். 0212226944 | 0776225944 | 0778996085 |

(14752) (45-6)

## VACANCIES

1. COMPUTER OPERATOR (1)
(FEMALE Age 35 - 40)
2. MARKETING REPS (2)
(MALE Age 20 -25)
Call - 072 8032280

## உடனடி வேலை வாய்ப்பு

வட பகுதியில் பிரபல தனியார் "எவெரெடி சுத்திகரிப்பு நிறுவனம்", வைத்தியசாலைகள் சுத்திகரிப்பு பணிக்காக 18 இல் இருந்து 40 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாருக்கும் வேலை வாய்ப்பு உள்ளது. தெல்லிப்பழை, சங்கானை, ஊர்காவற்துறை, கைதடி, சாவகச்சேரி, மந்திகை ஆகிய வைத்தியசாலைகளில் பணிபுரிய விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். நிறுவன சட்ட ஒழுங்குகளுக்கு அமைவாக பணிபுரிதல் அவசியம். கல்வித் தகைமை எதிர்பார்க்கப்படவில்லை.

தொடர்பு: 021-3210063, 077-9746690, 077-6221881

(15776) (7-9-12)

## காணி விற்பனைக்கு

மீசாலை புத்தூர் சந்தியில் (சியாமளா மில் முன்பாக) ஏ- 9 வீதியில், 4 பரப்புக் காணி நன்னீர்க் கிணற்றுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:-
குமரன் சில்க், சாவகச்சேரி.

## கணினி அறிவுடையோர் தேவை

கைதடியில் உள்ள லங்கா எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு கணினியைக் கையாளக்கூடிய தகைமையுடையோரிடமிருந்து விண்ணப்பம் எதிர்பார்க்கப்படுகின்றது. விண்ணப்பங்களை 26.03.2012 ஆம் திகதிக்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.
முகாமையாளர் லங்கா எரிபொருள் நிலையம், கைதடி.

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்,
இல. 19, முருகேசர் லேன், நல்லூர்.

## விற்பனைக்கு

1 வயது நிரம்பிய ஜேமன் செப்பேட் அல்சேசன் ஆண், பெண் நாயும், ரொட்விலர் ஆண் நாயும், பொக்கட்ஸ் பெனியர் ஆண், பெண் நாயும், 3 மாதம் பூர்த்தியான ஜேமன் செப்பேட் அல்சேசன் ஆண்,பெண் நாய்க்குட்டியும், 6 மாதம் பூர்த்தியான பொமேரியன் ஆண்,பெண் நாயும், 1வருடம் பூர்த்தியான J.C இன பசுக் கன்றும், மணிதாரா,வான்கோழி, வாமஸ் விற்பனைக்குண்டு.

தொடர்பு: வி.மயூரன், புன்னாலைக்கட்டுவன் தெற்கு, ஆயக்கடவை பிள்ளையார் கோவிலடி முன்பாக, பூதராயர் கோயிலடி.

(15741) (7-9-12)

## பணிநிலை வேண்டுகோள்

இலத்திரனியல் துறையில் (ELECTRONIC) அனுபவமுள்ள / அனுபவமற்ற வேலையாள்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
0772627704, 0771054210

## டி.ஏ.எம்.பட்டதாரிகள் வைத்தியசங்கம், யாழ்ப்பாணம்

### அவசர கலந்துரையாடல்

இடம்:- நடனமுருகன் வைத்திய நிலையம்
சத்திரச் சந்தி, யாழ்ப்பாணம்.
காலம்:- 18.03.2012 (ஞாயிறு)
நேரம்:- பிற்பகல் 2.00 மணி

D.A.M. வைத்தியர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

க.நவரத்தினம்
தலைவர்.

ஈ.சுந்தரேஸ்வரன்,
செயலாளர்.

(15775) (2-6-7)


## மரண அறிவித்தல்



### சதாசிவம் தெய்வேந்திரம்

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கனடா (Montreal) லை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் தெய்வேந்திரம் (14.03.2012) புதன்கிழமை கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் - இரத்தினம் ஆகியோரின் பாசமிகு புதல்வரும் சற்குணநாதன், செல்வநாதன், சரஸ்வதி, பாக்கியலக்ஷ்மி, பஞ்சரத் தினம், பற்பநாதன், மகாதேவன், சகாதேவன் ஆகியோரின் அன்புச்சகோதரரும் நாகரத்தினம், யோகானந்தசிவம், கோபால சுந்தரம், கமலாதேவி, பேபி, ராணி, சாவித்திரி, மதி ஆகியோரின் மைத்துனரும் சுதர்சன், சுதாகரன், சுகந்தன், சுசிதரன், சுபாஜினி, திருமால், கோகுலன், லக்ஷன், நிரோஷன், மிதிலன், சிந்துஜா ஆகியோரின் மாமனும் தினுஜா, நதீஸ்குமார், மதுஷன், லசிகலா, அனுஷா, சிந்துஜா, அருணன், கௌசிகா, சுகுமாரி, தரணீஸ்வரன் ஆகியோரின் சித்தப்பாவும் கியுற்றிஷா, ஷபிகா, சஜன் ஆகியோரின் அன்புப்பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(யாழ்ப்பாணம், கனடா, வத்தளை)
No.103, சட்டநாதர் வீதி,
நல்லூர்.

தகவல்:
நாகரத்தினம், சரஸ்வதி
சற்குணநாதன் ,செல்வநாதன்
பற்பநாதன் (Germany) 4915228317821
மகாதேவன் (Canada) 14167174430
சகாதேவன்

(15740)(6-7-8)

## மரண அறிவித்தல்

### திருமதி கனகபூபதி சேனாதிராஜா



போர்னியோவைப் பிறப்பிடமாகவும், தேவாலய வீதி, உரும்பிராய் கிழக்கு உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகபூபதி சேனாதிராஜா நேற்று (16.03.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சேனாதிராஜாவின் அன்பு மனைவியும், அனுராஜ்சின் அன்புத் தாயும்,பவானியின் அருமை மாமியும் காலஞ்சென்ற கலைலக்ஷியின் அருமைப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான பத்மநாதன், மனோரஞ்சிதம், பங்கஜம், ரங்கநாதன், டம்பிய பூசணி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2012) சனிக்கிழமை மு.ப.11.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தேவாலய வீதி,
உரும்பிராய் கிழக்கு,உரும்பிராய்.

தகவல்:
அனுராஜ்(மகன்)

(15773) ( 7-9-12)

### எமது போராட்டத்தின் விளைவே... இன்று...

# சர்வதேசத்தில் ஒலிக்கிறது தமிழ் மக்களின் பிரச்சினை



அரசியலை ஒதுக்கி விட்டு ஆன்மீகம் செய்யமுடியாது; ஆன்மிகத்தை ஒதுக்கிவிட்டு அரசியல் செய்யமுடியாது. இரண்டையும் சேர்த்துக் கையாள வேண்டும்.

எருவில், மார்ச் 17

63 வருடங்களாகப் போராடியதன் விளைவாகவே தற்போது எமது பிரச்சினை சர்வதேச மட்டத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

களுவாஞ்சிக்குடி சைவ மகா சபையின் 59ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் இவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று ஜெனிவாவிலே அமெரிக்காவால் கொண்டுவரப்பட்டுள்ள பிரேரணையானது இலங்கை அரசால் உருவாக்கப்பட்ட மனித உரிமை ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உரியமுறையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற பிரேரணை மாத்திரமே.

முள்ளிவாய்க்காலில் ஏற்பட்ட அவலங்களோ, போர்க்குற்றங்களோ அல்ல என்பதனை நாம் அனைவரும் அறிந்திருக்க வேண்டியது கட்டாயக் கடமையாகும்.

அரசியலை ஒதுக்கி விட்டு ஆன்மிகம் செய்ய முடியாது; ஆன்மிகத்தை ஒதுக்கிவிட்டு அரசியல் செய்யமுடியாது. இரண்டையும் சேர்த்துக் கையாள வேண்டியதாக இருக்கின்றது.

இந்த நாட்டிலே அன்றில் இருந்து இன்றுவரைக்கும் பௌத்த ஆதிக்கம் மேலோங்கியே காணப்படுகின்றது. இதனால் இனவாதம் மேலோங்கி நாங்கள் சிறுபான்மையினராக்கப்பட்டுத் தற்போது எதுவும் அற்றவர்களாக நடு வீதியில் நிற்கின்றோம் - என்றார். (ச-31)

# ஐரோப்பாவுக்கே கடன் வழங்கும் நிலை ஏற்படும்

## பஸில் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 17

நாட்டின் இறையாண்மைக்கு குந்தகம் ஏற்படும் வகையிலான நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. எதிர்காலத்தில் நாம் ஐரோப்பாவுக்கு கடன் வழங்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்படலாம் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

2012 ஸ்ரீலங்கா எக்ஸ்போ கண்காட்சி தொடர்பில் விளக்கமளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐரோப்பிய நாடுகளுக்குக் கடன் வழங்கும் காலம் தொலைவில் இல்லை .

பொருளாதாரம் என்றால் அது ஐரோப்பா என்று சிலர் கருதுகின்றனர். ஐரோப்பாவில் மட்டும் நாம் தங்கியிருக்கவில்லை.

எமது நாட்டிலும் புதிய சந்தைகள் காணப்படுகின்றன. சுற்றுலாப் பயணிகள் தொடர்பிலும் புதிய சந்தைகள் காணப்படுகின்றன.

மேலும், சீனா, இந்தியா போன்ற நாடுகளில் அதிக சந்தை வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. இந்த நிலையில், ஐரோப்பாவின் அச்சுறுத்தல்களுக்கு அடிபணியப் போவதில்லை - என்றார். (ச)

# சனல் - 4 வீடியோவை நிராகரித்தது அரசு

கொழும்பு, மார்ச் 17

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரன் படுகொலை செய்யப்பட்டுள்ளார் எனக் காண்பிக்கும் வீடியோக் காட்சிகள் அடங்கலாக சனல் - 4 தொலைக்காட்சி நிறுவனம் வெளியிட்டுள்ள புதிய ஒளிநாடாவை இலங்கை அரசு நேற்று முன்தினம் திட்டவட்டமாக நிராகரித்தது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்றுமுன்தினம் அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இதன்போது, இலங்கைக்கு எதிரான பிரேரணை நிறைவேற்றப்படும் பட்சத்தில் அரசின் நடவடிக்கை என்னவென்றும், சனல்-4 தொலைக்காட்சி நிறுவனம் வெளியிட்டுள்ள புதிய ஒளிநாடா குறித்து கேள்விகள் கேட்கப்பட்டன.

இவற்றுக்குப் பதிலளிக்கும்போதே பதில் அமைச்சரவைப் பேச்சாளரும் பிரதிப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு எதிரான பிரேரணை நிறைவேற்றப்படுமா அல்லது இல்லையா என்பதை உறுதியாகக் கூறமுடியாது.

சனல் - 4 தொலைக்காட்சி நிறுவனம் இலங்கையை இலக்கு வைத்தே வீடியோக் காட்சியை வெளியிட்டுள்ளது. இதற்கு முன்னர் அந்த தொலைக்காட்சி நிறுவனம் இலங்கையில் போர்க்குற்றங்கள் இடம்பெற்றன எனக் கூறும் ஒளிநாடாவை வெளியிட்டது. அது தொழில்நுட்ப உதவியுடன் திரிபுபடுத்தப்பட்டு வெளியிடப்பட்ட போலிக் காட்சிகள் என்பதை நாம் நிரூபித்தோம்.

தற்போது, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ள நிலையிலேயே சனல் - 4 புதிய ஒளிநாடாவொன்றை வெளியிட்டுள்ளது. இதிலிருந்தே அந்தத் தொலைக்காட்சி நிறுவனத்தின் பின்புலம் என்னவென்பது நன்கு தெரிகின்றது.

இவ்வளவு காலமும் அமைதியாகவிருந்த சனல் - 4 நிறுவனம் ஜெனிவா மாநாடு நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிலையில் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றம் தொடர்பில் ஒளி நாடாவை வெளியிடுவது ஏன்? 23ஆம் திகதியை இலக்குவைத்தே இந்தக் காணொலியை வெளியிட்டுள்ளது- என்றார். (த-சி)



இலங்கைக்கான பாகிஸ்தான் தூதர் சீமா இலாகி பலூச் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி நேற்று முன்தினம் வியாழக்கிழமை தனது இல்லத்தில் நடத்திய நிகழ்வொன்றில் ஜனாதிபதியின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ச)

# சம்பிக்கவின் கருத்து பாரதூரமானது!

## மனோகணேசன் குற்றச்சாட்டு

இன்னொரு கலவரம் என்ற பேச்சுக்கே இடம்மில்லை. எமது மக்களின் பாதுகாப்புத் தொடர்பில் நாம் விட்டு கொடுக்க முடியாது.

கொழும்பு, மார்ச் 17

உத்தேச ஜெனிவா பிரேரணை தொடர்பில் இலங்கையில் 1983 ஆம் ஆண்டு நடைபெற்றதைப்போல ஒரு இனக்கலவரம் வரலாம் என்று, தமிழ் மக்களை பயமுறுத்தும் தொனியில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் சம்பிக்க ரணவக்க கருத்துத் தெரிவித்து இருப்பது பாரதூரமானது என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைப் பேரவை பிரேரணை மூலமாக இலங்கையில் இனக் கலவரம் இடம்பெறும் என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க விடுத்துள்ள எச்சரிக்கை தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜெனிவாவில் இலங்கை தொடர்பில் கொண்டுவரப்பட்டுள்ள பிரேரணை, இலங்கையில் நடைபெற்ற போரை பிரதான அடிப்படையாகக் கொண்டது. இந்தப் போரை நடத்துவதற்கு அன்று அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் என்பன இலங்கை அரசுக்கு முழுமையாக ஆதரவு அளித்தன. இதே நாடுகள்தான் இன்று ஜெனிவாவில் அரசுக்கு எதிராகப் பிரேரணை கொண்டுவரவும் கூடி நிற்கிறார்கள்.

போர் நடந்த சமயத்தில் இடம்பெற்றதாகச் சொல்லப்படும் மனித உரிமை மீறல்களைத் தடுப்பதற்கு ஐ.நா. சபை தவறிவிட்டது என அன்று ஐ.நா.வில் பணியாற்றிய பணியாளர்களே இன்று குற்றம்சாட்டுகிறார்கள்.

அமெரிக்க, இந்திய, ஐரோப்பிய அரசுகள் முன்னின்று நடத்திய போர் தொடர்பில்தான் இன்று பிரச்சினையே ஏற்பட்டுள்ளது. இதை இன்று தமிழர்களைக் காப்பாற்றுவதற்குக் கிளம்பியுள்ளதாகக் கூறப்படுகின்ற சர்வதேச சமூகம் நினைவில் வைத்துகொள்ள வேண்டும்.

கொழும்பில் வாழும் தமிழ் மக்களின் தலைமைக் கட்சி என்ற முறையில் நாம் நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டு இருக்கின்றோம். இலங்கையிலுள்ள சர்வதேச சமூக பிரதிநிதிகளின் கவனத்துக்கு இது தொடர்பான எமது உணர்வுகளைத் தெரிவித்துள்ளோம்.

அமைச்சர் சம்பிக்கவின் பொறுப்பற்ற கருத்து தொடர்பில் சர்வதேச சமூகம், இலங்கை அரசிடம் தமது அதிருப்தியைத் தெரிவிக்க வேண்டும். இன்னொரு கலவரம் என்ற பேச்சுக்கே இங்கு இடம் இருக்க முடியாது. எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் எமது மக்களின் பாதுகாப்புத் தொடர்பில் நாம் விட்டுகொடுக்க முடியாது- - என்றார். (ச)

# சில அரசியல்வாதிகள் முட்டாள்கள்

நாட்டிலுள்ள சில முட்டாள் அரசியல்வாதிகள் இழிவான செயல்களில் ஈடுபட்டுவருவதாகக்கண்டிஅஸ்கிரிய பீடாதிபதி உடுகம ஸ்ரீ புத்தரக்கித்ததேரர் தெரிவித்தார். பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக்கோன், அஸ்கிரி பீடாதிபதியை சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எந்தவிதமான கல்வித் தகைமையும் அற்ற எமது அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மிகவும் கேவலமாக நடந்து கொள்கின்றனர். கடந்த காலங்களில் தமது சொத்துக்களை இழந்து அரசியல் செய்தார்கள். எனினும், தற்போது பணம் சம்பாதிப்பதனை பிரதான இலக்காகக் கொண்டு அரசியலில் ஈடுபடுகின்றனர்.

போதைப்பொருள் வர்த்தகர்கள், பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் இன்று அரசியலில் ஈடுபடுகின்றனர். இதனால் நாட்டுக்குச் சர்வதேச ரீதியில் அழுத்தங்கள் ஏற்பட்டுள்ளன-என்றார்.

# தற்காலிகமாக மூடப்பட்ட 2 பாடசாலைகள்

கொழும்பு, மார்ச் 17

கூகைக்கட்டு நோய் பரவியதன் காரணமாக களுத்துறை கல்வி வலயத்தின் இரண்டு பாடசாலைகள் நேற்றுமுன்தினம் முதல் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

மாணவர்கள் மத்தியில் தொடர்ந்தும் நோய் பரவிச் செல்வதைத் தடுக்கும் வகையில் மேல் மாகாணக் கல்வி அமைச்சு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

களுத்துறை போம்புவல கனிஷ்ட வித்தியாலம் மற்றும் போம்புவல மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளே கூகைக்கட்டு நோய் பரவல் காரணமாகத் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன என்று மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

# 35 வீடுகளில் பொருள்கள் திருட்டு

35 வீடுகளில் பல லட்சம் பெறுமதியான நகைகள் மற்றும் பொருள்களைத் திருடினார் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக நீர்கொழும்புக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி சுபாஷ் பிரியதர்சன தெரிவித்தார்.

இந்த சந்தேகநபரிடமிருந்து சுமார் 50 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் மற்றும் நகைகள் மீட்கப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

நீர்கொழும்பு, கதிரானை பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதான டபிள்யூ.ஏ.அஜித் நிரோசன் என்பவரே சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவராவார்.

குறித்த நபர் 1999ஆம் ஆண்டு நீதிமன்றத்தினால் ஐ.ஆர்.சி எனப் பிரகடனப் படுத்தப்பட்டவர் எனவும், போதைவஸ்து மற்றும் சூதாட்டம் ஆகியவற்றுக்கு அடிமையானவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# கடற்றொழில் சார் சர்வதேச கப்பற்றொழில்



ந.சிவரத்தினம்,
சர்வதேச இணைப்பாளர், வல்வை
மாலுமிகள் நலன்புரிச் சங்கம்.

G.C.E தராதரம் இல்லாதவர்கள் கப்பலுக்கு சேருவதற்கு நிற்கும் காலத்தில் பிரத்தியேகமாக G.C.E தராதரம் பெற முயற்சித்தல். இது தொழில் வாய்ப்பை மேலும் அதிகரிக்கும்.

*வெளிநாட்டில் இருக்கும் உறவினர்கள் அல்லது நண்பர்கள் மூலம் கப்பல் Company களுடன் தொடர்பு ஏற்படுத்தி வேலை வாய்ப்பை அதிகரிக்கலாம்.

*Vaiswa.com உடன் தொடர்பு கொண்டு மேலதிக உதவி பெறலாம்.

*Internet மூலம் கப்பல் Owner மற்றும் கப்பல் Company களின் Database யை அறிந்து கொண்டு அவர்களுக்கு உங்களதுCurriculum Vitae அதாவது Bio-data அனுப்பி வேலைவாய்ப்பு பற்றி அறிதல் வேண்டும். இலங்கையர்கள் வேலை செய்யும் Company களுடனும் வெளிநாட்டு Crewவை எடுக்கும் Company களுடனும் தொடர்புகள் கொள்வது கூடிய பலனை அளிக்கும். எந்தெந்தக் Company கள் Cadet ஆக வேலை வாய்ப்பு கொடுக்கின்றார்கள், எவை Scholarship கொடுக்கின்றார்கள் போன்ற விவரங்களையும் கண்டு தொடர்பு கொள்ளல் வேண்டும்.

தொழில் வேலைவாய்ப்பு பற்றிய விழிப்புணர்வு

*முதற் கப்பல் ஏறும் போது சிறிய Company பெரிய Company சம்பளம் கூடக்குறைவு மச்சான் மாமன் அல்லது சினேகிதர்கள் உள்ள கப்பல் தமிழர் உள்ள கப்பல் என்று பாராது எதுவென்றாலும் சேர முயற்சித்தல் வேண்டும். இரண்டாவது முறை கப்பலில் சேரும் பொது அனுபவத்தை வைத்து விருப்பமான கப்பல்களில் சேருவது சுலபம். தமிழர்கள் இல்லாத கப்பலில் வேலை செய்பவர்களுக்கு இலகுவில் Spoken English பழக சந்தர்ப்பம் உண்டு.

*எந்த நேரத்திலும் கப்பலில் சேர்வதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும். அனேகமாக கப்பல் Company கள் Ticket கொடுப்பார்கள். சில வேளைகளில் நீங்கள் Ticket Book செய்து செல்ல வேண்டியிருக்கலாம். அதற்கான பணம் பின்னர் அவர்கள் தரலாம். ஒருTravel agent யை தயார் படுத்தி வைத்துக் கொள்ளலாம். மற்றும் கப்பலில் வேலை செய்வதற்கு தேவையான உடுப்பு, படிப்பதற்கு புத்தகங்கள் ஆகியன தயார் படுத்தி வைத்தல் வேண்டும்.

*கப்பலில் சேர்வதற்காக நிற்கும் காலத்தை பிரயோசனமாகப் பயன்படுத்தும் முறைகள் சில:

*மேலதிக Short Course களைப் படிக்கலாம். உதாரணமாக International Computer Driving Licence (ICDL) அல்லது Efficient Deck Hand (EDH) அல்லதுTanker Familiarisation போன்ற கப்பலுக்கான Certificate உடையவர்களுக்கு Chance அதிகம்.

*வல்வை மாலுமிகள் நலன்புரிச் சங்கத்துடன் தொடர்பு கொண்டு சந்தேகங்கள் அல்லது கப்பலில் சேருவதற்கான மேலதிக வழிவகைகளைக் கேட்கலாம் அல்லது உதவி பெறலாம்.

*கப்பலில் சேரும் போது கையொப்பமிடும் ஆவணங்கள் (Ship's article, Contract agreement போன்றவை) பற்றி அறிந்து வைத்திருத்தல். ஏற்கனவே கப்பலில் சென்று வந்தவர்களிடம் இது பற்றி அறிந்து கொள்ளலாம்.

*G.C.E தராதரம் இல்லாதவர்கள் கப்பலுக்கு சேருவதற்கு நிற்கும் காலத்தில் பிரத்தியேகமாக G.C.E தராதரம் பெற முயற்சித்தல். இது தொழில் வாய்ப்பை மேலும் அதிகரிக்கும்.

*Spoken English கற்றல். அல்லது Spoken English பழகுவதற்காக Office களில் Temporary வேலையில் சேருதல். ஏதாவது Shipping Companyகளின் அல்லது Crew agent இன் Office இல் வேலைசெய்வது மிகமிக நன்மை பயக்கும்.


*கப்பல் கல்விக்குத் தேவையான பாடத்திட்டங்களை அறிதல் அவற்றுக்குத் தேவையான பாடப்புத்தகங்களை வாங்க முயற்சித்தல் அவற்றைப் படித்தல். அனேகமானNautical & Engineering College களில் படிப்பதற்கு அதிக செலவாகும். ஏற்கனவே படித்து வைப்பதன் மூலம் முதல் முறையிலேயே சித்தி பெற்று செலவைக் கட்டுப்படுத்தலாம்.

*பாடத்திட்ட முறைகளை அறிந்து(Syllabus) Maths,Science ஆகிய பாடங்களையும் முடியுமாயின் மற்றைய Nauticalபாடங்களையும் படித்தல், கப்பலில் சென்று வந்தவர்களுடன் சேர்ந்து படிக்கலாம். கப்பலில் Officerஆக வேலை செய்தவர்களிடம் ஆலோசனைகள் அல்லது உதவிகள் பெற்றுப் படிக்கலாம். (முற்றும்)


## ஆலயத் திருக்காட்சிகள்




காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலய பெருந்திருவிழா கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. அம்பாள் திருவீதி உலா வருகின்றார். (250)



கொழும்புத்துறை கிழக்கு ஸ்ரீ சந்திர சேகரப்பிள்ளையார் வருடாந்த தேர்த்திருவிழாவில் விநாயகர் தேரில் வீதியுலா வருகிறார். (135)



சிவராத்திரி தினத்தை முன்னிட்டு காரைநகர் ஈழத்து சிதம்பரத்தின் புனித தீர்த்தக் கரையான கசூரினாக் கடற்கரையில் சுவாமி தீர்த்தமாடியதைத் தொடர்ந்து பக்தர்கள் கடலில் தீர்த்தமாடினார்கள். (ம-250)



நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய மகாகும்பாபிஷேகத்தின் இறுதி நிகழ்வுகளான மண்டலா பிஷேகம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. பிரதான கும்பம் வீதி உலாவாக எடுத்து வரப்படுகிறது. (7)

# சாரணர் நூற்றாண்டு தின ஜம்போறி தம்புள்ளவில்

இந்த ஜம்போறியில் இலங்கை உட்பட 24 நாடுகளின் சாரணர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

தென்மராட்சி, மார்ச்.17

சாரணர் இயக்க நிறுவுநர் பேடன் பவலின் நூற்றாண்டு நிகழ்வையொட்டி உலக நாடுகளின் சாரணர்கள் பங்கு கொள்ளும் நூற்றாண்டு தின ஜம்போறி அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் 6ஆம் திகதி வரை தம்புள்ளவில் இடம்பெறவுள்ளது.

இந்த ஜம்போறியில் இலங்கை உட்பட 24 நாடுகளின் சாரணர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இலங்கையில் உள்ள 37 சாரணர் மாவட்டங்களைச் சேர்ந்த சாரணர்களும் உலக நாடுகளைச் சேர்ந்த சாரணர்களும் கலந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பேடன் பவலின் நூற்றாண்டு நிகழ்வையொட்டி இலங்கையில் உள்ள சாரணர் மாவட்ட ஆணையாளர்களும் சாரணர் சங்கங்களில் நீண்ட காலம் சேவையாற்றுபவர்களும் அண்மையில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், பருத்தித்துறை, காங்கேசன்துறை ஆகிய 7 சாரணமாவட்டங்களின் ஆணையாளர்களும் நீண்ட கால சாரண சேவையாளர்களும் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். நூற்றாண்டு மலரும் அன்றைய தினம் வெளியிடப்பட்டது. (வ-9)

# 'நாகேஸ்வரி அருளமுதம்' கும்பாபிஷேக மலர் வெளியீடு

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தில் கடந்த 12 ஆம் திகதி வரலாற்றுச் சிறப்பு "நாகேஸ்வரி அருளமுதம்" எனும் கும்பாபிஷேக மலர் வெளியீட்டு விழா இடம்பெற்றது.

நயினாதீவு அறங்காவலர் சபைத் தலைவர் கா.ஆ.தியாகராசா தலைமையில் விழா இடம்பெற்றது.

தொடக்கவுரையை மலர் குழு தலைவரும் வடக்கு-கிழக்கு மாகாண முன்னாள் பிரதி பிரதம செயலாளருமான ப.க.பரமலிங்கம் வழங்கினார்.

அறிமுகவுரையை மலராசிரியரும் கோட்டக்கல்விப் பணிப்பாளருமாகிய கு.சரவணபவானந்தனும் வெளியீட்டுரையை முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கனும் மலர் நயப்புரையை இந்தியா ஸ்ரெல்லாமாரிஸ் கல்லூரி பேராசிரியர் கலாநிதி விஜயலட்சுமி இராமசாமியும் வழங்கினர்.

பதிலுரையை அறங்காவலர் சபை செயலாளரும்- நயினாதீவு உப அலுவலக பொறுப்பதிகாரியுமான ந.மோகனரூபன் வழங்கினார்.

முதற்பிரதியை தொழிலதிபர் செ.குகதாசன் அவர்கள் பெற்றுக் கொண்டார். அன்றைய தினம் நயினை அம்மன் நாகேஸ்வரி அருளமுதம் நூல் 1000 பிரதிகள் வழங்கப்பட்டுள்ளன.

உலகம் முழுவதற்கும் வழங்குவதற்கு மேலும் 2000 பிரதிகள் அச்சிடப்படவுள்ளதாக அறங்காவலர் சபை தலைவர் கா.ஆ.தியாகரர்சா தெரிவித்தார். (வ-[illegible])

## மெய்வன்மைப் போட்டி

சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் கலந்து கொள்வார். (த-14)

# கிடைக்குமா விமோசனம்

நெல்லியடி பெற்றோல் நிரப்பு நிலையத்துக்கும், நெல்லியடிச் சந்திக்கும் இடைப்பட்ட பிரதான வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.


இவ்வாறு இந்த வீதி சேதமடைந்திருப்பதால், வாகனங்களைச் செலுத்தும் போது, வீதியில் சீரான இடம் பார்த்து வீதி ஒழுங்கைக் கடைப்பிடிக்காது, பக்கம் மாறிச் செல்வதால் வீதி விபத்துக்களை அதிகமாக எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகிறது.

வீதி அகலிப்புச் செய்வதற்குக் காலதாமதம் ஏற்பட்டாலும் வீதிகளில் ஏற்பட்டுள்ள குழிகளை சீர் செய்து அதனைச் செப்பனிட்டால் ஓரளவுக்கு விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளலாம் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை சுன்னாகம், கந்தரோடை வீதி மாகியப் பிட்டிவரையும் குன்றும் குழியுமாகவுள்ளமை பலமுறை சுட்டிக்காட்டியும் இன்று வரை கவனிப்பாரற்ற நிலையில் உள்ளது. இந்த வீதியால் போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகள் தினமும், வீதி குறித்து மனதுக்குள் முணுமுணுத்துக் கொண்டு செல்வதையும் காண முடிகிறது.

பாடசாலை மாணவர்கள், தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகள், விவசாய உற்பத்திகளை சுன்னாகம் சந்தை, மருதனார் மடம் சந்தைக்குக் கொண்டு செல்லும் விவசாயிகள் எனப் பலரும் மேற்படி வீதியைப் பயன்படுத்துவதும் தெரிந்ததே.

இருந்தும் நீண்ட காலமாகக் கவனிக்கப்படாதுள்ளது ஏன் என்ற கேள்விகள் மக்கள் மத்தியில் எழுகின்றது. காலை நேரத்தில் இந்த வீதி மிகவும் போக்குவரத்து நெரிசல் கூடியதாகக் காணப்படும். பாதசாரிகள் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மாணவர், சைக்கிளில் பயணிப்போர் இந்த வீதியில் தினமும் விழுந்தெழும்பி தரிசித்துச் செல்வது வழமை போலாகிவிட்டது. எனவே இந்த வீதியில் அவலத்தை கண்டு உணர்ந்து சம்பந்தப் பட்ட அதிகாரிகள் திருத்தி அமைக்க முன்வர வேண்டும் என்று அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுகின்றனர். (வ-16-253-36)




ஓரளவான மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்

# ஆள் கடத்தலைத் தடுக்க விசேட வேலைத்திட்டங்கள்

**ஐக்கிய நாடுகள் சபை யின் அகதிகள் தொடர்பான தூதரக அலுவலகத்தின் இலங்கைக்கான வதி விடப் பிரதிநிதி மைக்கல் ஜே. ஸ்வாக் அமைச்சர் ரவூப் ஹக்கீமை நீதி அமைச்சில் சந்தித்துப் பேசினார்.**

ஆள்கடத்தல் உள்ளிட்ட மோசடிகளைத் தடுக்க நீதியமைச்சினால் விசேட வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் தொடர்பான தூதரக அலுவலகத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மைக்கல் ஜே. ஸ்வாக் அமைச்சர் ரவூப் ஹக்கீமை நீதியமைச்சில் சந்தித்து பேச்சு நடத்தினார். இதன்போது ஆள் கடத்தல் உள்ளிட்ட மோசடிகளைத் தவிர்ப்பதற்கு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் உதவிகள் அவசியமென நீதி அமைச்சரால் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இந்த வேலைத் திட்டங்களுக்கு அரச நிறுவனங்களின் ஒத்துழைப்புகளும் பெறப்பட்டுள்ளன என்றும் நலன்புரிக் கிராமங்களில் வாழும் மக்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல் மற்றும் மீள்குடியேற்ற வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் விசேடமாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ந)

# பாலியல் கொடுமைகளைத் தடுக்க அமெரிக்க நிறுவனம் உதவி

## ஐந்து நாடுகளைச் சேர்ந்த நிபுணர்களின் பங்களிப்புடன் விசேட கருத்தரங்கு

இலங்கையில் அதிகரித்துவரும் பாலியல் வன்புணர்வுகள் மற்றும் அது சார்ந்த கொடுமைகளைத் தடுக்க அமெரிக்கா உதவிகளை வழங்கத் தீர்மானித்துள்ளது.

அதன்படி சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவர் நிறுவனத்தின் அனுசரணையுடன் பாலியல் வன்கொடுமைகளைத் தடுப்பது எவ்வாறு என்பது குறித்து கொழும்பில் அண்மையில் விசேட கருத்தரங்கொன்று நடைபெற்றுள்ளது. தடயவியல், இரசாயன பகுப்பாய்வு மற்றும் மருத்துவ துறையைச் சேர்ந்த நிபுணர்கள் இது தொடர்பில் விளக்கமளித்துள்ளனர்.

ஐந்து நாடுகளைச் சேர்ந்த நிபுணர்களின் பங்களிப்புடன் இந்த விசேட கருத்தரங்கு நடத்தப்பட்டுள்ளது. பாலியல் வன்கொடுமைகளை விசாரணை நடத்தி குற்றவாளிகளுக்குத் தண்டனை விதிக்கப்படுவதன் மூலம் வன்முறைகளைக் கட்டுப்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாலியல் வன்கொடுமைகளை விசாரணை செய்யும் வழிமுறைகளை மேம்படுத்தும் நோக்கில் இந்த உதவிகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. குறிப்பாகப் பாலியல் வன்முறைகளை விசாரணை செய்யும் தடயவியல் நிபுணர்களின் திறமைகளை மேம்படுத்தி அதன் மூலம் குற்றவாளிகளைக் கண்டறியத் திட்டமிட்டுள்ளது. (ந)

# நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் குடும்ப விவரம் திரட்டல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

வாழ்வு எழுச்சித் திட்ட மனைப் பொருளாதார அலகுகளுக்கான திட்டப் பிரிவு, நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட அனைத்து கிராம சேவகர் பிரிவுகளிலும் உள்ள குடும்பங்களின் விவரங்களைத் திரட்டுவதற்காக குறித்த பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தொடக்கம் இந்த மாதம் இறுதிவரை ஒவ்வொரு வீடுகளுக்கும் வருகை தரவுள்ளனர் என நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார்.

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட அனைத்துக் கிராம அலுவலர் பிரிவுகளையும் சேர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சினூடாக மேற்படி பிரதேச செயலகம் தகவல்களைத் திரட்ட உள்ளது.

அதன்படி 22054 குடும்பங்களின்தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தொடக்கம் இந்த மாத இறுதி வரை ஒவ்வொரு வீடுகளுக்கும் உத்தியோகத்தர்கள் வருகை தர உள்ளனர். கடமைக்காக வரும் இந்த உத்தியோகத்தர்களுக்குத் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்கி உதவுமாறு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ந-7)

# முன்னாள் போராளிகளுக்கு சுய தொழில் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,மார்ச் 15

புனர்வாழ்வு பெற்று விடுவிக்கப்பட்டு நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் மீளக்குடியமர்ந்துள்ள முன்னாள் போராளிகள், சுயதொழில் கொடுப்பனவுக்கான விண்ணப்பங்களை நல் லூர் பிரதேச செயலக திட்டமிடல் கிளையுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

அத்துடன் மீளக் குடியமர்வு அதிகார சபையின் சுய தொழிலுக்கான விண்ணப்பப் படிவங்கள் நல்லூர் பிரதேச செயலகத்தில் வழங்கப்படுகின்றன என்று பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (ந-7)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



தோற்றம் 10★01★1940 — மறைவு 16★02★2012

**நல்லதம்பி மகாலிங்கம்**
**(ஐயாத்துரை)**

மனிதரில் உத்தமனாய் மிளிர்ந்து
பாசமாய் நேசத்துடன் எம்மை வளர்த்து
நல்வார்த்தை பேசி எம் மனம்
மகிழவைத்து
எம் வாழ்வுக்கு ஒளியூட்டிய அப்பாவே
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்ததால்
ஒளியின்றித் தவிக்கின்றோமப்பா
நாள்கள் பல சென்றாலும் எம் உயிரோடு
அன்பாக கலந்து இருப்பீர் அப்பா
ஓம் சாந்தி!

இன்று (17.03.2012) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

395/5, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(15733) (6-7-9-12)
குடும்பத்தினர்.

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக்கூடிய 48 வயதுக்கு மேற்பட்ட பணிப் பெண் தேவை.
சம்பளம்:- ரூபா 10,000
தொடர்பு: 021 7900637

## மூன்றாம் ஆண்டு நினைவினில்



அன்னை மடியில் 1984 ★ 05 ★ 27
ஆண்டவன் அடியில் 2009 ★ 03 ★ 17

**இராசேந்திரம் சபேசன்**
ஒலுமடு - மாங்குளம்
(முன்னைநாள் போர் சர்வதேச தொண்டு நிறுவன பணியாளர் - முல்லைத்தீவு)
நிதி : அபரபக்க ஸப்தமி

எம் குடும்பத்தில் வந்துதித்த
குலவிளக்கான ஒரே ஒரு ஆண் குஞ்சே - முத்தே நீ
எமை விட்டு பிரிந்து மூன்று ஆண்டுகள் ஆனாலும்
எம் உயிரோடு இன்றும் உறவாடுகின்றாயப்பா
ஐயகோ உனைப் பிரித்த இறைவன்
எம்மையும் சேர்த்து எடுத்திருக்கலாம்
நீ இல்லா வாழ்வால் உயிரற்ற
நடைப் பிணமாய் உலாவுகின்றோம் ஐயா
எம் செல்வமே உன் நினைவோடு
உன் உழைப்பிலேயும் உன் அரவணைப்பிலுமே
இன்றும் வாழ்கின்றோம் - எம் தெய்வமே
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

தற்காலிக முகவரி
பொன்னாவரசன்குளம்,வவுனியா

சோ. இராசேந்திரம் (தந்தை)
ஒலுமடு, மாங்குளம், T.P. 077 9664138
(C/9158)(6-9-8)

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் சந்தியில் இருந்து 300 மீற்றர் தூரத்தில் இருபாலை வீதியில் 14 பரப்புக்காணி சுற்றுமதிலுடனும் பங்கு கிணற்றுடனும், மின்சார வசதியுடனும் கூடிய 600 சதுரஅடி கட்டடத்துடன் விற்பனைக்குண்டு. பகுதியாக பிரித்து வழங்குவது தொடர்பாக பரிசீலிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 021 2222376, 077 8449890
(15633)(6-7-8)

## Doctor தேவை

Rmp/Amp உடன் தேவை.
தொடர்பு : 077 3068979

## லொறி விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Mitsubishi Canter No 43 xxxx லொறி விற்பனைக்குண்டு.
தொடர்பு:
0778210166, 0779994912

## வீடு தேவை

இணுவில், மருதனார்மடம், சுன்னாகம் ஆகிய பிரதேசத்தில் K.K.S. வீதியில் அல்லது கிட்டிய தூரத்தில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்கு தேவை. மாதவாடகை 10,000/= (பத்தாயிரம்) வரை தரப்படும்.
(15697)(6-7-8) தொடர்பு : 077 0440570

## கோழிக் குஞ்சு விநியோகம்

தரமான No- 1 புறொயிலர் கோழிக் குஞ்சுகள் (Pussalla Farm) (23.03.2012) வெள்ளிக்கிழமையன்று விநியோகம் செய்யப்படும். பெற்றுக் கொள்ள விரும்புவோர் பதிவுகளை மேற்கொள்ளவும்.
'சிற்றி பாம் ரேடேர்ஸ்" ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு.
T.P.No. 021 222 1158
(15731) (2-8)

## கண்ணீர் அஞ்சலி

இலங்கை வங்கி கோப்பாய்க் கிளையின் முகாமையாளர்
மு.தவபாலன் அவர்களின் அன்புச் சகோதரி

**திருமதி கோமதி ஜெகன்மோகன்**



15.03.2012 அன்று இறைபதமெய்திய செய்தி அறிந்து அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமதுஇதய அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

பிரிவால் துயருறும்:
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.
இலங்கை வங்கி
கோப்பாய். (15723) (2-6-7)

## மரண அறிவித்தல்



திருமதி
**பொன்னம்பலம் பத்மாவதி**

பண்ணாகம், சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்பலம் - பத்மாவதி (13.03.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுசாமி - நல்லம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் பொன்னம்பலத்தின் (ஓய்வு பெற்ற பிரதி அதிபர், யா/பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி) அன்பு மனைவியும் கோமதி, சரளா, சுந்தரன், தனேசன், பொன்சாமி, தனஞ்சயன் ஆகியோரின் பாசமிகு தாயும் தர்மலிங்கம், பரமேஸ்வரி, நாகலிங்கம், யோகம்மா, கண்ணகியம்மா, சரஸ்வதி, தவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (17.03.2012) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பண்ணாகம், சுழிபுரம் (15732)6-7-8 பொ. நாகலிங்கம் (தம்பி)

**தருவது வித்தியா**

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** இறைவழிபாடுகளில் நாட்டம் செல்லும். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். சில வேலைகளுக்காக நீங்கள் மட்டுமின்றி, மற்ற சிலரையும் கூட்டிக் கொண்டு அலைவீர்கள். பணிபுரிவோர் வேறு வேலை காரணமாக திடீர் விடுப்பு எடுக்கலாம். உடல் ரீதியான உபாதைகளால் உற்சாகம், தெம்பு குறையலாம்.

**இடபம்:** வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும் நாள். மற்றவர்களுக்காக சில விடயங்களில் விட்டுக் கொடுத்துச் செல்ல நேரிடலாம். சக ஊழியர்கள் விடுமுறையால், கூடுதல் வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். உறவினர்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். திடீர் செலவால், தண்டச் செலவால் சேமிப்பில் கைவைக்கலாம்..

**மிதுனம்:** எந்த வேலையையும் பொறுப்பாகச் செய்து, மற்றவர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். அதிக செலவாகும் என்று நினைத்த காரியம் ஒன்று, குறைந்த செலவில் முடிவுக்கு வரலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சிகள், கூட்டங்களில் நீங்களும் பங்கேற்கலாம். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவதில் நாட்டம் செல்லும். வெற்றிகரமான நாள்.

**கடகம்:** புதிய காரியங்களைச் செய்ய முற்படுவீர்கள். நாடி வந்த சிலருக்கு இல்லை என்று சொல்லாமல், பிறரிடம் கடன் வாங்கிக் கொடுத்தாவது உதவி செய்வீர்கள். பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். பிடித்தமான கோயில்களுக்குச் சென்று வழிபாடு நடத்தலாம். சிறு பணவரவுகளைப் பெறலாம். சில வேலைகள் சுலபமாக முடிவுக்கு வரும்.

**சிங்கம்:** ஒரு வழியில் வந்த வரவுகள், மற்றொரு வழியில் செலவாகும். இளைய உடன் பிறப்புக்களால் அனுகூலம் கிடைக்கலாம். மனக்குழப்பங்கள் விலக, அனுபவம் உள்ளவர்களிடம் ஆலோசனைகளை கேட்டு செயற்பட வேண்டியது அவசியம். பிள்ளைகள் வழியில் எதிர்பாராத தொல்லைகளைச் சந்திக்கலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம்.

**கன்னி:** நன்றி மறந்தவர்களை நினைத்து வருத்தப்படுவீர்கள். கணவன், மனைவி இடையே வாக்குவாதங்க்ள் ஏற்படலாம். மருத்துவர்களுக்கு அலைச்சல் கூடும். வியாபாரிகள் கடனாகக் கொடுத்த பணத்தை வசூலிப்பில், அக்கறை காட்டுவர். சில விடயங்களில் அஜாக்கிரதையாகச் செயற்பட்டு அதிருப்திக்கு ஆளாகலாம். மன அமைதி பாதிக்கும்.

## நாளை

பங்குனி 05 ஞாயிற்றுக்கிழமை 18.03.2012
திதி: ஏகாதசி மு.இ 07.04 வரை
நட்சத்திரம்: உத்தராடம்
சுபநேரம்: 09.18- 10.48 வரை,
ராகு காலம்: 04.45 - 06.15 வரை

**துலாம்:** ஆரம்பித்த காரியங்கள் தங்கு தடையின்றி நடக்கும் நாள். நண்பர்கள் வழியில், சிறு அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். வெளிவட்டாரத் தொடர்புகளை விரிவுபடுத்திக் கொள்வீர்கள். பல நாட்களாக மன உளைச்சலைக் கொடுத்துக் கொண்டிருந்த விடயம், திடீரென முடிவுக்கு வரும். ஆசைகள், பல நாள் எண்ணங்கள் நிறைவேறும் நாள்.

**விருச்சிகம்:** துணையாக இருந்த சிலரே பிரச்சினையாக மாறலாம். சில வேலைகளில் தீவிரமாக இறங்கி விட்டு, பின்னர் அதில் இருந்து பின்வாங்கலாம். வியா பாரிகள் புதியவர்களின் சந்திப்பால் பெருமை அடைவர். பரிகாசப் பேச்சுக்களை, வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும்.

**தனுசு:** உத்தியோகத்தர்கள், மேலதிகாரிகளின் கண்டிப்புக்கு ஆளாகலாம். மனதுக்கு உற்சாகம் தரும் செய்திகளைக் கேட்கலாம். வேலையாள்கள் வழியில் உருவான பிரச்சினைகள் தீர்வுக்கு வரும். வியாபாரிகள் அகலக்கால் வைக்காமல் எச்சரிக்கையோடு செயற்பட வேண்டும். நாளை வரும் என்று நினைத்த பணவரவு ஒன்று இன்றே வரலாம்.

**மகரம்:** தொழிலில் மற்றவர்கள் செய்த தவறு ஒன்றுக்கு, நீங்கள் பொறுப்பேற்கலாம். விரயச் செலவுகளைத் தவிர்க்க, பேராசைகளைத் தவிர்க்க வேண்டும். உறவினர்கள் தொடர்பான விடயங்களில் கௌரவம் பார்த்து, கர்வமாக நடந்து கொள்வீர் கள். கடன் மிகுதிகளைக் கொடுப்பது தள்ளிப் போகலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர், உங்களைத் தேடி வரலாம்.

**கும்பம்:** காலை நேரத்தில் மனதுக்கு உற்சாகம் தரும் செய்திகளைக் கேட்கலாம். தம்பதியர் இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். பெரிய மனிதர்கள் சிலரைச் சந்திக்க மேற்கொண்ட முயற்சிகளில் நல்ல பலன் கிடைக்கும். உதிரி வருமானங்கள் கைக்கு கிடைக்கும். அயலாரின் ஆதரவைப் பெறுவீர்கள். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவீர் கள்.

**மீனம்:** மனதில் தெய்வீக சிந்தனைகள் குடிகொள்ளும் நாள். எதிர்ப்புகளை முறியடிக்க புதிய திட்டம் போடுவீர்கள். நல்ல செய்திகளைக் கேட்கலாம். பிள்ளைகள் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். ஓய்வு எடுக்க நினைத்தாலும், முடியாத அளவுக்கு வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். கடனாக கொடுத்த பணம் ஒன்று, எதிர்பாராத வகையில் திரும்ப வரலாம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | | | | 5 | 7 | 1 | |
| 7 | | | 6 | | | | | |
| | | | | 4 | 7 | 3 | 5 | |
| 8 | 1 | 4 | 7 | 6 | | | | |
| 5 | 7 | | | 8 | | | 2 | 1 |
| | | | | 5 | 1 | 8 | 7 | 4 |
| | 5 | 8 | 3 | 2 | | | | |
| | | | | | 8 | | | 5 |
| | 9 | 2 | 5 | | | | 4 | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 7 | 4 | 8 | 3 | 2 | 1 | 6 | 5 |
| 5 | 3 | 2 | 1 | 7 | 6 | 9 | 8 | 4 |
| 6 | 8 | 1 | 9 | 4 | 5 | 3 | 7 | 2 |
| 1 | 2 | 9 | 3 | 5 | 8 | 6 | 4 | 7 |
| 8 | 6 | 3 | 7 | 2 | 4 | 5 | 9 | 1. |
| 7 | 4 | 5 | 6 | 1 | 9 | 2 | 3 | 8 |
| 3 | 5 | 8 | 2 | 9 | 7 | 4 | 1 | 6 |
| 4 | 1 | 6 | 5 | 8 | 3 | 7 | 2 | 9 |
| 2 | 9 | 7 | 4 | 6 | 1 | 8 | 5 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
## ஜெட்றூட் ஜேம்ஸ்

தோற்றம் :- 12.06.1925
மறைவு :- 15.03.2011

ஆயிரமாண்டு சென்றாலும்
அன்னையே உம் நினைவுகள்
எம் மனதை விட்டு நீங்காது

43/3, குருசோ வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (15726)(2-6-7)

- குடும்பத்தினர்.

# நினைவில் ஓராண்டு



மண்ணில் 11.07.1922

விண்ணில் 29.03.2011

## அமரர் சரவணமுத்து செல்லத்துரை

ஆண்டொன்று உருண்டோடிப் போனாலும்
இமைப் பொழுதும் நீங்காது
எம் உணர்வுகளுடன் கலந்திட்ட
உங்கள் நினைவுகள்!
என்றும் உங்கள் சிந்தனைகளை
செயலாக்கி வாழ்ந்து நிற்போம்!
உங்கள் ஆத்மா சாந்தி பெறுக.

1 ஆம் வட்டாரம், அல்லைப்பிட்டி,
72/50, பணிக்கர் ஒழுங்கை,
திருநெல்வேலி. (f/9167) (2-6-7)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.





நல்லூரில்.....
526,529, பருத்தித்துறை வீதி,
நல்லூர் (பின் வீதி),
யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021 222 1723.

யாழ்.நகரில்.....
770, 772, கே.கே.எஸ்.வீதி,
(தட்டாதெருச் சந்தி), யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021 222 0421.
பக்ஸ்: 222 0421.

வடமராச்சியில்.....
இல.171, பிரதான வீதி,
நெல்லியடி.
தொ.பேசி: 021 226 2992.

# சனல்- 4 ஆவணப்படம் தமிழர் தரப்பு செயற்பாடுகளுக்கு வலுவூட்டியது

## நாடு கடந்த தமிழீழ அரச பிரதிநிதிகள் கருத்து

ஐ.நா மனித உரிமைச் சபையில் இலங்கை தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணைப் பொறி முறையொன்றின் அவசியத்தை வலியுறுத்திவரும் தமிழர் தரப்பின் இராஜதந்திரச் செயற்பாடுகளுக்கு, சனல்-4 தொலைக் காட்சியின் புதிய ஆவணப் படம் வலுசேர்த்துள்ளது.

இவ்வாறு ஐ.நா மனித உரிமைச் சபை விவகாரங்களுக்கான நாடு கடந்த தமிழீழ அரசின் வள அறி ஞர் குழுவினர், ஜெனிவா வில் இருந்து தெரிவித்துள் ளனர்.

**ஏற்கனவே சனல்–4 தொலைக் காட்சியின் முதலாவது ஆவணப்படம், இலங்கைக்கு கடும் நெருக் கடியையும் ஏற்படுத்தியிருந்தது.**

ஏற்கனவே சனல்-4 தொலைக்காட்சியின் முதலாவது ஆவணப்படம், ஐ.நா மனித உரிமைச் சபையில் திரையிடப்பட்டபோது கடும் அதிர்வலைகளையும், இலங்கைக்கு கடும் நெருக்கடியையும் ஏற்படுத்தி யிருந் தது.

இதன் தொடர்சியாக சனல்-4 தொலைக் காட்சியின் புதிய ஆவணப்படம் இங்கு திரையிடப்பட்டுள்ள நிலையில், அது மேலும் கடுமையான நெருக்கடியை இலங்கைக்கு ஏற்படுத்துவதோடு, இலங்கை தரப்பின் பொய்ப் பரப்புரைகள் கட்டுடைந்து போகும் நிலை ஏற்படுமென நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதிநிதிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

(ந)

# இன்று தமிழர்களைச் சந்திக்கிறார் லண்டன் முன்னாள் நகர மேயர்

இன்று லண்டன் தொழில் கட்சியினர் பிரிட்டன் வாழ் தமிழர்களைச் சந்திக்கும் ஒன்றுகூடல் ஒன்று இன்று ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. தொழில்கட்சிக்கான தமிழர் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தச் சந்திப்பில் முன்னாள் லண்டன் நகர முதல்வர் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது முக்கிய விடயங்களாக லண்டன் நகரப் போக்குவரத்து, மற்றும் தமிழர்களின் பிரச்சினைகள் ஆராயப் பட உள்ளன.

தற்போது ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா மனித உரிமைக் கூட்டத் தொடரில் இலங்கை விடயம் முக்கிய பேசு பொருளாக அமைந்திருப்பதாலும், சனல் 4 தொலைக்காட்சியில் சர்வதேசத்துக்கு அம்பலப்படுத்தப்பட்ட இலங்கையின் கொலைக்களங்கள் - பாகம் 2 'தண்டிக்கப்படாத போர்க்குற்றங்கள்' என்னும் ஆவணப் படம் வெளிவந்துள்ள நிலையிலும் இந்தச் சந்திப்பு பிரிட்டன் வாழ் தமிழ் மக்கள் கலந்துகொண்டு தமது கருத்துக்கள் தெரிவிக்கும் ஒரு வாய்ப்பாகவும் அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**சந்திப்பின்போது முக்கிய விடயங்களாக லண்டன் நகரப் போக்குவரத்து, மற்றும் தமிழர்களின் பிரச்சினைகள் ஆராயப் பட உள்ளன.**

இன்று சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில் அதிகளவான பிரிட்டன் தமிழ் மக்கள் கலந்துகொள்ளவேண்டும் என்று ஏற்பாட்டாளர்களான தொழில்கட்சிக்கான தமிழர் அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது. (ந)

# கடலாமை பிடிக்க தடை

கடலாமை பிடிக்கப்படுவதனை தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கையை கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள் எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார் யாழ்.மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி.

அருகிவரும் கடல் உயிரினமான கடலாமையை கடற்றொழிலாளர்கள் பிடிக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. மண்டைதீவு, அல்லைப்பிட்டி உள்ளிட்ட தீவுப் பகுதிகளில் கடலாமை பிடிக்கப் பட்டு வருகிறது. அவ்வாறு கடலாமை பிடித்த நபர்கள் பலருக்கு எதிராக பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். (ந-3)

# "அன்பே கடவுள்"

மீண்டும் ஒரு தவக்காலம் இயேசுவின் பாடுகள் மரணம் உயிர்பை நன்றியுடன் நினைத்து எம் வாழ்வினை மாற்றுகின்ற காலம், செபத்திலும் தவத்திலும் நிலைத்திருக்க அழைக்கின்ற காலம். இந்தக் காலத்தில் உண்ணா நோன்பிலும் இறைவேண்டலிலும் ஈடுபடுவது மட்டுமல்ல இறை அன்பை எம் வாழ்வில் பிரதிபலிப்பவர்களாக இருக்கவேண்டும்.

''செயற்பாடுகள் இல்லாத விசுவாச வாழ்வு பயனற்றது''

''அன்பற்ற ஆன்மிக வாழ்வு அர்த்தமற்றது''




எம்முடைய எண்ணங்களில் கிறிஸ்துவின் மனநிலை பிரதிபலிக்கவில்லையானால், கிறிஸ்து கொண்டிருந்த அன்பு எம்மிடம் இல்லையானால் ஆன்மிக வாழ்வு என்பது அர்த்தமற்றது. இதனைத்தான் இறைமகன் கண்டு கொள்ள அழைக்கின்றார். ''பசித்தோருக்கு உங்கள் உணவைப் பகிர்ந்து கொடுப்பதும் தங்க இடமில்லாத வறியவரை உங்கள் இல்லத்துக்கு அழைத்து வருவதுமே நான் விரும்பும் நோன்பு'' என்கிறார் இறைவன். எனவே இக் காலத்தில் பிற அன்பிலே இறை அன்பைக் காணவும் செயற்பாடுகள் கொண்ட விசுவாச வாழ்வு வாழவும் முயல்வோம்.

''அன்பே கடவுள்''
அரு. சகோ. நிசாந்தி வேதநாயகம்
உடுவில்.

# 3 மாதங்களில் கொலைகள் -126

கடந்த மூன்று மாத காலத்தில் நாட்டின் பல் வேறு இடங்களிலும் 126 கொலைகள் இடம் பெற்றுள்ளன எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தோடு ஒப்பிடுகையில் இது மிகப் பெரிய அதிகரிப்பல்ல என்றும் பொலிஸ் தலைமையக உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

126 கொலைகள் தொடர்பாக 104 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர். கடந்த சில மாதங்களில் காவத்தை பிரதேசத்தில் மாத்திரம் ஒன்பது கொலைகள் இடம் பெற்றுள்ளன என அந்த உயரதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

(ந)


# ஆறாம் மாத நினைவலைகள்



அமரர்
**சின்னத்துரை தனபாலசிங்கம்**
(கிளி அண்ணை)
(முன்னாள் உரிமையாளர் சுகந்தினி விளையாட்டுக் கழகம் மற்றும் Jaffna Rest & Bar - கல்வியங்காடு)

**எங்கள் கண் கண்ட தெய்வமே!**

அப்பா என்று அழைக்க,
அன்புடனே எம்மை அரவணைத்தீர்
அன்பு மொழி பேசி ஆதரவாய் எமக்கிருந்தீர்
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து மாதங்கள் ஆறு சென்றதப்பா
ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
மீண்டும் இப் பூவுலகில் பிறப்பீர்கள் எம் அப்பாவாய்
கண்ணீரால் உங்கள் திருப் பாதத்தைக் கழுவுகின்றோம்
உள்ளத்தால் உங்களை நினைக்கின்றோம்
விழிகளில் நீர் ததும்ப கைகளினால் பூ வெடுத்து
மலர் பாதத்தில் மலர் தூவி உங்கள் நினைவோடு
இந் நாளில் நினைவு கூருகின்றோம்
மீளாத் துயிலில் நீங்களும்,
மீளாத் துயரில் நாங்களும்.



உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர் மற்றும்
சி.கரிகாலன் (கரன்) - மைத்துனர் - கனடா),
திருமதி கரிகாலன் ஸ்ரீபாமினி (கனடா)

'தாயகம்',
புதிய செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (15742) (2-6-7)



**Join Sri Lanka's #1 ESOFT**
The Leader in Professional ICT Education

**Vacancies @ ESOFT**

Sri Lanka's Leader in Professional ICT Education is looking for skilled people

**Vacancies in Jaffna and Kilinochchi**

**MARKETING EXECUTIVES**
Male or Female, with or without part qualifications in Marketing. Must have a pleasant, outgoing personality to be able to liase with our clients. Should have a background in IT.

**LECTURER / VISITING LECTURERS**
Should be possess a Degree or Degree equivalent or higher qualification. Should be specialized in lecturing in Programming Languages such as Java/C#.Net/VB.Net and etc. proffessional Qualifications will be an added advantage. Should be willing to work on weekends.

**TUTORS / INSTRUCTORS**
Should be possess a Higher Diploma or Diploma or equivalent qualification in IT.
Professional qualifications will be an added advantage.
Experience is not must.

**STUDENT COUNSELOR**
Candidate should be have excellent communication skills in English. Fair knnowledge of Computing will be a distinct advantage.

Established in 2000, ESOFT has rapidly grown to be a trendsetter in the industry.

As part of our expansion, we are looking for skilled individuals who can work in a team environment, to achieve set goals.

Successful candidates should be self motivated and have the capability of setting own standards and be able to see that they are achieved and surpassed.

**Salary and Benefits**
Successful candidates will be paid a salary higher than industry rate. Other benefits are also available.

**How to Apply**
Mail us your CV (preferable by POST) within 10 days to reach the Regional Manager. Mark the Post that you are applying for on the top left corner of the envelope.

**ESOFT Computer Studies (Pvt) Ltd.**
No. 17/1, Brown Road, Jaffna.
Tel : 021 2224142 Hotline : 077 309 9 308
Web: http://www.esoft.lk Email: careers@esoft.lk

# பெண்கள் மீதான வன்முறையை எதிர்த்து நேற்று ஆர்ப்பாட்டம்

ஊர்காவற்துறை, மார்ச் 17

நெடுந்தீவில் 13 வயதுச் சிறுமி பாலியல் வன்புணர்வின் பின் கொல்லப்பட்டமைக்கு எதிர்புத் தெரிவித்து ஊர்காவற்துறையில் நேற்று பெண்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சிறுமியின் கொலை தொடர்பான விசாரணைகள் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றபோது நீதிமன்றத்துக்கு வெளியே கூடியிருந்த பெண்கள் பதாகைகளைத் தாங்கியபடி போராட்டத்தில் ஈடுபட்டனர். வடக்கில் சிறுமிகள் மற்றும் பெண்களுக்கு எதிராக அதிகரித்துச் செல்லும் பாலியல் வன்முறைகளை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர்.

''வடக்கில் அண்மைக் காலமாக சிறுமிகள், பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் அதிகரித்திருக்கின்றன, வன்முறைகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் சட்டத்தின் பிடியிலிருந்து இலகுவாக தப்பிச் செல்வதைத் தடுக்கவேண்டும் என்பதற்காகவே இந்தப் போராட்டத்தை நடத்தினோம்'' என்று போராட்டத்தில் கலந்துகொண்ட ரஜனி சந்திரசேகரம் சுட்டிக்காட்டினார்.



பாதிக்கப்பட்ட பெண்களை பாதுகாக்கவும் அவர்களுக்கு உரிய நீதியை வழங்கவும் தொடர்ந்தும் போராட்டம் நடத்தவேண்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தச் சம்பவத்தில் கண்டெடுக்கப்பட்ட தடயப் பொருள்களை பகுப்பாய்வுக்கு உட்படுத்துவதற்கான உத்தரவை வழங்கிய நீதிமன்றம், இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருக்கின்றது.

கடந்த 3 ஆம் திகதி, நெடுந்தீவில் பருவமடையாத சிறுமி ஒருவர் பாலியல் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு கொலைசெய்யப்பட்ட சம்பவம் பிரதேசத்தில் மக்கள் மத்தியில் பெரும் ஆத்திரத்தை ஏற்படுத்தியிருந்தது.

சந்தேக நபரை தப்பவிடக் கூடாதெனத் தெரிவித்து நெடுந்தீவு மக்கள் போராட்டமும் நடத்தியிருந்தனர்.

# புராதன சின்னங்கள் அல்லைப்பிட்டியில்

யாழ்ப்பாணம், மார்ச் 17

அல்லைப்பிட்டிப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஐயனார் ஆலயம், இடிந்த மாதா ஆலயம் என்பன புராதன வரலாற்று எச்சங்களுடன் தொடர்புடையவை என யாழ். பல் கலைக்கழகத் தொல்லியல் வரலாற்றுத்துறைப் பேராசிரியர் எஸ். புஸ்பரட்னம் சுட்டிக் காட்டியுள்ளார்.

அல்லைப்பிட்டியில் கடந்த இருவாரங்களுக்கு முன்னர் கிணறு வெட்டிய போது எதிர்பாராத விதமாக மனிதத் தலை யுடன் கூடிய சிலை ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

இது தொடர்பான விவரங்களை நேரடியாகச் சென்று தொல்லியல் உத்தி யோகத்தர்கள் மேற்கொண்ட ஆய்வில் அல்லைப்பிட்டி ஐயனார் ஆலயம், இடிந்த மாதா ஆலயம் என்பன புரதான வரலாற்று எச்சங்களுடன் தொடர்புபட்டுள்ளன என்பது தெரிய வந்துள்ளது.

இதனை விட 1980 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் அல்லைப்பிட்டியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போது சீன நாட்டுகடற்கலத்தின் உடைந்த பீங்கான்கள், நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. (ந-14)

# தலைமுடிவெட்டும் கட்டணமும் உயர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 17

சிகை அலங்கரிப்பு நிலையங்களில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை தலை முடி வெட்டுவதற்கான கூலிப் பணத்தை கடை உரிமையாளர்கள் அதிகரித்துள்ளனர்.

இதற்கமைய தலைமுடி மட்டும் வெட்டுவதற்கு 130 ரூபாவும், முகச் சவரம் செய்வதற்கு 70 ரூபாவும், தலை முடி வெட்டி முகச்சவரம் செய்வதற்கு 200 ரூபாவும், குழந்தைகளுக்குத் தலை முடி வெட்டுவதற்கு 100 ரூபாவும் கூலிப் பணமாக அறவிடப்படுகின்றன.

(ந-14)





ஆசீர்வாத பெருவிழா!

தெய்வத்தின் திருப்பாதத்தில்

இம்முறை யாழ்ப்பாணம்
நகரசபை மைதானத்தில்
(துரையப்பா மைதானம் அருகில்) (M.C GROUND)

காலம்:- 16, 17, 18 மார்ச் 2012 மாலை 5.00 மணி

செய்தி:- M.R. இராஜேந்திரம் அவர்கள் C.V. இராஜேந்திரம் அவர்கள்

அன்பின் வாசகர்களே! வானத்தையும் பூமியையும் படைத்த தெய்வம் மனித அவதாரம் எடுத்து, பிரம்ம புத்திரனாக, ஆண்டவராகிய இயேசு எனும் நாமத்தில் இரட்சகராக, மானிடனைத் தேடி பூமிக்கு வந்தார். இன்றும் அவர் ஜீவிப்பதினால் அந்த தெய்வம் உங்களை அரவணைக்க ஆவலோடு இருக்கிறார். எனவே சமாதானமற்ற உள்ளங்களுக்கு சமாதானத்தை அருளவும், தீராத நோய்கள், துன்பம், கண்ணீர் நிறைந்த வாழ்விலிருந்தும், இருள், பில்லிசூனியம், மாந்திரீகக் கட்டு, பிசாசின்பிடி, தீமையான பாவக் கட்டுகளிலிருந்தும் விடுதலை தரவும், நிம்மதி, ஆறுதல் அளிக்கவும் உங்களைத் தேடுகிறார். அவர் நாமத்தினால் மட்டுமே மனுக்குலத்திற்கு விடுதலை இருப்பதினால் ஜாதி, மத, இன, பாகுபாடின்றி உங்கள் வாழ்வு சுபீட்சம் அடைய அனைவரையும், அன்புடன் அழைக்கிறோம்.
இதுவே உங்கள் அற்புதத்தின், அதிசயத்தின் நாட்கள்! தெய்வீக சுகமளிக்கும் நாட்களை நழுவவிடாதீர்கள்.
தேவ கிருபை, அருள் பெற வாரீர்.

மைதானத்திலிருந்து பஸ் சேவை இலவசமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பிரவேசம் இலவசம்!

34வது வேதாகம கருத்தரங்கு!

காலம் -மார்ச் 13 முதல் 17ம் திகதி வரை நேரம் -காலை 9.00 - 1.00

இடம் -A.O.G. சபை, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்

For Information:- Jesus Lives Evangelical International Ministry
T.P. 2522608, Fax - 2525695, Web- jesuslivеslk.com
Jaffna Contact- Rev. Rajasooriyar 0777238300, 0779946524, 0758487994, 0755048503



## வேலைகள் செய்து கொடுக்கப்படும்

மேசன் வேலை, மாபிள்(டயல்ஸ்) வீட்டு வயறிங், பிளமிங், தச்சுவேலை, வீட்டுபெயின்டிங், ரெராசோ மாபிள் (தராசோ), வீட்டு நிலப் பொலிசிங் போன்ற அனைத்து வேலைகளும் குறித்த தவணையில் ஏற்ற வகையில், குறைந்த விலையில் செய்து தரப்படும்.

தொடர்பு:- 0770869918
(யாழ்ப்பாணம்).



## உரும்பிராய் கிட்ஸ் பார்க்
## முன்பள்ளி ஆசிரியர்கள் வெற்றிடம்

க.பொ.த(உ/த) இல் கலைப்பிரிவில் நடனம்/சங்கீதம்/நாடகமும் அரங்கியலும் குறைந்தது திறமைச் சித்தி மற்றும் A/L தராதரமுள்ள முன்பள்ளி கற்ப்பித்தல் அனுபவமுள்ளோரும் விண்ணப்பிக்கலாம்.

ஆங்கில ஆசிரியர்களுக்கும் வெற்றிடங்கள் உள்ள படியால் தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவுதிகதி:24.03.2012

தலைவர்:
உரும்பிராய் கிட்ஸ் பார்க்
ஞானவைரவர் கோயில் வீதி, உரும்பிராய்.

(15768)(6-12-14)


## மரண அறிவித்தல்



### திருமதி இராசலட்சுமி கணபதிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற உபஅதிபர் - இணுவில் இந்துக் கல்லூரி)

இணுவில் சந்தி, இணுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசலட்சுமி கணபதிப்பிள்ளை நேற்றுமுன்தினம் 15.03.2012 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், தயாளினியின் (முகாமைத்துவ உதவியாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்), அன்புத் தாயும், கணேசமூர்த்தியின் (உளமருத்துவ சமூகப் பணியாளர், கிளிநொச்சி), அன்பு மாமியும், பிரணவனின் (யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி), அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தர் - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், சுப்பிரமணியம், செல்வரத்தினம், சிவபாக்கியம் (ஆஸ்திரேலியா) மற்றும் நாகராசா (இணுவில்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16.03.2012) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் சந்தி,
இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

# உருத்திரபுரம் உழவர் வென்றது

யாழ்ப்பாணம்,மார்ச் 17
கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழக அணிக்கும் உருத்திரபுரவிளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் இடம் பெற்ற ஆட்டத்தில் இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங் கப்பட்டன.

இதில் உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## மரதன் ஓட்டம்



வடமராட்சி,மார்ச் 17
கோப்பாய் பிரதேச செயலகம் நடத்தும் மரதன் ஓட்டப் போட்டி இன்று சனிக்கிழமையும் சைக்கிளோட்டப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமையும் அச்சுவேலியில் நடை பெறவுள்ளது. (த-8)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,மார்ச் 17
உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இரு பாலாருக்குமான உதைபந்தாட்டப் போட்டி இன்று காலை 8.30 மணிக்கு ஸ்கந்த வரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ம-23)

***

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடத்தும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில்,

மாலை 4 மணிக்கு
அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (ம-23)

***

யாழ்ப்பாணம்,மார்ச் 17
நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குஉட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை இடம்பெறவுள்ளன என்று விளையாட்டு உத்தியோகஸ்தர் எஸ்.பிரசன்னா தெரிவித்துள்ளார்.

***

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் கைதடி தென்.கிழக்கு சித்தி விநாயகர் விளையாட்டுக்கழகம் தென்மராட்சிப் பிரதேசத்துக்கு உட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே மின்னொளியில் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை இடம்பெறும் கால் இறுதியாட்டத்தில் கைதடி மத்தி குமாரநகர் 'ஏ' அணியை எதிர்த்து கைதடி கள்ளிநகர் துர்க்கா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ம-23)


## அரையிறுதி ஆட்டம் இன்று

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் ஆதரவுடன் சிங்கர் வெற்றிக் கிண்ணத்துக்கான யாழ்.வலயத்துக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் அரை இறுதியாட்டங்கள் இன்று சனிக்கிழமைமாலை3மணிக்கு நல்லூர் நாயன் மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

முதலாவது அரை இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்தியை எதிர்த்து கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகம் மோதுகின்றது. இரண்டாவது அரை இறு தியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் எதிர் புத்தூர் வளர்மதி மோதுகின்றது.

அரை இறுதியாட்டங்களில் வெற்றிபெறும் அணி கள் இரவு 7 மணியளவில் இறுதியாட்டத்தில் மோதவுள்ளன. (த-23)

# உதைபந்தாட்ட வளர்ச்சிக்கு சேவையாற்றியோர் கௌரவிப்பு



யாழ்ப்பாணம்,மார்ச் 17
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் வருடாந்தம் உதைபந்தாட்ட வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றியவர்களை கௌரவித்து வருகின்றது. அந்த வகையில் இந்த வருடத்துக்கான நிகழ்வு இன்று நண்பகல் 12 மணிக்கு இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த முடியப்பு பிரான்சிஸ் உதைபந்தாட்ட வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றியமைக்கு விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்.

1967 ஆம் ஆண்டு யாழ். உதைபந்தாட்ட லீக்கில் நிர்வாக சபை உறுப்பினராகத் தெரிவாகி தனது சேவையைத் தொடங்கினார்.

1973 ஆம் ஆண்டு யாழ். உதைபந்தாட்ட லீக்கின் உதவிச் செயலாளராகவும் 1997 ஆம் ஆண்டு தொடக்கம் 2005 ஆம் ஆண்டு வரை யாழ். உதைபந்தாட்ட லீக் இன் செயலாளராகவும் 2006 ஆம் ஆண்டு வரை மீண்டும் பொருளாளராகவும் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டுவரை மீண்டும் செயலாளராகவும், 1993 ஆம் ஆண்டு தொடக்கம் 2000 ஆம் ஆண்டு வரை யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் செயலாளராகவும், 2010 ஆம் ஆண்டு மீண்டும் செயலாளராகவும் கடமையாற்றினார்.

2002 ஆம் ஆண்டு மலேசியாவில் உதைபந் தாட்ட நிர்வக பயிற்சி பெற்றவர்.

இந்த விருது 2001 ஆம் ஆண்டு பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் முன்னாள் உறுப்பினர் அமரர் இரத்தின சிங்கத்துக்கும் யாழ். உதைபந்தாட்ட லீக்கைச் சேர்ந்த எஸ்.அன்ரனிப்பிள் ளைக்கும் வழங்கப்பட்டன. 2004 ஆம் ஆண்டு அமரர் கப்டன் டி.எ.எம்.குணசிங்கத்துக்கு வழங்கப்பட்டது. (ம-23)

## தேசிய அணியில் யாழ். வீராங்கனை



இலங்கைத் தேசிய பெண்கள் உதைபந்தாட்ட அணியில் முதற் தடவையாக யாழ். மாவட்டத்தில் இருந்து மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவி சி.தாட்சாயினி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தேசிய அணிக்கு வீராங் கனைகளைத் தெரிவு செய்யும் விளையாட்டுத்துறை அமைச்சின் கிரீடா சக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பெண்களுக் கான 19 வயதுப் பிரிவு உதைபந்தாட்ட தேசிய அணிக்கு இந்த மாணவி தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-14)

# லக்கிஸ்ரார், உதயதாரகை இறுதியாட்டத்துக்குத் தெரிவு



யாழ்ப்பாணம்,மார்ச் 17
கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரை இறுதியாட்டத்தில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழகம், நாலாம் வாய்க்கால் உதயதாரகை விளையாட்டுக் கழகம் ஆகியவை வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

கடந்த வாரம் வட்டக்கச்சி இளந்தளிர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற அரை இறுதியாட்டத்தில் நாலாம் வாய்க்கால் உதயதாரகை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருவையாறு மத்திய விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் நாலாம் வாய்க்கால் உதயதாரகை விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம் பெற்ற அரை இறுதியாட்டத்தில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

இரண்டு அணியினரும் ஆட்ட நேரத்தில் எதுவித கோல்களையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் வட்டக்கச்சி லக்கி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# வவுனியா வலய பூப்பந்தாட்டம்

வவுனியா,மார்ச்17
வவுனியா வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட பூப்பந்தாட்டப் போட்டியின் பெண்கள் பிரிவில் 15 வயதுப் பிரிவில் இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியும், 19 வயதுப் பிரிவில் சைவப் பிரகாச மகளிர் கல்லூரியும் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டன.

இப்போட்டியின் இறுதியாட்டங்கள் கடந்த திங்கட்கிழமை நகரசபை ஆடுகளத்தில் இடம்பெற்றன.

15 வயதுப் பிரிவில் இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியும், அல் இக்பால் முஸ்லிம் வித்தியாலயமும் மோதின. மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம் 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. இந்தப் போட்டியில் மூன்றாமிடத்தை முஸ்லிம் மகா வித்தியாலயம் பெற்றது.

அடுத்து இடம் பெற்ற 19 வயதுப் பிரிவினர்களுக்கான போட்டியில் சைவப்பிரகாச மகளிர் கல்லூரியும், இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியும் மோதின. இதில் இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி 2:0 என்ற அடிப்படையில் வென்று சம்பியனாகியது. இந்தப் போட்டியின் மூன்றாமிடத்தை சூடு வெந்த புலவு அல் இக்பால் முஸ்லிம் வித்தியாலயம்பெற்றுக் கொண்டது.

இதேவேளை ஆண்களுக்கான போட்டியில் 15 வயதுப் பிரிவில் வுவுனியா தமிழ் வித்தியாலயமும், சூடு வெந்த புலவு அல்இக்பால் முஸ்லிம் வித்தியாலயமும், வீரபுரம் மாணிக்கவாசகர் மகா வித்தியாலயமும் முறையே முதல் மூன்று இடங்களைப் பெற் றுக் கொண்டன. அதே போல் 19 வயதுப் பிரிவுக் கான போட்டியில்சூடுவெந்த புலவு அல் இக்பால் முஸ்லிம் வித்தியாலயம், வீரபுரம் மாணிக்க வாசகர் மகா வித்தியாலயம் என்பன முறையே முதல் இரு இடங்களையும் பெற்றுக் கொண்டன. (ம-400)

# வவுனியா இந்து, மடுக்கந்த ம.வி. எல்லே போட்டியில் சம்பியன்

வவுனியா, மார்ச் 17
வவுனியா தெற்கு வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்டப் போட்டியின் எல்லே சுற்றுப் போட்டியில் ஆண்கள் பிரிவில் வவுனியா, இந்துக் கல்லூரியும், பெண்கள் பிரிவில் மடுக்கந்தை மகா வித்தியாலயமும் சம்பியனாகின.

இந்தப் போட்டிகளின் இறுதியாட்டங்கள் அண்மையில் வவுனியா நகரசபை விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றன.

ஆண்கள் பிரிவில் வவுனியா இந்துக் கல்லூரியும், கோமரசங் குளம் மகாவித்தியாலயமும் மோதின இதில் 1:0 என்ற புள்ளி அடிப்படையில் இந்துக் கல்லூரி வெற்றி பெற்று சம்பியனாகியது.

இதில் மூன்றாமிடத்தை கந்தபுரம் வாணி வித்தியாலயம் பெற்றுக் கொண்டது.

அடுத்து நடைபெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் மடுக்கந்தை மகாவித்தியாலயமும், இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியும் மோதின. இதில் மடுக்கந்தை மகாவித்தியாலயம் 1:0 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனானது. இதில் மூன்றாமிடத்தை பூவரசங்குளம் மகாவித்தியாலயம் பெற்றுக் கொண்டது.

இதே வேளை ஆண்களுக்கான வலய மட்ட மென்பந்துச் சுற்றுப் போட்டியில் கோமரசங்குளம் மகாவித்தியாலயம், நேரிய குளம் அல்அக்ஷா முஸ்லிம் வித்தியாலயம், தமிழ் மத்திய மகாவித்தியாலயம் என்பன முதல் மூன்று இடங்களையும் பெற்றுக் கொண்டன. (ம-400)

## வவுனியாவில் கிரிக்கெட்

வவுனியா, மார்ச் 17
டயலொக் நிறுவன அனுசரணையுடன் வவுனியாப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்படும் அழைக்கப்பட்ட கழகங்களுக் கிடையிலான கடினப்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் எதிர்வரும் 19 ஆம் திகதி வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம் பெறும் ஆட்டத்தில் தமிழ் மத்திய மகா வித்தியாலயமும், விபுலாணந்தாக் கல்லூரி அணியும் மோதவுள்ளன. (ம-400)

## புதிய பாரதி கரப்பந்தாட்டத்தில் வெற்றி

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் பெண்கள் பிரிவில் மலையாள்புரம் புதிய பாரதி விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

இறுதியாட்டத்தில் மலையாள்புர புதிய பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கிருஷ்ணபுரம் விபுலாணந்த விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

மூன்று செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் மலையாள்புரம் புதிய பாரதி விளையாட்டுக் கழகம் 25:16, 25:14 என்ற செற் கணக்கில் வெற்றியீட்டியது. (ம-23)

# இ.போ.ச. ஊழியர் வேலை நிறுத்தம் வடக்கில் நேற்று பயணிகள் சிரமம்

## இன்று வழமைபோல் பஸ் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 17

சம்பள உயர்வு கோரி நாடு முழுவதும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சாரதிகள், நடத்துநர்கள் நேற்று மேற்கொண்ட பணிப் புறக்கணிப்பு உரிய அதிகாரிகளின் சம்பள உயர்வுக்கான வாக்குறுதிகளை அடுத்து நேற்று மாலையுடன் நிறைவுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபையினர் தமக்கான சம்பளப் பிரச்சினைகள் உள்ளிட்ட ஐந்து முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து நேற்று நாடு முழுவதும் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக நாடு முழுவதும் பயணிகள் போக்குவரத்து சேவைகள் ஸ்தம்பிதம் அடைந்தன.

குறிப்பாக வடபகுதியில் இ.போ.சவின் போக்குவரத்துச் சேவை முற்றாக பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள் உள்ளிட்ட பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

தனியார் பஸ் சேவைகள் அதிகரிக்கப்பட்ட போதும் அது போதுமானதாக இருக்கவில்லை. இதனால் நேற்றைய தினம் மக்கள் தமது நாளாந்தக் கடமைகளை எதிர்நோக்குவதில் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது.

இ.போ. சபை ஊழியர்கள் முன்வைத்த ஐந்து கோரிக்கைகளும் வருமாறு:

* சபை ஊழியர்களுக்கான அடிப்படைச் சம்பளம் இப்போது வழங்கப்படுவதில் இருந்து அதிகரிக்கப்பட வேண்டும்.
* 1958 ஆம் ஆண்டு ஊழியர் சேமலாப நிதிக்கு 30 வீத வட்டி வழங்கப்பட்டது. ஆனால் அது இப்போது 8 வீதமாக குறைக்கப்பட்டுள்ளது. எனவே சேமலாப நிதியை எமது கைகளில் தர வேண்டும் அல்லது அதற்கு 30 வீத வட்டி வழங்கப்பட வேண்டும். அத்துடன் நிறுத்தப்பட்ட வங்கிக்கடன் நடைமுறையும் மீளச் செயற்படுத்த வேண்டும்.
* 1958ஆம்ஆண்டுதொடக்கம் மாதாந்தச் சம்பளம் 8 ஆம் திகதி வழங்கப்பட்டு வந்தது. அது இப்போது 20 ஆம் திகதி வழங்கப்படுகின்றது. எனவே சம்பளத்தை பழையபடி 8 ஆம் திகதியே வழங்க வேண்டும்.
* ஊழியர்களுக்கு 5 வருடங்களாக வழங்கப்படாமல் நிலுவையில் உள்ள சம்பளக் கொடுப்பனவு மீதியை வழங்க வேண்டும்.




வெறிச்சோடிய நிலையில் யாழ். பஸ் நிலையம்

* ஊழியர்களுக்கான சேமலாபநிதி 14 மாதங்களாக உரிய இடத்துக்கு அனுப்பப்படாதுள்ளது. அது உடனடியாக அனுப்பப்படவேண்டும் என அந்தக் கோரிக்கைகள் அமைந்திருந்தன.

இ.போ.சபையின் புறக்கணிப்பை அடுத்து கொழும்பில் நேற்று மாலை அவசரக் கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது இதன்போது சபையினரின் முக்கியமான கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதை அடுத்து போராட்டம் நேற்று மாலையுடன் முடிவுக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக அடிப்படைச் சம்பளத்தில் 3 ஆயிரம் ரூபா அதிகரிக்கப்பட்டு 11,730 ரூபாவாக வழங்கப்படுமெனவும், மாதாந்தச் சம்பளத்தை குறிக்கப்பட்ட திகதியில் வழங்குவது போன்ற உறுதிமொழிகள் வழங்கப்பட்டதை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதன் படி இன்று போக்குவரத்துச் சேவைகள் வழமை போன்று இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

நேற்றைய இ.போ. சபை ஊழியரின் வேலை நிறுத்தத்தை அடுத்து அவசரமாக நேற்று மாலை கொழும்பில் போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம கூட்டம் ஒன்றை கூட்டினார். அதில் நாடு முழுவதும் இருந்து வந்த போக்குவரத்துச் சபையின் பிரதம முகாமையாளர்கள் கலந்து கொண்டனர்.

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பிரதம முகாமையாளர் த.கணேசபிள்ளையும் பங்குபற்றி இருந்தார்.

நேற்றைய அமைச்சருடனான சந்திப்பை அடுத்து இணக்கமான முடிவு எட்டப்பட்டது. அதைத் தொடர்ந்து நாடு முழுவதும் இ.போ.ச. ஊழியர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டனர் என்று த.கணேசபிள்ளை உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் கொழும்பில் இருந்து வந்து கொண்டிருந்த சமயம் 'உதயனுக்'குக் கூறியதாவது:-

இந்தக் கூட்டத்தில் அடிப்படை சம்பளத்தை அதிகரிக்குமாறு தொழிற்சங்க வாதிகளால் விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து அடிப்படைச் சம்பளம் 3300 ரூபாவால் அதிகரிக்க இணக்கம் ஏற்பட்டது. அத்துடன் சம்பளத்தை உரிய நேரத்தில் வழங்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. எதிர்வரும் ஏப்ரல் 8ஆம் திகதிக்கு நடைமுறைக்கு வரும் வகையில் இது செயற்படுத்தப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

இதனை அடுத்து நேற்றிரவு முதல் நாடுமுழுவதும் வழமைபோல் இ.போ.ச. பஸ்கள் சேவையில் ஈடுபட்டுவருகின்றன. வட பிராந்தியத்திலுள்ள 7 டிப்போக்களிலும் இன்று வழமை நிலை ஏற்படும். நேற்றிரவு தூர இடங்களுக்கான சேவைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன - என்றார்.

கோண்டாவிலில் டிப்போவுடன் நேற்றிரவு தொடர்பு கொண்டு கேட்டபோது:-

யாழ். பஸ் நிலையத்தில் இருந்து இரவு 7.30 மணிக்கு அக்கரைப்பற்று பஸ் புறப்பட்டது. இரவு 8 மணிக்கு கொழும்புக்கான பஸ்ஸும் சேவையில் ஈடுபட்டது.

இன்று காலை அனைத்து சேவைகளும் வழமைபோல் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-10-15-3)


## மரண அறிவித்தல்



### திருமதி இலங்கேஸ்வரி தங்கராசா

பனிப்புலம் பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் மோதரை கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இலங்கேஸ்வரி தங்கராசா (14.03.2012) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தங்கராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கனகசபை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - விசயம்மா தம்பதியரின் மருமகளும் பாலகுமார், பாலரமணி, ஜெயக்குமார், ஜெகதீஸ்வரி, ஜெகதீஸ்வரன், ஜெயபாலன் ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (18.03.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, தகனக்கிரியைக்காக மாதம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.தங்கராசா
(இளைப்பாறிய இராணுவ அதிகாரி, அகில இலங்கை சமாதான நீதிவான்)

46/1 மோதர வீதி,
கொழும்பு-15.

## பெண் விற்பனையாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் புடவை நிறுவனத்துக்கு பெண் விற்பனையாளர் தேவை.

தொடர்பு:-0772850753

## வீடு வாடகைக்கு

பழைய பூங்கா வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:-0773762771

## மாபிள் பதித்தல்

மத்திய கிழக்கு நாட்டில் 10 வருட முன் அனுபவம் உள்ளவர்களால் குறுகிய காலத்தில் சிறந்த முறையில் மாபிள் பதித்து கொடுக்கப்படும்.

தொடர்புக்கு:-
பாபு தொ.பே. 0773824871,0776522655

## தேவை

கண்டுக்குளி, கொழும்புத்துறை பிரதான வீதி யில் அறை (றூம்) வாடகைக்குத் தேவை 0774745298.

## தொண்டைமானாறு வெளிக்கள நிலையம்

FWC

### ஆண்டுப் பொதுக்கூட்டத் தீர்மானங்கள்

நடைபெறவிருக்கும், தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்கு தீர்மானங்களை முன்மொழிந்து அனுப்ப விரும்புபவர்கள் அவற்றை 31.03.2012 ஆம் நாள் சனிக்கிழமைக்கு முன் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

எம். எம். அல்போன்ஸ், செயலாளர்,
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம்.
சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.

தலைவர் — செயலாளர், தொண்டைமானாறு வெளிக்கள நிலையம்.

## வீடு வாடகைக்கு உண்டு

கொக்குவில் கிழக்கு, ஆடியபாதம் வீதி, கருவேலடி ஒழுங்கையில் 5ஆம் இலக்க வீடு 5 அறைகளுடன் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
0112337991,0778650672

## மாதகல் இளைஞர் சங்க சனசமூக நிலைய பவள விழாவை முன்னிட்டு நடத்தும் மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி

இடம் : வட்டுக்கோட்டை சவாரித்திடல்
காலம் : 18.03.2012ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
பி.ப. ஒரு மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பவள விழாக் குழு.

## Immediate Vacancy

Instructor ( Diploma in IT OR Other Related Qualification

*.Walk in interview (on sunday 18.03.2012)
*.Forward your CV on or before 21.03.2012

Eiranstion software Development Company
166/3, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
T.P NO : 021 2219230 email Info etransition @ gmail.com

## மரண அறிவித்தல்

### திருமதி கமலாம்பிகை இரத்தினம்



வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும், புதுவீதி, கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் கமலாம்பிகை நேற்று (16. 03. 2012) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்பு மனைவியும் இரட்ணராஜா, காலஞ்சென்ற இந்திரராஜா புஸ்பராணி, காலஞ்சென்ற ராஜராஜேஸ்வரி மற்றும் மகேஸ்வரி, மகேந்திரராஜா, தேவி நாகேஸ்வரி, சாந்தாதேவி ஆகியோரின் அன்புத்தாயும் புஸ்பகுமாரி, காலஞ்சென்ற ரஞ்சிதமலர், பாலகிருஸ்ணன் , யோகநாதன், காலஞ்சென்ற சிவராஜா மற்றும் ராஜன், கோபாலகிருஸ்ணன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.03.2012) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப.10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
நி.சுதாகரன் (பேரன்)

புது வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(15780) (13-14)

# பங்களாதேஷ் கொடுத்தது அதிர்ச்சி வைத்தியம்

## "இந்திய அணியின் பந்துகளை துவம்சம் செய்து இமாலய இலக்கைத் தாண்டினர் வங்கப் புலிகள்"



இந்திய அணி நிர்ணயித்த இமாலய இலக்கை விரட்டியடித்த வங்கப் புலிகள் ஆசியக் கிண்ணத் தொடரில் முதலாவது வெற்றியைப் பதிவு செய்தது. இந்திய அணி சொதப்பலாக பந்து வீச இளம் வங்கப்புலிப் படையணி வெளுத்துக்கட்டி வெற்றியை தனதாக்கியது. நேற்றைய தினம் பங்களாதேஷ் அணி தனது மிகச் சிறந்த இரண்டாவது 'சேஸிங்கை' பதிவு செய்தது.

ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடர் பங்களாதேஷில் இடம்பெற்று வருகின்றது. இதில் பங்களாதேஷ், இந்திய அணிகள் நேற்று மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

அதனடிப்படையில் கம்பீர், சச்சின் ஜோடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களம் புகுந்தது. ஆரம்பத்திலேயே மெதுவாக ஆட ஆரம்பித்த இந்திய அணி சொற்ப ஓட்டங்களிலேயே கம்பீரை பறிகொடுத்தது. அதன் பின்னர் இணைந்த ஹோக்லியும் மெதுவாகவே தொடர்ந்தார். சச்சினும், ஹோக்லியும் இணைந்து ஆரம்ப இழப்பை சரிகட்டும் விதத்தில் இணைப்பாட்டத்தை பகிர்ந்து கொண்டனர். ஹோக்லி 63 பந்துகளில் தனது 21 ஆவது அரைச்சதத்தை கடந்தார். மிகச்சிறப்பாக 148 ஓட்டங்கள் இரண்டாவது இலக்குக்கு பகிரப்பட்ட நிலையில் ஹோக்லி துடுப்பாட்ட பவர்பிளேயின் முதலாவது பந்து பரிமாற்றத்திலேயே ஆட்டமிழந்தர்.

தொடர்ந்து நுழைந்த ரெய்னா அமர்முடுகலுடன் சென்று கொண்டிருந்த இந்தியாவின் ஓட்ட வேகத்தை ஆர்முடுகலாக்கினார். இந்திய அணி அடக்கி வாசித்தமைக்கு அமைவாக வெளுத்து வாங்கியது. மறுமுனையில் சச்சின் ஆமை வேகத்தில் ஊர்ந்தாலும் தனது சதம் அடிப்பதில் குறியாயிருந்து அதனை நிறைவேற்றினார். சதத்தில் சதம் அடித்த போது ரசிகர்கள் ஆரவாரித்த போதும் சச்சின் அமைதியாக கடவுளுக்கு நன்றி சொல்லிவிட்டு துடுப்பாட்டத்தை தொடர்ந்தார். 35 பந்துகளில் ரெய்னா தனது 21 ஆவது அரைச்சதத்தை அடித்தார்.

அதிரடியில் தொடர்ந்த இந்தியாவுக்கு 47 ஆவது பந்து பரிமாற்றம் சறுக்கலாக அமைந்தது. சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த ரெய்னாவும், சச்சினும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இருப்பினும் பின்வரிசையில் டோனி அதிரடி வேட்டை நடத்த இந்திய அணி இறுதியில் 5 இலக்குகளை இழந்து 289 ஓட்டங்களைப் பெற்றது.

இமாலய இலக்கை விரட்டத் தொடங்கிய பங்களாதேஷுக்கு ஆரம்பத்திலேயே அடி விழுந்தது. இருப்பினும் சுதாகரித்துக் கொண்ட ரமிம் இக்பால், ஜகருல் ஸ்லாம் இருவரும் இரண்டாவது இலக்குக்கு மிகச் சிறந்த இணைப்பாட்டத்தை வழங்கினர். ரமிம் 77 பந்துகளில் தனது 21 ஆவது அரைச்சதத்தையும், ஸ்லாம் 64 பந்துகளில் தனது முதலாவது அரைச்சதத்தையும் பூர்த்தி செய்தனர். இருவரிடையேயும் 113 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்ட நிலையில் ஸ்லாம் வெளியேறினார்.

தொடர்ந்து நுழைந்த நஷிர் ஹுசைஸன், பிரவீன் குமார் வீசிய 33.1 பந்தில் கொடுத்த பிடியெடுப்பை டோனி தவறவிட அது நான்கு ஓட்டங்களானது. அதனால் ஏற்பட்ட பின்விளைவுகளை டோனி இப்போது உணர்ந்திருப்பார். இருப்பினும் அந்த பந்து பரிமாற்றத்திலேயே சிறப்பாக ஆடிய ரமிம் ஆட்டமிழந்தார்.

அதன் பின்னர் சகிப் அல் ஹசனும் களமிறங்க துடுப்பாட்ட பவர்பிளேயும் எடுக்கப்பட சரியாயிருந்தது. மெதுவாக சென்ற பங்களாதேஷ் புயல் அடித்ததைப் போன்று சுழன்றடித்து ஓட்டங்களைக் குவித்தது. இந்தியப் பந்து வீச்சாளர்கள் துடுப்பாட்ட பவர்பிளேயில் ஓட்டங்களை வாரியிறைத்தனர். 35 முதல் 40 பந்து பரிமாற்றங்களில் பங்களாதேஷ் அணி 46 ஓட்டங்களைப் பெற்று வெற்றியை நோக்கிப் பயணமானது. வெற்றிக்கு 50 பந்துகளில் 66 ஓட்டங்கள் தேவையான நிலையில் அதிரடியில் கலக்கிய சகிப் ஆட்டமிழந்தார். அஸ்வின் வீசிய பந்தில் டோனியால் ஸ்டம்ஸ் செய்யப்பட்டு ஆட்டமிழப்புச் செய்யப்பட்டார். இருப்பினும் அவரது கால் கிறீஸில் அரைவாசிப் பகுதியை தொட்ட வண்ணமேயிருந்தது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் துடுப்பாட்ட வீரருக்கு சாதகமாகவே தீர்ப்பளிக்கப்படும். ஆனால் அதனையும் மீறி சகிப் ஆட்டமிழந்ததாக அறிவிக்கப்பட்டது.

சகிப் ஆட்டமிழந்து வெளியேறினாலும் மறுமுனையில் ஹுஸைன் 53 பந்துகளில் 3 ஆவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். சகிப்புக்காக களமிறங்கிய அணித்தலைவர் ரஹிம் ஆரம்பத்தில் நிதானமாக ஆடினார். 18 பந்துகளில் 33 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் பதான் பந்து வீசினார். கடுகு சிறிதென்றாலும் காரம் பெரிது போல ரஹிம் உருவத்தில் சின்னவராயினும் அதிரடியில் போட்டுத் தாக்கினார். பதானின் அந்தப் பந்து பரிமாற்றத்தில் இரண்டு ஆறு ஓட்டங்களுடன் 17 ஓட்டங்கள் பெறப்பட வெற்றி பங்களாதேஷ் பக்கமானது. அடுத்த பந்து பரிமாற்றத்தை பிரவீன் வீச ரஹிம் மீண்டும் ருத்திர தாண்டவமாடி நான்கு, ஆறு என்று விளாச பங்களாதேஷின் சாதனை வெற்றி உறுதியானது.

இறுதியில் 49.2 பந்துகளில் 5 இலக்குகளை இழந்து 293 ஓட்டங்களைப் பெற்று இந்திய அணியை 5 இலக்குகளால் பங்களாதேஷ் தோற்கடித்தது. ஆட்டநாயகனாக பங்களாதேஷின் சகிப் அல் ஹசன் தெரிவானார். (5)

**இந்தியா எதிர் பங்களாதேஷ்** மிர்பூர் மைதானம்

இந்தியா 289/5 (50) — பங்களாதேஷ் 293/5 (49.2)

பங்களாதேஷ் 5 இலக்குகளால் வெற்றி — ஆட்டநாயகன்: சகிப் அல் ஹசன்

பாகிஸ்தான்

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| கம்பீர் | c சகிபுள் ஸ்லாம் | 11 | 16 | 1 | 0 |
| டெண்டுல்கர் | c ரஹிம் b மோர்ரஷா | 114 | 147 | 12 | 1 |
| ஹோக்லி | c அப்துல் ரஷாக் | 66 | 82 | 5 | 0 |
| ரெய்னா | c ரமிம் b மோர்ரஷா | 51 | 38 | 5 | 2 |
| டோனி | (ஆட்டமிழக்காமல்) | 21 | 11 | 2 | 0 |
| ரோகித் சர்மா | run out (நஷிர் ஹுசைன்) | 4 | 6 | 0 | 0 |
| ஜடேஜா | (ஆட்டமிழக்காமல்) | 1 | 2 | 0 | 0 |

உதிரிகள் 18 — இலக்கு இழப்பு: 1-25, 2-173, 3-259, 4-259, 5-267.
மொத்த ஓட்டங்கள் 289

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| மோர்ரஷா | 10 | 1 | 44 | 2 |
| சகிபுள் | 5 | 0 | 24 | 1 |
| சதாட் ஹுசைன் | 10 | 0 | 81 | 0 |
| அல் ஹசன் | 10 | 0 | 63 | 0 |
| அப்துர் ரஷாக் | 10 | 0 | 41 | 1 |
| மகமதுல்லா | 4 | 0 | 24 | 0 |
| நஷிர் ஹுஸைசன் | 1 | 0 | 6 | 0 |

பங்களாதேஷ்

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| ரமிம் இக்பால் | c ஜடேஜா b பி.குமார் | 70 | 99 | 6 | 0 |
| நஷீ இக்பால் | c சர்மா b பி.குமார் | 5 | 15 | 0 | 0 |
| ஜகருல் ஸ்லாம் | c சர்மா b ஜடேஜா | 53 | 68 | 4 | 1 |
| நஷிர் ஹுசைன் | c ரெய்னா b பி.குமார் | 54 | 58 | 5 | 0 |
| நகிப் அல் ஹசன் | st டோனி b அஸ்வின் | 49 | 31 | 5 | 2 |
| ரஹிம் | (ஆட்டமிழக்காமல்) | 46 | 25 | 3 | 3 |
| மகமதுல்லா | (ஆட்டமிழக்காமல்) | 4 | 2 | 1 | 0 |

உதிரிகள் 12 — இலக்கு இழப்பு: 1-15, 2-128, 3-156, 4-224, 5-288.
மொத்த ஓட்டங்கள் 293

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| பி.குமார் | 10 | 0 | 56 | 3 |
| பதான் | 9 | 0 | 61 | 0 |
| டிண்டா | 5.2 | 1 | 38 | 0 |
| ரெய்னா | 7 | 1 | 30 | 0 |
| ரோகித் சர்மா | 2 | 0 | 13 | 0 |
| அஸ்வின் | 10 | 0 | 56 | 1 |
| ஜடேஜா | 6 | 0 | 32 | 1 |




## வாய்த்தது பங்களாதேஷ் அடித்தார் சச்சின் சதம்

கடந்த ஒரு வருடமாக சதத்தில் சதம் அடிப்பதில் இழுபறிக்குள்ளாகிக் கொண்டிருந்த இந்தியாவின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் நேற்றைய தினம், தரவரிசையில் 9 ஆவது இடத்திலிருக்கும் பங்களாதேஷ் அணிக்கு எதிராக தனது 'சாதனை' சதத்தை பூர்த்தி செய்தார்.

கிரிக்கெட் உலகின் நட்சத்திர துடுப்பாட்டக்காரர் சச்சின் டெண்டுல்கர் 2011 உலகக் கிண்ணத் தொடரின் போது இங்கிலாந்திற்கு எதிரான ஆட்டத்தில் 120 ஓட்டங்கள் எடுத்து தனது 98 ஆவது சதத்தை நிறைவு செய்தார். அதனையடுத்து மார்ச் 12, 2011 அன்று தென்னாபிரிக்க அணிக்கெதிரான ஆட்டத்தில் 111 ஓட்டங்கள் எடுத்து தனது 99 ஆவது சதத்தை பூர்த்தி செய்தார்.






அதன் பிறகு பலமான அணிகளான இங்கிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள், ஆஸ்திரேலியா, இலங்கை அணிகளுக்கு எதிராக கடந்த ஒரு வருடமாக ஆட்டங்களில் பங்கேற்ற போதும் சதமடிக்க முடியாமல் திணறினார். இதனால் மூத்த வீரர் என்ற அந்தஸ்தில் சச்சினை கருதாமல் பல்வேறு வகையான விமர்சனங்கள் அவர் மீது குவிந்தன.

இவ்வாறான நிலையில் ஆசியக் கிண்ணத் தொடரில் விளையாடிய சச்சின் இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் 6 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்த சச்சின் பங்களாதேஷுக்கு எதிரான நேற்றைய ஆட்டத்தில் தனது 100 ஆவது சதத்தை அடித்து உலக சாதனை படைத்தார்.

சர்வதேச ஒருநாள் அரங்கில் இது அவருக்கு 49 ஆவது சதமாகும். 138 பந்துகளை சந்தித்து 10 நான்கு ஓட்டங்கள், 1 ஆறு ஓட்டம் உட்பட 100 ஓட்டங்கள் அடித்து இந்தச் சாதனையைச் சச்சின் படைத்துள்ளார்.

தனது 99 ஆவது சதத்திற்குப் பின்பு சரியாய் 370 (ஒரு வருடம், நான்கு நாள்கள்) நாள்கள் கழித்து தனது 100 ஆவது சதத்தை பூர்த்தி செய்துள்ளார். நேற்றைய ஆட்டம் உட்பட தற்போது வரை 461 ஒரு நாள் ஆட்டங்களில் விளையாடி 49 சதம், 95 அரை சதம் விளாசியிருக்கிறார். 188 டெஸ்ட் போட்டியில் விளையாடி 51 சதம், 65 அரை சதம் விளாசி சச்சின் டெண்டுல்கர் உலக சாதனை படைத்திருக்கிறார். (5)

# தடுமாறும் நியூஸிலாந்து

நியூஸிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் இடம்பெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாம் நாள் ஆட்ட நிறைவில் 4 இலக்குகளை இழந்து 65 ஓட்டங்களைப் பெற்று நியுஸிலாந்து அணி தடுமாறி வருகிறது. 6 இலக்குகள் கைவசம் உள்ள நிலையில் நியுஸிலாந்து அணி 4 ஓட்டங்களால் பின்னிலை வகிக்கிறது.

69 ஓட்டங்கள் பின்னிலையில் காணப்பட்ட நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த நியுசிலாந்து அணி முதல் மூன்று இலக்குகளையும் 7 ஓட்டங்களுக்கு இழந்தது. ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் றொப் நிக்கல் ஓர் ஓட்டத்துடனும், பிரன்டன் மக்கலம் 5 ஓட்டங்களுடனும், மார்ட்டின் குப்ரில் ஓர் ஓட்டத்துடனும் ஆட்டமிழந்தனர்.

அதன் பின்னர் ஜோடி சேர்ந்த கேன் வில்லியம்ஸன், அணித் தலைவர் ரெய்லர் ஜோடி, பொறுமையாக ஆடி 57 ஓட்டங்களை நான்காவது இலக்குக்காக இணைப்பாட்டமாகப் பகிர்ந்தது. எனினும் நேற்றைய நாள் இறுதிநேரத்தில் ரெய்லர் ஆட்டமிழக்க நியுசிலாந்து அணி கடும் அழுத்தத்திற்குள்ளாகியுள்ளது. துடுப்பாட்டத்தில் நியுசிலாந்து அணியின் இளம் வீரர் கேன் வில்லியம்ஸன் ஆடுகளத்தில் 41 ஓட்டங்களோடும், டானியல் விட்டோரி ஓட்டமெதனையும் பெறாமலும் ஆட்டமிழக்காது உள்ளனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக மிகச்சிறப்பாகப் பந்துவீசிய ஸ்ரெய், வேர்ணன் பிலாந்தர் இருவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

முன்னதாக, 2 இலக்குகளை இழந்து 27 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய இரண்டாவது நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த தென்னாபிரிக்க அணி தொடர்ச்சியாக இலக்குகளை இழந்து தடுமாறியது. ஒரு கட்டத்தில் 6 இலக்குகளை இழந்து 88 ஓட்டங்களையும், 7 இலக்குகளை இழந்து 151 ஓட்டங்களையும் பெற்றுத் தடுமாறிய தென்னாபிரிக்க அணி, ஏபி.டி.வில்லியர்ஸ் மற்றும் கடைநிலைத் துடுப்பாட்ட வீரர்களின் சிறப்பான துடுப்பாட்டம் காரணமாக 253 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாகச் சிறப்பாக ஆடிய ஏபி.டி.வில்லியர்ஸ் 83 ஓட்டங்களையும், மோர்னி மோக்கல் ஆட்டமிழக்காது 35 ஓட்டங்களையும், அல்விரோ பீற்றர்சன் 29 ஓட்டங்களையும், மார்க் பௌச்சர் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நியூஸிலாந்து அணி சார்பாக மிகச்சிறப்பாகப் பந்துவீசிய மார்க் கிலெஸ்பி 5 இலக்குகளையும், கிறிஸ் மார்ட்டின் 2 இலக்குகளையும், டக் பிரேஸ்வெல், டானியல் விட்டோரி, கேன் வில்லியம்ஸன் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். முதலில் துடுப்பெடுத்தாடிய நியுஸிலாந்து அணி 185 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்ததன் காரணமாக தென்னாபிரிக்க அணி இந்த ஆட்டத்தில் தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. ஆட்டத்தின் மூன்றாம் நாள் ஆட்டம் இன்று இடம்பெறவுள்ளது.' (5)

## வழங்கப்பட்டது சம்பளம்

இலங்கைக் கிரிக்கெட் அணியின் வீரர்களுக்கு வழங்கப்பட வேண்டியிருந்த சம்பள நிலுவைகள் அனைத்தும் வழங்கிவைக்கப்பட்டுள்ளதாக இலங்கைக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. நீண்டகாலமாக இழுபறிக்குள்ளாகியிருந்த இந்த சம்பள விவகாரம், இறுதியாக ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதுகுறித்து இலங்கைக் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் வீரர்கள் அனைவருக்குமான சம்பள நிலுவைகள் அனைத்தும் வழங்கிவைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு கடினமான இந்தக் காலப்பகுதியில் கிரிக்கெட் சபைக்குத் தேவையான பணத்தை வழங்கிவைக்க எடுத்த முயற்சிகளுக்கும், உதவிகளுக்குமாக விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, செயலாளர் ஆகியோருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதாக கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

# தீர்வுகாணும் எண்ணம் அரசுக்கு இல்லை ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 17

''சர்வதேசத்தின் அழுத்தங்களையும் அச்சுறுத்தல்களையும் குறைப்பதற்காக அரசு செயற்படுகின்றதே தவிர, நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் எண்ணமும், தேவைப்பாடும் அதனிடம் இல்லை'' - என ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

''அமெரிக்கப் பொருட்களைத் தமது நாட்டில் தடைசெய்ய வேண்டும் என அரசின் பிரதான தேசாபிமானி கூறியுள்ளார். அமெரிக்கப் பொருள்களை நமது நாட்டில் தடைசெய்ய வேண்டுமானால், முதலில் அமெரிக்க பிரஜையாகவுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தில் உள்ளவர்களின் அமெரிக்க பிரஜாவுரிமையை நீக்கவேண்டும்'' - என ஐ.தே.கட்சியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை நாம் நடைமுறைப்படுத்துவோம் என ஜெனிவாவில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க சர்வதேசத்திடம் பகிரங்க மாகக் கூறினார். இங்கு நிமால் சிறிபால டி சில்வா நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை நாம் முழுவதுமாக ஏற்க மாட்டோம் எனக் கூறுகின்றார்.

அரச தரப்பினரிடையே இரு வேறுபட்ட கருத்துகள் காணப்படுகின்றன. நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கையில் அரசு ஆதரிக்கும், பகுதி எது? நிராகரிக்கும் பகுதி எது? - என எமக்குத் தெளிவாகக் கூறவேண்டும். அரசின் இரட்டை வேடத்தினால் எமக்கும், சர்வதேசத்திற்கும் அரசு மீதிருந்த நம்பிக்கை இல்லாது போயுள்ளது. அரசின் இந்தச் செயலினால் இன்று நாம் சர்வதேசத்திடம் நகைப்புக்குள்ளாகியுள்ளோம்.

புலிகளும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டனர் என நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அப்படியாயின், பிரபாகரனுக்கு அடுத்தபடியாக புலிகளின் தலைவராக உள்ள குமரன் பத்மநாதன் மீது ஏன் வழக்குத் தொடரவில்லை? ஏன் அவரை ஜெனிவாவில் முன்னிறுத்தவில்லை எனவும் கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

அரசின் பிரதான தேசாபிமானியாகவுள்ள விமல் வீரவன்ஸ அமெரிக்கப் பொருட்களை நாட்டில் தடை செய்யவேண்டும் எனக் கூறினார். இவ்வாறான ஒரு கருத்தைக் கூறிய இவரின் கையிலே 'அப்பிள் ஐபோட்' ஒன்று உள்ளது. அவரது மனைவி விடுமுறைக்காக டிஸ் லந்தே போவார். அவரும் லொஸ் ஏஞ்சல்ஸிற்குப் போவார்.

தனக்கு அமைச்சுப் பதவி இருக்கின்றது என்ற காரணத்தால் வாய்க்கு வந்ததெல்லாம் பேசமுடியாது. நாம் அமெரிக்காவிடமிருந்து ஒரு சதவீதமான பொருள்களையே இறக்குமதி செய்கின்றோம். ஆனால், நாம் 40 சதவீதமான பொருள்கள் ஏற்றுமதி செய்கின்றோம். விமல் வீரவன்ஸ கூறுவதுபோல அமெரிக்கப் பொருள்களைத் தடைசெய்வோமானால் நமது நாடுதான் பாரிய ஆபத்திற்கு முகங்கொடுக்க நேரிடும் - என்றார். (உ-சி)

## மரண அறிவித்தல்

### வல்லி சின்னராசா

வல்லிபுரக்குறிச்சி, புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லி சின்னராசா நேற்று (16.03.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லி - இலட்சுமி தம்பதியரின் ஏகபுதல்வனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - இளையவள் தம்பதியரின் பாசமிகு மருமகனும் புனிதவதியின் அன்புக் கணவரும் ஜெனிவா (ஆசிரியை, கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயம்), வெனிசுலா (தையல் ஆசிரியை), சதீஷா (கணினி ஆசிரியை), பிரின்ஷா (உபதபால் அதிபர், வல்லிபுரக்குறிச்சி), ரதிஷா, கபில்ராஜ், நகுல்ராஜ், வித்தியா, மயூரன் (மாணவன், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீஸ்கந்தராசா, ரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2012) சனிக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணிக்கு ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வல்லிபுரக்குறிச்சி,
புலோலி.

தகவல்:
குடும்பத்தினர்.

# சாவகச்சேரியில் இசைச்சங்கமம்

சாவகச்சேரி, மார்ச் 17

சாவகச்சேரி பிரதேச இசை ஆர்வலர்களின் ஏற்பாட்டில் இலங்கையின் பிரபல தவில் நாதஸ்வர மேதைகளின் இசைச் சங்கமம் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 4 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோயிலடியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசாரா மண்டபத்தில் நடைபெறும்.

தென்மராட்சியில் மூன்று தசாப்தத்தின் பின்னர் தலைசிறந்த இசைக் கலைஞர்களான பஞ்சாபிகேசன் நாகேந்திரன், இராமமூர்த்தி சிவகுமார், தட்சணாமூர்த்தி உதயசங்கர், கிருஸ்ணராஜா சுதாகரன், சின்னராசா சதீஸ்குமார் ஆகிய நாதஸ்வர தவில் வித்துவான்களின் இசைச் சங்கமத்தில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (வ-9)


கோடைகாலத்தில்
திருநெல்வேலி கந்தர்மடம்
அபான்ஸ் வழங்கும்
மற்றுமொரு அதிரடிச் சலுகை




A/C (வளி சீராக்கிகள்) LG, Haier, Media சகல விதமான A/C வகைகளையும் வட்டி இன்றி மாதாந்த தவணை முறையில் பெற்றுக்கொள்ளலாம்.

உங்களுக்காக 6, 12, 15, 18 மாத தவணைக் கட்டண வசதிகள்

திருநெல்வேலி கிளையில் A/C வாங்கும் வாடிக்கையாளருக்கு இலவசமாக பொருத்தித் தரப்படும்.

மாதாந்தம் 2885/= மட்டுமே

உடன் நாடுங்கள்
269, பலாலி வீதி,
கந்தர்மடம்,
திருநெல்வேலி.

021 222 0247
0774649204


## காலத்தால் மறவாத ஓராண்டு நினைவுநாள்




### அமரர் சோதிலிங்கம் இலட்சுமிகாந்தன் B.A.

(ஆசிரியர், அகில இலங்கை சமாதான நீதவான் – மண்டைதீவு)

கல்வி எனும் கடலிலே மாணவர்களின்
கலங்கரை விளக்காகி சமூக சேவையில்
சமாதான நீதிவாளராகி மேடைதனில்
அழகாக பேசுவதில் இனிமையாக
பாடுவதில் பல்துறை வல்லானாகி
இல்லறத்தில் இனிய தலைவனாகி
குலம் விளங்க வைத்த குலச் செல்வமே.
ஆறாது எம் துயர் ஆண்டுகள் பல நூறு
சென்றாலும் புன்னகை தவழும் அழகு
வதனம் கண்முன் தோன்றி
மறையுதையா. காலத்தின்
விரைவினையும் காலனின்
செயலினையும் யார்தான் தடுக்க
முடியும். பிரிவுத் துயர் தாளாது
அரற்றுகின்றோம் யாம் இப்பூவுலகில்.
ஓம் சாந்தி!

அழைப்பிதழ் கிடைக்க தவறிய உறவுகள், நண்பர்கள், அன்பர்கள் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

சோதி சுந்தரலிங்கம் B.A.J.P.
(கிராம உத்தியோகத்தர்)
திருமதி இலட்சுமிகாந்தன் B.Ed.
(உதவி அதிபர்)

தியாகி அறக்கொடை நிறுவனம்
52 ஏ, நாவலர் மண்டபம் முன்பாக,
நாவலர் வீதி.

## மரண அறிவித்தல்

### தியாகராஜாபிள்ளை ஸ்கந்தராசா



வட்டுக்கோட்டை இராசவல்வ முதலியார் வழித்தோன்றிய விசுவலிங்கம் கந்தையா தியாகராஜாபிள்ளை ஸ்கந்தராசா நேற்று (16.03.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராஜாபிள்ளை-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் ஏக புத்திரனும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கதிரவேற்பிள்ளை தம்பதியரின் மருமகனும், இளைப்பாறிய ஆசிரியை தங்கநாயகியின் (வட்டு இந்துக்கல்லூரி) கணவரும், 192F, கல்விகாரை றோட், தெஹிவளையை வசிப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற சயந்தன் மற்றும் R.சுஜித்தா (ஆசிரியை-கொ/விவேகானந்தா கல்லூரி), தியாகராஜன் (IT இன்ஜினியர் தெமட்டக்கொட) ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜகாந்தன், நிலக்சி ஆகியோரின் பாசமிகு மாமனும், மிருதிகா, அபூர்வன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2012) சனிக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரின் இல்லத்தில் (அழகதோட்ட வளவு) நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கொத்துத்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லூரி வீதி,
வட்டுக்கோட்டை.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

# இலங்கை பற்றி எரிய வேண்டுமென ஆசைப்படுகிறார் ரொபட் ஓ பிளேக்

## விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 17

இலங்கை விரைவில் பற்றி எரியவேண்டும் என்பதே ரொபட் ஓ பிளேக்கின் ஆசை என்றும் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

2013ஆம் ஆண்டு நடைபெறவுள்ள 'தேசத்துக்கு மகுடம்' என்ற கண்காட்சியில் முன்னெடுக்கப்படவேண்டிய செயற்றிட்டங்களை ஆரம்பித்துவைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

புலிப் பிரிவினைவாத சக்திகள் ஈழக் கொடியையும், அமெரிக்கக் கொடியையும் ஏந்தியே ஜெனிவாவில் ஆர்ப்பாட்டம் நடத்தின. இதிலிருந்தே ஏகாதிபத்தியவாதிகளுக்கும் பிரிவினைவாதிகளுக்குமிடையிலான உறவு என்னவென்பது மிகவும் தெளிவாகத் தென்படுகிறது.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகம் புலிகளுக்காக இலங்கைக்கு எதிராகச் சதி செய்கிறது என்பது தற்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. இலங்கையில் மீண்டும் தீவிரவாதத்தைத் தோற்றுவிப்பதற்கான தேவைப்பாடு அந்நாடுகளுக்கு உள்ளது.

புலிகளின் கோரிக்கைக்கமையவே அமெரிக்கா ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக பிரேரணையொன்றைத் தாக்கல் செய்துள்ளது. வடக்கில் இராணுவ முகாம்களை அகற்றுமாறு தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

மீண்டும் புலிகள் அமைப்பை வடக்கில் கட்டியெழுப்பும் நோக்கிலேயே ருத்திர குமாரன் உள்ளிட்ட சர்வதேச புலி வலையமைப்பினர் வடக்கில் இராணுவ முகாம்களை அகற்றுமாறு சர்வதேசத்தின் ஊடாக அழுத்தம் கொடுக்கின்றனர். வடக்கில் இராணுவத்தை அகற்றினால் மனித உரிமைகள் கட்டிக் காக்கப்படுமா என நான் அமெரிக்காவிடம் கேட்கவிரும்புகின்றேன்.

நாட்டில் ஏனைய பிரதேசங்களிலும் இராணுவ முகாம்கள் உள்ளன. அப்படியாயின், வடக்கிலிருந்து மட்டும் இராணுவ முகாம்களை அகற்றுமாறு அமெரிக்கா வலியுறுத்துவது ஏன்? ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஆட்சிக்கு அமர்த்தியது அமெரிக்க மக்கள் என்று அந்நாடு நினைத்துக் கொண்டிருக்கின்றது போலும்.

இலங்கை அரசு இவ்வாறே பயணித்தால் மீண்டும் போர் வெடிக்கும் என ரொபட் ஓ பிளேக் கூறியுள்ளார். இலங்கை பற்றி எரிவதைப் பார்ப்பதற்கு அவர் ஆசைப்படுகின்றார். அதற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலரும் உதவிசெய்கின்றனர்.

அமெரிக்காவுக்கு எதிரான செயற்பாடுகளை மக்களிடம் கொண்டு செல்வதற்கு அமைச்சரவைக் குழுவின் அனுமதி தேவையில்லை. அதனைவிட எனக்கு மக்களே பெரிது. அவர்கள்தான் எம்மைத் தேர்ந்தெடுத்தனர் - என்றார்.

(உ-சி)

# ஆபாசப் படங்களுடன் இளைஞர் கைது

கைத்தொலைபேசியில் 40 ஆபாசப் படங்களை வைத்திருந்த இளைஞர் ஒருவர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். சந்தேக நபர் யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்ட போது மூவாயிரம் ரூபா ரொக்கப்பிணையிலும், 40 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையிலும் செல்ல நீதிமன்று உத்தரவிட்டது. யாழ். அடப்பன் வீதியைச் சேர்ந்த சந்தேகநபர் 29 வயதுடையவர். இந்த வழக்கு அடுத்த மாதத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

# போரை எதிர்கொள்வதற்கு இலங்கை வெளி ஆதரவை நாடியதேயில்லை

01↘ மக்களுடன் கிளர்ந்தெழ வேண்டியது எதிர்கட்சிகளின் கடமையாகும். எதிர்கட்சிகளும் அனைத்து இலங்கையர்களும் அவர்களின் இனம், சாதி, மதம், அரசியல் என்பவற்றை மறந்துவிட்டு இத்தருணத்தில் இணைந்து ஒரே மக்களாக இப்பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டும்.

மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு வெளிநாட்டு ஆலோசனைகள் அவசியம் இல்லை. நாட்டின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான தீர்வுத் திட்டங்களை இறக்குமதி செய்யத் தேவையில்லை. இந்த நாட்டிலுள்ள பிரச்சினைகளைப் பேச்சு மூலம் முடிவுக்கு கொண்டுவர முடியும் எமது வீரம்மிக்க படையினரால் மாத்திரம் உள்நாட்டில் வகுக்கப்பட்ட இராணுவ தந்திரோபாயங்களின்படி இந்தப் போரை வென்றனர். அவர்கள் எமது தளபதிகளால் நெறிப்படுத்தப்பட்டனர். தனது சொந்த கொள்கைகள் மற்றும் செயற்திட்டங்களால் நாட்டை முன்னேற்றுவதற்கான ஆற்றலையும் வலிமையையும் அறிவையும் இலங்கை கொண்டுள்ளது'' என்றார் அவர்.

# தமிழக அழுத்தங்கள் தாக்கத்தை ஏற்படுத்தா

01↘ கொண்டுவந்துள்ள பிரேரணை குறித்து கருத்து வெளியிட்ட அவர் இது விடயம் தொடர்பில் இலங்கை அரசு இந்தியாவுடன் தொடர்புபட்டு ஆலோசனைகளை நடத்தி வருகிறது என்றும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கை விடயத்தில் இந்தியா மிகவும் பொறுப்புடன் செயற்படுமென நாம் உறுதியாக நம்புகிறோம். சரியான நேரத்தில் அவர்கள் சரியான முடிவை எடுப்பார்களென்பதுதான் எனது கருத்து. இலங்கை தொடர்பான இந்தியாவின் நிலைப்பாட்டை அமைச்சர்களான எஸ்.எம்.கிருஷ்ணா, பிரணாப் முகர்ஜி ஆகியோர் இரத்தினச்சுருக்கமாக அறிவித்தனர். அதன் உள்ளடக்கம் சில விடயங்களைக் கோடி காட்டியிருக்கிறது.

இந்தியாவுடன் இது விடயத்தில் நாம் தொடர்பில் இருக்கிறோம். அவர்களுக்கு எம்முடன் நல்ல புரிந்துணர்வும் உள்ளது. எனவே, அவர்களின் கொள்கைகளுக்கேற்ப சிறந்த முடிவை எடுப்பார்கள். தமிழ் நாட்டில் இது விடயத்தில் எழும் எதிர்ப்புகள் சில நேரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தினாலும் அது மத்திய அரசின் தீர்மானம் எடுக்கும் நிலையைப் பாதிக்காது. இந்தியா மிகவும் பொறுப்புடன் செயற்படும். -என்று குறிப்பிட்டார் இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம்.

# இலங்கையின் கொள்கை அமைதிக்கு அச்சுறுத்தல்

01↘ அச்சுறுத்தி வருகின்றன என்று அவை தெரிவித்துள்ளன.

தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளுக்குச் சிங்களப் பெரும்பான்மையின மக்களை குடியேற்றுவதன் மூலம் சிறுபான்மையினரின் குடிப்பரம்பலைச் சீர்குலைக்க இலங்கை அரசு முயற்சிப்பதாக, பிரஸல்ஸைத் தளமாகக் கொண்டு இயங்கும் நெருக்கடிகள் தொடர்பான சர்வதேசக் குழு தெரிவித்துள்ளது.

தமிழர் பகுதிகளில் ''பண்பாட்டு, பொருளாதார, குடிப்பரம்பல் துறைகளில் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தும் அரசின் கொள்கை எதிர்காலத்தில் அங்கு வன்முறைகளுக்கு வித்திடும்'' என்று குழு தெரிவித்துள்ளது.

இலங்கையில் யுத்தம் இடம்பெற்ற வடக்கு மாகாணத்தில் இராணுவ மயமாக்கல் மற்றும் சிறுபான்மை இனத் தமிழர்களுக்கு எதிரான பாகுபாடு என்பன மீண்டும் வன்முறைகளைத் தோற்றுவிக்கும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நெருக்கடிகள் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

அந்தக் குழுவின் அதிகாரி ஒருவர் மேலும் தெரிவித்ததாவது :-

தமிழர் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் சிங்கள மக்களைக் குடியேற்றுவதன் மூலம் தமிழர் பிரதேசம் என்ற ஒன்று இல்லாமல் போகிறதா எனவும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் கலாசாரம், பண்பாடு, மக்கள்தொகை மற்றும் பொருளாதாரத்தின் அடிப்படை மாற்றங்களை கொண்டு வருவதன் மூலம் இலங்கை அரசு, அங்கு வன்முறையை விதைக்கிறது. வடக்கில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களை மாற்றி அந்த இடங்களுக்குச் சிங்கள அதிகாரிகள் மற்றும் இராணுவ அதிகாரிகளை நியமித்து வருகிறது. முக்கியமாக வடக்கு- கிழக்கில் போர் நினைவுச் சின்னங்களை அழித்தல், பௌத்த விகாரைகளை அமைத்தல், மற்றும் வடக்கு- கிழக்கில் உள்ள வீதிகளுக்குச் சிங்களப் பெயர்களை வைக்கின்றது.

யுத்தம் முடிவடைந்த பின்னதான இத்தகைய செயற்பாடுகள் மீண்டும் வன்முறைக்கு இட்டுச் செல்வதாகச் சர்வதேச நெருக்கடிகள் குழு சுட்டிக் காட்டியுள்ளது. (த)

# ஆட்சி மாறினால் மட்டுமே விசாரணைகள் சாத்தியம்

01↘ றால் அதற்கு இலங்கை அரசின் ஒத்துழைப்பு கிடைக்காது என்பது தான் இப்போதுள்ள பிரச்சினை. இந்த விசாரணைகள் மூலம் அனைத்துலக நாடுகள் தன்னைக் குறிவைப்பதாக இலங்கை அரசு நம்புகிறது. அவர்களை இதில் யாரும் குறிவைக்கவில்லை.

ஆனால் அவர்களின் கடந்தகால நடவடிக்கைகள் தான் இந்த விசாரணைகள் கவனம் செலுத்தும் கருப்பொருள். எனவே அவர்கள் இந்த முயற்சிகளுக்கு, அதாவது ஒரு புதிய விசாரணைக்கு, முழுதாக ஒத்துழைக்கமாட்டார்கள்.

எனவே நாம் இந்த அரசு மாறும் வரை பொறுத்திருக்க வேண்டும். அதன் பின்னர் வரும் புதிய அரசில் இருப்பவர்கள் இதற்கு ஒத்துழைத்தால் தான் நாம் உண்மைகளை வெளிக்கொண்டு வரலாம்.

ஆட்சியில் இருக்கும் அரசு ஒத்துழைக்கவில்லை என்பதற்காக, அனைத்துலக சமூகம் அமைதியாக இருந்துவிடவில்லை.

ஐ.நா. நிபுணர்குழு இது தொடர்பாக தனது அறிக்கையைச் சமர்பித்தது. பல தன்னார்வக் குழுக்கள் அறிக்கைகளை வெளியிட்டிருக்கின்றன. அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் ஒரு அறிக்கை தந்திருக்கிறது.

சனல்-4 தொலைகாட்சியின் விவரணப்படம் கூட இதன் ஒரு அங்கம் தான். ஐ.நா. மனித உரிமைகள் பேரவை இதை ஒருமுறை ஆராய்ந்திருக்கிறது. எனவே அனைத்துலக கவனம் இதில் இருக்கிறது. இங்குள்ள பிரச்சினை என்னவென்றால் இந்தப் பிரச்சினைகள் நடந்த இடத்தில் இருக்கும் அரசு ஒத்துழைக்க மறுக்கிறது.

இது கவலையளிக்கும் ஒரு விடயம். ஆனால் அது தான் தற்போதைய யதார்த்தம்.

ஒரு இறையாண்மை பெற்ற அரசை அந்த அரசின் விருப்பத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஐ.நா வற்புறுத்த முடியாது. இலங்கை விவகாரத்தில் ஐ.நா. பாதுகாப்பு சபையில் கருத்தொற்றுமை இல்லை. ரஷ்யாவும் சீனாவும் இந்த விடயத்தில் பாதுகாப்புச் சபையை கூட்டுவதற்கு தயாராக இல்லை.

ஐ.நாவின் உறுப்பு நாடுகளிடையே கருத்தொற்றுமை இல்லாத நிலையில், ஐ.நாவால் நடவடிக்கை எடுக்க முடியாது.

பொதுமக்கள் உயிர்ச்சேதங்களைத் தவிர்க்கும் நோக்கத்தில், இலங்கை அரசை, அந்த யுத்தப்பகுதியில் கனரக போர் ஆயுதங்களை பயன்படுத்துவதை தவிர்க்குமாறு ஐ.நா வற்புறுத்திக் கொண்டிருந்தது.

இலங்கை அரசோ அந்தப் பகுதியில் சாதாரண பொதுமக்கள் கொல்லப்படவில்லை என்றே கூறிக் கொண்டிருந்தது. ஆனால் அது உண்மையல்ல.

அதேசமயம், விடுதலைப் புலிகளிடமும், சாதாரண பொதுமக்களை விடுவியுங்கள் என்று ஐ.நா. கூறிக்கொண்டிருந்தது, ஏனென்றால் அதுவும் ஒரு அடிப்படையான பிரச்சினை. சாதாரண மக்களை அவர்களின் விருப்பத்துக்கு எதிராக அங்கே பிடித்து வைக்கப்பட்டிருந்தார்கள்.

ஐ.நா. தன்னால் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்து கொண்டிருந்தது. ஆனால் ஐ.நாவிடம் ஒரு அதிசயத் தீர்வு இருந்தது என்ற கருத்து உண்மையான கருத்தல்ல. ஐ.நா. தமிழ் மக்களுக்குப் பெரிய அளவில் உதவியிருக்கிறது. ஐ.நா. தான் இலங்கை அரசிடம் பேசி, போர் நடந்த பகுதிகளிலிருந்து வெளியேறும் மக்களுக்கு நிவாரண முகாம்களை அமைக்குமாறு வலியுறுத்தியது.

அங்கே அவர்கள் சுதந்திரமாக நடமாட முடியவில்லை என்பது போன்ற பிரச்சினைகள் இருக்கத்தான் செய்தன. அந்தப் பிரச்சினைகளுக்கு ஒரு சில மாதங்களில் தீர்வு காணப்பட்டது. அவர்களில் பெரும்பாலானோர் தங்கள் வீடுகளுக்கு இப்போது திரும்பி விட்டார்கள் என்று தெரிவித்துள்ளார் ஜோன் ஹோம்ஸ்.

(த)

# யாழ். ஆஸ்பத்திரி நோயாளருக்கே வேலை நிறுத்தத்தால் அதிக பாதிப்பு

01↘ கதிரியக்கத் தொழில் நுட்பவியலாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தால் அனைத்து வைத்தியசாலைகளிலும் மருத்துவ சேவைகள் மோசமாகப் பாதிப்படைந்துள்ளன. நான்கு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

யாழ். போதனா வைத்திய சாலை மருத்துவ உதவியாளர்களும் தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருவதனால் வைத்தியசாலையில் மருந்து வழங்கும் செயற்பாடுகள் செயலிழந்ததோடு நோயாளர்கள் செய்வதறியாது திண்டாடினர்.

வைத்தியசாலையில் ஏராளமான நோயாளர்கள் நேற்று மருந்து எடுப்பதற்குக் காத்திருந்த வேளையில் மருந்து கொடுக்கப்படும் இடங்கள் மூடப்பட்டு இருந்தன. ஒரு சிலர் 12 மணிக்குப் பிறகாவது மருந்து கொடுக்கப்படும் என்ற நம்பிக்கையில் வைத்தியசாலை மருந்தகப் பகுதியில் நின்றிருந்தனர்.

மருத்துவ உதவியாளர்களின் பணிப்புறக்கணிப்புக் காரணமாக நோயாளர்கள் அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தின் ஒசுசல நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஒசுசல நிலையங்களில் அரச வைத்தியசாலைகளில் கொடுக்கப்படும் மருந்துச் சிட்டைகளுக்கு இலவசமாக மருந்துகள் வழங்கப்படவில்லை. இலவசமாக மருந்துகளை விநியோகிக்குமாறு இது வரை எந்த அறிவித்தல்களும் தமக்குக் கிடைக்கப் பெறவில்லை என ஒசுசல நிலையத்தின் ஊழியர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை, கொழும்பு உட்பட பிற பகுதிகளில் உள்ள ஒசுசலவில் வைத்தியசாலைச் சிட்டைகளுக்கு இலவசமாக மருந்துகள் வழங்கப்படுவதாகவும், அவ்வாறு மூன்று நாள்களுக்கு வழங்கப்படுகின்றன எனவும் யாழ்ப்பாணத்தில் அவ்வாறு வழங்க வேண்டுமாயின் சுகாதாரப் பணிப்பாளரின் அறிவித்தல் தமக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். இதேவேளை, அதிதீவிர மற்றும் உயிர் காப்புக்கான தீவிர சிகிச்சைகளுக்கான மருத்துவ உதவிகள் யாழ் . போதனா வைத்தியசாலையில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தொழில் வல்லுநர்கள் ஒன்றியத் தலைவர் தெரிவித்தார்.

(த-14-149)

**BIT** Call : 0776577359
ஆரம்பம்
**Semester 2, 4, 6**
BIT கல்வித்துறையில்
தொடர்ச்சியான 10 வருட
அனுபவம்
5 year past papers
Free Books / CD
100% pass rate
MIS Open Source College
Mr R.Kumaran-B.Sc.
74, சபாபதி வீதி, யாழ்ப்பாணம்-இராமநாதன் வீதியிலிருந்து 150 m

**1 ஆம் தவணைக்கான வினாத்தாள்** (நாவலர் வெளியீடு)
தரம் 1 முதல் O/L வரையான சகல பாடங்களுக்குமான வினாத்தாள்களை பெறவிரும்பும் கல்வி நிறுவனங்கள், பிரத்தியேக வகுப்புக்கள் மற்றும் பெற்றோர்கள் 18.03.2012 இற்கு முன் பதிவு செய்யவும்.
தொடர்புகளுக்கு: புதிய நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0774598440

# பணியாளர்கள் தேவை

யாழ்.நகரில் உள்ள வியாபார விற்பனை நிலையத்துக்கு கீழ் காணும் பணிநிலைகளுக்கு பணியாளர்கள் தேவை.

★ முகாமையாளர்
★ காசாளர்
★ சிட்டை எழுதுநர்
★ பணம் வசூலிப்பவர்
★ சிற்றூழியர்கள் -
(வாகனத்தில் பொருள் ஏற்றி இறக்கல்)
★ சாரதிகள்

மேற்படி பணிநிலைகளில் முன் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
விண்ணப்பிக்க விரும்புபவர்கள் விண்ணப்பிக்கும் பணிநிலையுடன் தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிட்டு கீழ்காணும் முகவரிக்கு எதிர்வரும் 25.03.2012 இற்கு முன்னர் சுயவிவரக் கோவையை அனுப்பிவைக்கவும்.

**விளம்பர இல.4236**
மே/பா உதயன், 361,கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.

**இலவச BASIC ENGLISH GRAMMAR**
அமரர் ஜோசேப் செங்கோல்ராஜா அவர்களின் முதலாம் ஆண்டு நினைவை முன்னிட்டு பல்கலைக்கழக மாணவர்களுக்கும் அலுவலர்களுக்கும் ஒரே நாளில் அடிப்படை ஆங்கில இலக்கணம் பூரணமாகவும் இலவசமாகவும் கற்பிக்கப்படும்.
ஆசிரியர் திரு. P.T. புவிதராஜா
Contact No. 0714450379/0777733404

* 24.03.2012 காலை 9.00 மணிமுதல் பி.ப. 12.30 மணி வரை பல்கலைக்கழக மாணவர்களுக்கும்
* 25.03.2012 காலை 9.00 மணிமுதல் பி.ப. 12.30 மணி வரை அலுவலகர்களுக்கும் வகுப்புகள் நடைபெறும்.

குறிப்பிட்ட எண்ணிக்கையானவர்களுக்கே இடவசதியிருப்பதால் பின்வரும் முகவரியில் முன்பதிவை மேற்கொள்ளுங்கள்
**FRANCIS TRADERS**
133/8, K.K.S. ROAD, JAFFNA

**செங்கல் விற்பனைக்கு**
அத்திவார கற்கள், 1 ½ அங்குல கருங்கல் சல்லி, 1 அங்குல கருங்கல் சல்லி, 3/4 அங்குல கருங்கல் சல்லி, ½ அங்குல கருங்கல் சல்லி,
சல்லி கற்கள்
நிலப்பதிப்புக் கற்கள்
பல வடிவங்களில் பல்வேறு அளவுகளில் நிலப்பதிப்புக் கற்கள் மற்றும் பூகற்கள் (Grill) விற்பனைக்கு உண்டு,
யாழ் மற்றும் வன்னி பிரதேசங்களுக்கு விநியோகம் செய்யப்படும்
**பிரணவன் என்ரபிறைசஸ்**
பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
077 3818799 (சங்கிலியன் சிலைக்கு முன்)

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
அனைத்துப் பிரிவுகளுக்குமான
புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

| Batch I: 19-03-2012 | Batch II: 21-03-2012 | Batch III : 23-03-2012 |
|---|---|---|
| 09.00 - 12.00 | 03.00 - 5.00 | 09.00 - 12.00 |

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
**Quick Learning Course** 1 ½ Months
**(Spoken English with Grammar)**
**Diploma In English** 2 ½ Months
✳ எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
✳ O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
✳ Excellent Teachers' Panel & Individual Attention

**எமது கல்லூரியினால் நடாத்தப்படும் சர்வதேசப் பரீட்சைகள்**
**A1 Exam - Sponsor /Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
◈ U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
◈ எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
◈ சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
◈ நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
◈ ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் IELTS - 4.5 இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**IELTS (Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது)**
We guarantee minimum band 5.0 Upwards 2 ½ Months

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777-585913, 0777-222422, 071-4299935, 0777-739074

# மூன்றாண்டு நினைவலைகள்



## அகிலநாதன் வேணுஷன்

**மலர்வு:- 10.09.2001 உதிர்வு:- 17.03.2009**



எம்வாழ்வில் தீ மூண்டு
மூன்று ஆண்டு ஆனதுவோ
நிலவை வான் இழந்து
சோகமேகம் சூழ்ந்ததுவோ
ஆவர் அறுந்து மரமாக
எம்மை தவிக்க வைத்து விட்டு
வேற்றுக்கிரகம் சென்றாயா?
போர் தந்த வடுவாக
எம் சிறகுகள் உடைந்துவிட
கிழக்கின் கதிரவனாய் உதிப்பாயா
வேணுஷா என்று சொல்லி
விம்மி விம்மி அழுகின்றன
பல விழிகள்
உன்னை எழுதி பெருமைப்படுகின்றன
பல மொழிகள்
மூன்று ஆண்டு என்ன
மூவாயிரம் ஆண்டு ஆனாலும்
அணையாது எம் நெஞ்சில்
உன் நினைவுத் தீபம்

த.மு:- த.அகிலன்
இல.759, யோகபுரம் மத்தி, மல்லாவி.
நி.மு:- 9 ஆம் வட்டாரம்,
சரவணை கிழக்கு, வேலணை.

நீங்கா நினைவுடன்:-
உன் அன்பு அப்பா, அம்மா,
அண்ணா, தம்பி.

(சி/9176)(2-6-7)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.